# Scriptural Organization Of Churches Of Christ

By

Jim Massey

Translated by

E. A. Arumugam

Dindigul

Published by

WORLD LITERATURE PUBLICATIONS

Church of Christ

54, Ram Nagar

Dindigul - 624005

# கிறிஸ்துவின் சபையின் வசன ரீதியான ஆளுகை அமைப்பு

எழுதியவர்
ஜிம் மாசே

தமிழாக்கம்
E.A. ஆறுமுகம்
திண்டுக்கல்

வெளியீடு
உலக இலக்கிய பதிப்பகம்
கிறிஸ்துவின் சபை
54, ராம் நகர்
திண்டுக்கல் - 624005

முதல் தமிழ் பதிப்பு - 2,000 பிரதிகள் 1992

பிரதிகள் கிடைக்குமிடம்
உலக இலக்கிய பதிப்பகம்
கிறிஸ்துவின் சபை
54. ராம் நகர்
திண்டுக்கல் - 624005.

# பதிப்புரை

## கிறிஸ்துவின் சபையின் வசன ரீதியான ஆளுகை அமைப்பு

இப்புத்தகம் இந்தியாவின் பலமொழிகளிலும் ஆசிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இது தமிழிலே அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. இதனை மொழியாக்கம் செய்யவும் அச்சிட்டு வெளியிடவும் செய்த சகோ. E. A ஆறுமுகத்திற்கு நன்றிகளை தெரிவிக்கிறேன்.

சபையானது தனக்கு கட்டளையிடப்பட்ட ஊழியத்தை செய்ய சபை ஆவிக்குரிய ஆளுகை அமைப்பை பெற்றிருப்பது அவசியமாகும். இதை ஒருவர் கண்ணுறும் போது கர்த்தருடைய சபைக்கும் மனித சபைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காணமுடியும். கர்த்தர் காட்டும் வழியில் மக்களைத் திருப்பவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இப்புத்தகம் அச்சாகி வெளியேறுகிறது. அப்பொழுதுதான் நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாயிருக்கக் கூடும்.

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், வேத வகுப்புக்கும், புதிய ஏற்பாட்டின் உண்மை கிறிஸ்தவத்தைப் பயிற்சிக்கவும் இது பிரயோஜனமாயிருக்கும் என ஜெபிக்கிறோம்.

ஜே.சி. சோட்
கிறிஸ்துவின் சபை
உபேட்டி 3815
புது டில்லி - 110049

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கிறிஸ்துவின் சபையின் வசன ரீதியான ஆளுகை அமைப்பு | 1 |
| 2. | சபையின் ஆளுகை அமைப்பு குறித்து ஏன் படிக்க வேண்டும்? | 6 |
| 3. | சபையின் ஆளுகை அமைப்பின் ஆரம்ப உண்மைகள் | 11 |
| 4. | சபை என்பது என்ன? | 14 |
| 5. | முழு சபை என்றால் என்ன? | 18 |
| 6. | முழு சபையும் எவ்வித ஆளுகை அமைப்பைப் பெறுகிறது? | 22 |
| 7. | சபை பூமியிலே எவ்வித ஆளுகை அமைப்பைப் பெறுகிறது? | 25 |
| 8. | அப்போஸ்தலர்களும் தீர்க்க தரிசிகளும் யார்? | 30 |
| 9. | பிராந்திய சபைகள் எவ்வித ஆளுகை அமைப்பைப் பெறுகின்றன? | 35 |
| 10. | பிராந்திய சபைகள் எப்படி சுயாட்சி அமைப்பைப் பெறுகின்றன? | 40 |
| 11. | பிராந்திய சபைகள் தன்னாட்சி அமைப்பை பெற வேண்டும் என்று தேவன் ஏன் எதிர் பார்க்கிறார் | 45 |
| 12. | சபை சமூக அரசுடன் எப்படி ஒப்பிடப்படுகிறது | 50 |
| 13. | மனிதர்கள் ஏன் முன்னோடிகளைப் பின் பற்றுகின்றனர்? | 55 |
| 14. | சபையில் முன்மாதிரி ஏன் முக்கியமானது? | 59 |
| 15. | சபையின் முன் மாதிரியானவர்கள் யார்? | 64 |
| 16. | சபையின் ஊழியங்கள் யாவை? | 70 |
| 17. | மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மாற்றுப் பெயர்கள் யாவை? | 75 |
| 18. | மூப்பர்கள் எப்படி அடிக்கடித் தவறாக புரிந்து கொள்ளப்படுகின்றனர்? | 80 |

19. பிரிவுக் கூட்டங்கள் எப்படி சபையின் ஆளுகை அமைப்பை கெடுக்கிறது? 85
20. கிறிஸ்துவின் சபைகள் எப்படி சபையின் ஆளுகை அமைப்பை கெடுக்கின்றன? 89
21. சபையின் ஆளுகை அமைப்பிலே பிராந்திய சபைகளின் போக்கு என்ன? 95
22. மூப்பர்களின் தகுதியாம்சங்கள் (1) 100
23. மூப்பர்களுக்கான தகுதியாம்சங்கள் (2) 105
24. மூப்பர்களுக்கான தகுதியாம்சங்கள் (3) 111
25. மூப்பர்களின் தகுதியாம்சங்கள் (4) 117
26. உதவிக்காரர்களின் தகுதியாம்சங்களும், பணிகளும் 124
27. அதிகாரிகள் எப்படி தேர்ந்தெடுக்கப் படக் கூடாது? 130
28. பரிசுத்தாவியானவர் எப்படி மூப்பர்களை உருவாக்குகிறார்? 136
29. மூப்பர்களுக்கு தேவனின் கட்டளை 143
30. சபையின் ஆளுகை அமைப்பிலுள்ள ஆபத்தான அறிகுறிகள் 152
31. சபையின் அரசாங்கம் முதன் முதலில் எப்படி கெடுக்கப்பட்டது. 159
32. பொருளாதாரக் கூட்டங்களை நடத்துவது எப்படி? 165
பிழைத்திருத்தங்கள் 172

# பாடம் — 1

## கிறிஸ்துவின் சபையின் வசன ரீதியான ஆளுகை அமைப்பு

ஜிம் மாசே

### புறக்குறிப்பு

1. நமக்கு நலமாய் தோன்றுகிறபடியல்ல.
2. அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுமல்ல.
3. புதிய ஏற்பாடு மட்டுமே நமக்கு வழிகாட்டி.

### விவாதம்

(1) **நமக்கு நலமாய்த் தோன்றுகிறபடியல்ல.** நாம் எதைக் கற்றுக்கொள்ள விழைந்தாலும் அதற்கு அதிகாரபூர்வமான அளவீடு தேவை. எந்த கேள்விக்கும் நம்பத்தகு பூர்வாங்க பதில் உண்டு. எல்லோருக்கும் தெளிவாய் காணுகின்ற சரியான அதிகாரம் இருந்தாக வேண்டும். இப்பொழுது நமது பாடம் மார்க்க ரீதியான பாடமானதால் சபையின் ஆளுகை அமைப்பிற்கான அதிகாரம் யாது? கேட்கப்படும் கேள்விகளுக்குத் தகுந்த பதில் அளிக்கும் அளவீடு என்ன? என்று நாம் கேட்கிறோம். மார்க்க ரீதியான காரியங்களிலே ஒவ்வொரு மனிதனும் தனக்குச் சரியாய்த் தோன்றுகிறபடி எதையும் தெரிவு செய்து கொள்ளலாம் என்பது சிலரது வாதம். மேலும் இவர்கள், ''நலமாய்த் தோன்றுகிறபடி செய்யுங்கள்,'' என்றும், ''ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தனக்கென ஒரு அளவீடு'' உண்டென்றும் ''நன்கு செயல்படுகின்ற எவ்வகைத் திட்டத்தையும் பின்பற்றலாம்'' என்றும் சொல்கின்றனர். ஆனால் மார்க்க காரியங்களில் மனிதனின் நினைவுகளெல்லாம் தெய்வத்தின் அளவீடு ஆகாது. தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்று வேதம் கூறுகிறது. (எரேமி. 10;23). மனிதனுக்கு செம்மையாய்த்-

தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரண வழிகள் (நீதி. 14:12). மனித கற்பனைகள் வீணான ஆராதனை-யை தோற்றுவிக்கிறது என இயேசு சொன்னார். (மத்-15:19). ஆதலால் மார்க்க சம்பந்தப்பட்ட எவ்வகை காரியத்திலும் மனிதனின் கோட்பாடுகள் (நினைவுகள்) அதிகாரமாகாது. கலையின் ஆளுகை அமைப்பிலும் தாங்கள் வகுத்ததிட்டமே சிறந்தது என அநேகர் வாதிடு-வர். மேலும் சிலர் தங்களின் திட்டவரைகள் (அமைப்பு முறைகள்) நன்கு செயல்படுவதாகக் கூறுவர். ஆனாலும் மனிதனின் சுய சார்புக்கருத்துக்களெல்லாம் நம்பத்தக்க-வைகளல்ல. நமக்கு நலமாய்த் தோன்றுகின்றவைகளினா-லே நாம் சத்தியத்தை அறியலாகாது.

**(2) அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுமல்ல:** இரண்டாவதாக மார்க்க ரீதியான காரியங்களிலே 'அநேகர்' செய்கிறபடியால் அது சரியானது தான். என்ற நம்பிக்கையே அதிகாரமாக கொள்கின்றனர். சபையின் குறிப்பிட்ட சில சட்டங்களை விசுவாசிக்கிறவர்-கள், எப்படி அநேகரும் அந்த திட்டத்தை பின்பற்றுகின்-றனர் என்றும் அல்லது எவ்வளவு காலம் அவர்கள் அத். திட்டத்தை அனுசரிக்கின்றனர் என்றும் சொல்லக்கூடும். ஆனால் இதுவும் கூட மார்க்க அதிகாரத்திற்குட்படாத மற்றொரு தவறான கருத்தாகும். அநேக மனிதர்களின் சுய கருத்துக்கள் ஒரு தனிமனிதனின் கருத்துக்களைப் போலவே சார்ந்திருக்கத்தக்கவைகளல்ல. அநேகர் தாங்கள் நினைப்பது சரியானது என எண்ணிக்கொண்டிருந்தாலும், அவர்களை அறியவில்லை என்று இயேசு சொன்னார். (மத். 7;22). திரளானவர்கள் தவறான வழியில் செல்-கின்றனர். ஆனால் சத்திய வழியில் செல்பர்கள் மிகச் சிலரே. (மத் 7:13,14). இஸ்ரவேலர்கள் தங்களைச் சுற்-

றிலும் இருக்கும் தேசத்தைப் போல தங்களுக்கும் ஒரு இராஜா வேண்டும் என கேட்டனர். ஆனால் அந்தவர்களைப் போல தாங்களும் இருக்க முயற்சித்தமையால், தேவன் தமது மக்களை ஆள தாம் வகுத்த சட்டதிட்டங்களை அவர்கள் புறக்கணித்தனர். (1சாமு. 8:5-7). எனவே சபையானது தங்களைச் சுற்றியுள்ள சபைகளைப் பார்த்து தாங்களும் அப்படியிருக்க எண்ணலாகாது. சபை என்பது அழைக்கப் பட்டவர்களின் கூட்டம் (2 கொரி. 6:17). அவர்கள் விசேஷித்த ஜனங்கள் (1 பேதுரு 2:9). கர்த்தரின் சபையின் ஆளுகை அமைப்பிலே ஏற்படுகின்ற அநேக தூய்மைகேட்டுக்கும், சில பலவீனமான அங்கத்தினர்கள் தங்களைச் சுற்றிலுமுள்ள பெயர் கிறிஸ்தவர்களைப் போல தாங்களும் இருக்க விரும்புவதுதான் காரணமாகும். அநேகரும் பின்பற்றுகின்ற சட்ட திட்டங்களையும் வழிமுறைகளையும் இவர்கள் விரும்புகின்றனர். மற்றவர்கள் செய்கின்றவைகளெல்லாம் தேவனின் சத்தியத்தின் அளவீடாகாது.

*(3)* **புதிய ஏற்பாடு மட்டுமே வழிகாட்டி.** மார்க்கக்காரியங்களில் நமக்கு இருக்கிற ஒரே அளவீடும், அதிகாரமும் புதிய ஏற்பாடேயாகும். மத நூல்களோ, ஜெபப்புத்தகமோ, அல்லது (மனித) கோட்பாட்டு நூல்களோ மார்க்க அதிகாரம் பெற்றவைகளல்ல. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் இயேசு பெற்றிருக்கிறார் (மத் 28:18), அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்திற்கும் வழிநடத்தும்படியாக பரிசுத்தாவியை அவர்களுக்கு அவர் கொடுத்தார். (யோவான் 16:13). இப்படியாக, வேத வசனங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டிருக்கிறதும், ஒரு கிறிஸ்தவன் சகல நற்கிரியைகளையும் செய்யத் தகுதியுள்ளவனாகும் பொருட்டு அது போதுமானதாயும் இருக்கிறது (2 தீமோ 3:16,17). தேவனுடைய புத்தகத்திலிருந்து மனிதன் எதை-

யும் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது (வெளி. 22:18,19). எல்லா மனுசரும் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். எழுதப்பட்டதற்கு மிஞ்சிபோய் விடக்கூடாது (2 யோவான் 9,10). மனிதர்கள் சுவி-சேஷத்தை மாற்றவோ அல்லது புரட்டவோ கூடாது. (காலத்தியர் 1:7-9). பழைய ஏற்பாடும் கூட இன்று கிறிஸ்துவனுக்கு அதிகாரமாய் அமைவதில்லை. கிறிஸ்து வருகின்றவரை (அல்லது கிறிஸ்துவின் மீது விசுவாசம் வரும்வரை) அது ஒரு உபாத்தி (ஆயா) யாக மாத்திரமே இருக்கிறது. ஆனால் இப்போது மனுஷர்கள் உபாத்திக்கு கீழானவர்களலல்ல. (கலாத்தியர் 3:24,25). நியாயப்-பிரமாணம் நடுவிலிராதபடி எடுக்கப்பட்டு. சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டது (கொலே 2:14). இப்பொழுது கிறிஸ்தவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து-வின், புதியதும் சிறந்ததுமாகிய புதிய பிரமாணத்திற்கு கீழானவர்களாவர் (எபி 8:6-13) ஆதலால், பழைய ஏற்பாட்டின் படியான அறுப்பின்பண்டிகை அல்லது நியமங்கள் போன்ற கற்பனைகள் இன்று சபைக்கடுத்த காரியங்களை கட்டுப்படுத்தும் அதிகாரமுடையவையல்ல. சபையின் ஆளுகை அமைப்பு என்ற இந்தப் பாடம் தேவ-னுடைய ஏவுதலினால் அதிகாரம் பெற்ற புதிய ஏற்பாட்-டுக்கு மாத்திரமே கனமளிக்கிறது. இப்பாடங்களில் எழுதப்-பட்டிருக்கும் அனைத்துக்காரியங்களுக்கும் வேதாகமத்தோடு ஒப்பிட்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என சரிபார்க்க வேண்டும். (அப் 17:11) அனைத்து உபதேசங்களும். தேவ வசனங்களின் அதிகாரங்களைக் கொண்டு தோத்தரிக்கப்-பட வேண்டும் (1 யோவான் 4:1). இன்று தேவனுடைய அதிகாரத்தை மனிதனிலே நாம் பார்ப்பதில்லை, ஆனால் வசனங்களிலே காணுகிறோம். தேவனுடைய புத்தகத்தி-லிருந்து நிருபிக்கப்பட்டவைகள் எல்லாம் தேவனால் நிருபிக்கப்பட்டவைகள். வேதாகமத்திலே ஒரு முறை ஒப்-

புவிக்கப்பட்ட உபதேசத்திற்கு நாம் தைரியமாய் போராட வேண்டும். (யூதா. 3). ''தேவனுடைய வாக்கியங்களின்படி'' நாம் பேச வேண்டும் (1 பேதுரு 4:11). தேவன் குழப்பத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 14:33). தேவனுடைய அதிகாரத்தை மதிக்கிற யாரும் வேதம் போதிப்பதை மாத்திரம் போதிப்பார்கள், வசனத்தில் அதிகாரத்திற்கப்பாற்பட்ட எதையும் மறுப்பார்கள். வேதம் பேசுகின்ற இடத்திலே பேசி வேதம் அமைதியளிக்கின்ற இடத்திலே அமைதியளிப்பவர்களே தேவனுடைய மக்கள். இவர்கள் வேதாகம காரியங்களை வேதாகம வழியிலே செய்து, வேதாகம காரியங்களை வேதாகமப்படிபெயரிடுவர். மார்க்க காரியங்களிலே தேவனுடைய அதிகாரமாய் விளங்கும் வேத வசனங்களை சரியான அளவீடாக மதித்து, சபையின் ஆளுகை அமைப்பு என்ற பின்வரும் பாடங்களை கற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் சொந்த வேதாகமத்தைக் கொண்டு எல்லா வசனங்களையும் ஆராய்ந்து பாருங்கள். இது தேவனுடைய வசனம். இதுவே சத்திய வசனம் (2 தீமோ. 2:15).

## கேள்விகள்

1. மார்க்க காரியங்களிலே மனிதனின் சுய எண்ணங்கள் அதிகாரம் படைத்தவையா?
2. மனிதன் தன் சுய எண்ணத்தில் நினைத்து பின்பற்றும் 3 காரியங்களை வரிசைப் படுத்துக.
3. மனுசனுடைய உபதேசங்கள்........ஆராதனையை உண்டாக்குகிறது.
4. திரளான ஜனங்களின் எண்ணங்கள் சரியானவைகள்தானா?

5. அநேகர் தவறாக புரிந்து கொள்கின்றனர் என்பதற்கு 2 வசன ஆதாரங்களை கொடு.

6. இஸ்ரவேலர்கள் ....................போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் எனக் கேட்டனர்.

7. சபை வித்தியாசமானது என்பதற்கு 2 வசனங்கள் கொடுக்கவும்.

8. தேவனுடைய அதிகாரம் இன்று மனிதனிலே காணப்படுகிறதா?

9. எல்லாவற்றையும் வசனத்தினாலே நிரூபிக்க வேண்டும் என்பதற்கு 2 வசனங்கள் கொடுக்கவும்.

10. மார்க்கத்திற்கு சரியான அதிகார அளவீடு குறித்த 8 வசனங்களை வரிசைப்படுத்துக.

## பாடம் 2

### சபையின் ஆளுகை அமைப்பு குறித்து ஏன் படிக்க வேண்டும்.

### புறக்குறிப்பு

1. ஆதி ஆளுகை அமைப்பிலிருந்தே விசுவாசத்தைவிட்டு வழுவிப்போன சம்பவம் நடந்தது.

2. மனிதனின் தற்பெருமை எந்த ஒரு தலைமைத்துவத்தையும் தூய்மைகேட்டைச் செய்கிறது.

3. பிராந்திய சபையை நடத்திச் செல்வோரின் தன்மைக்கு ஏற்ப சபை நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ அமைகிறது.

### விவாதம்

1) **ஆதி ஆளுகைஅமைப்பிலிருந்தே விசுவாசத்தை விட்டு வழுவிப்போன சம்பவம் நடந்தது.** விசுவாசத்தைக்குறித்து வழுவிப்போதலை வேதாகமம்முன்னுரைத்தது

(1 தீமோ 4:1). சிலர் உண்மையான சுவிசேஷத்தை மாற்றி புரட்டிப் போடுவார்கள் (கலா 1:6-9). எபேசு சபை மூப்பர்களை கண்காணிகளாக வைத்த மந்தையை குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி பவுல் கூறினார் (அப் 20:28) கள்ளப்போதகங்கள் நுழைந்துவிடும் என்பதால் இந்த மந்தை (சபை)யை போஷிக்க வேண்டும் அல்லது அங்கத்தினர்களுக்கு போதிக்க வேண்டும். இயேசு தாமே தமது இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட சபையினின்று சீஷர்களை இழுக்க கள்ளப் போதகர்கள் தோன்றுவார்கள் (அப் 20:28-30).

சபை சரித்திரத்தின் வாயிலாக சில வருடங்களுக்குள்ளாகவே மேற்குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மனிதர்கள் விசுவாசத்தை விட்டு வழுவிப்போக ஆரம்பித்தனர். கள்ளப்போதகர்கள் அநேகரை தங்கள் பக்கம் இழுத்தனர், தேவனே நினையாத வழியில் சபைத்தலைவர்கள் ஆளுகை செய்ய ஆரம்பித்தனர். ரோம கத்தோலிக்கசபை மற்றும் நாமகரன கூட்டங்களைப் போன்ற ஆளுகை அமைப்பு ஆரம்பமாயிற்று. இவ்வகைத் தலைமைத்துவமே சபையில் தூய்மைகேட்டை கொண்டுவந்தது,

வேதாகமத்தை விட்டு விலகிப்போன பாதைகளில் சபையின் ஆளுகை அமைப்பும் ஒன்றாகும். ஒன்றுக்குமேற்பட்ட சபைபிராந்தியங்களை மூப்பர்கள் ஆளுகை செய்ய ஆரம்பித்தனர். மூப்பர்களை "பிஷப்பு"கள் ஆள ஆரம்பித்தனர். இறுதியாக ஒரு போப்' நியமிக்கப்படும்வரை மனிதர்கள் சபையின் ஆளுகை அமைப்பை உணர்த்தும் வேதாகம திட்டத்தை தொடர்ந்து மாற்றியமைக்க ஆரம்பித்தனர் வேதாகமத்தின்படி 'போப்' என்பவன் இல்லை. ஆனால் மனுஷர்கள்தான் விசுவாசத்தை விட்டு வழுவிப்போக ஆரம்பித்தனர்.

சபையின் உண்மையான ஆளுகை அமைப்பை மனு-ஷர்கள் கெடுத்துப்போடுவது எப்பொழுதுமே ஆபத்தான-தொன்றாகும். விலகிப்போகின்ற ஒரு பின்னணியின் தலை-மைத்துவத்தையே அடிப்படையாக கொண்டிருக்கும். இத-னால்தான் சபையின் ஆளுகை அமைப்பைக் குறித்து படிப்-பது அவசியமாகும், மற்றவர்கள் விசுவாசத்தை விட்டு-போனதை கற்கும்போது நாம் தவறுகளை திருத்திக்-கொள்ள அவைகள் ஏதுவாகும்.

### 2) மனிதனின் தற்பெருமை எந்த ஒரு தலைமைத் துவத்தையும் தூய்மை கேட்டைச் செய்கிறது :

தற்பெருமை என்பது சுய மகிமையடைய விரும்பு-தலைக் குறிக்கும், முன்னின்று நடத்துகிற எவருக்குமே இது ஒரு பெரிய சோதனையாகும். ஒருவருக்கு ஒரு பதவி கொடுக்கப்பட்டிருக்கும்போது பெரிய பதவியை அடைய அவர் விரும்புகிறார். ஒருவருக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்போது அதிக அதிகாரத்தைப் பெற அவர் விரும்புகிறார். இதனால் தான் முன்னின்று நடத்-தும் தலைமையத்துவம் என்பது மிக விரைவிலேயே கெடுகின்றது.

எந்த யுகத்திலும் மனுசர்கள் ஒரே மாதிரியாகத்-தான் உள்ளனர். அப்போஸ்தலர்கள் யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாயார் இயேசுவின் இரண்டு பாரிசத்திலும் அவருடைய இராஜ்ஜியத்திலே அமரச்செய்ய வேண்டினாள் (மத் 20:23-28). இன்றைய மனிதர்களைப் போலவே அன்றைக்கு அப்போஸ்தலர்களும் இருந்தனர். எல்லா மனி தர்களுமே அதிகாரத்தைப்பெற விரும்புகின்றனர். முதன்-மை இடத்தை வகிக்க நாம் விரும்புகிறோம். மனித இயல்பு ஒருபோதும் மாறுவதில்லை.

இதனால்தான் சபையின் ஆளுகை அமைப்பிற்கு தேவனுடைய திட்டத்தை கெடுத்துப்போடுதல் என்பது நிகழ்கால ஆபத்தாகும். சபையில் முதன்மை இடத்தை

வகிக்கவே மனுசர்கள் இன்று பெரும்பாலும் சபையில் நுழைய எண்ணுகின்றனர். இன்னும் பலர் தங்களுக்கு ஏதோ ஓர் பதவி கிடைக்கும் உறுதியில் அங்கத்தினராக மாறுகின்றனர். சபையில் தாங்கள் ஒரு தாழ்மையான ஊழியனாக இருக்க மனிதர் விரும்புவதில்லை. மாறாக தங்களால் இயன்ற அளவு ஒரு பெரும்பதவியை வகிக்கவே விரும்புகின்றனர். தங்களுக்கு பெரிய பதவி வேண்டுமென்பதற்காக தேவனுடைய திட்டத்தையே அவர்கள் கெடுக்கின்றனர். மனிதனின் தற்பெருமை சுலபமாக சபையின் முறைப்படி தலைமைத்துவத்தை கெடுத்துவிடுகிறது. ஆதலால், இப்பாடங்களைப் படிப்பது முக்கியமாகும்.

**(3) பிராந்திய சபையை நடத்திச் செல்வோரின் தன்மைக்கேற்ப அதுநல்லதாகவோ கெட்டதாகவோ மாறுகிறது :** இதை உணர்ந்துதான் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு மூப்பர்களை வரவழைத்து அவர்களிடம் பேசினார் (அப்-20:17-30) நல்வழி நடத்துபவர்களை பின்பற்றிச்செல்லும் அநேக சபைகள் மிக ஸ்திரமான சபைகளாக மாறுவதையும். பலவீனமான அல்லது தீய வழி நடத்துபவர்களை பின்பற்றும் சபைகள் மோசமானவைகளாக மாறுவதையும் காணலாம். இதனால்தான் நல்ல மூப்பர்களையும் கண்காணிகளையும் பரிசுத்த ஆவியானவருடைய திட்டத்தின்படி செயல்பட செய்தனர் (அப்.20:28) திடமான தலைமைத்துவம் திடமான சபையை உருவாக்கும்.

தான் கற்றுக் கொண்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுசர்களிடத்தில் ஒப்புவிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டார். (2தீமோ. 2:2). தாம் கற்றுக்கொண்டவைகளை மற்றவர்களுக்கு போதிப்பதும் தேவனுடைய திட்டத்தின்படி தலைமைத்துவம் தாங்குவதாகும். இக்காரணங்களுக்காக. சபையின் ஆளுகை அமைப்பைக்குறித்து வேதம் கூறுவதை நாம் படிப்பது மிகவும் அத்தியாவசமானது.

## கேள்விகள்

1. 1 தீமோ 4:1-ல் முன்னுரைக்கப்பட்டது என்னவெனில் சிலர் ........................................ விட்டு ............,

2. கலா. 1:7-ல் சிலர் .....................போடுவார்கள்.

3. அப். 20:17-ல் பவுல்............களை வரவழைத்-தான்.

4. அப். 20:28-ல் அவர் அவர்களிடம்............ குறித்தும் ................குறித்தும்............ இருங்கள் என்று சொன்னார்.

5. அப். 20:29-ல் தான் போனபின்பு ............ யை தப்பவிடாத.......... .......... ... ..........உங்களுக்குள்ளே வரும்.

6. சபையின் மீது அதிகாரம் பெற்றவர் போப் என்று வேதம் கூறுகின்றதா?

7. மத். 20:20ல்-............ ............தாய் ஒரு விண்ணப்பம் பண்ணினாள்.

8. மனிதரின் தற்பெருமை அக்காலத்தைப் போன்றே இன்றும் ஆபத்தானதுதானா?

9. 2 தீமோ. 2:2 போதிக்கப்பட்டவர்கள்.......... ..........திறமை பெற்றவர்களாயிருக்க வேண்டும் என்று வேதம் சொல்கின்றது.

10. நல்வழி நடத்துபவர்களின் தலைமை ——— ——— ——— ———சபைகளை உண்டுபண்ணுகிறது; தீயவழி நடத்தும் தலைவர்களின் தலைமை——— ——— ——— ——— ———சபையை உண்டுபண்ணுகிறது.

# பாடம் 3

## சபையின் ஆளுகை அமைப்பின் ஆரம்ப உண்மைகள்

### புறக்குறிப்பு

1. அனைத்து அமைப்புகளுக்கும் முதன்மை வாய்ந்தவர்கள் இருக்க வேண்டும்.
2. அனைத்து அமைப்புகளிலும் அதனை பின்பற்றிச் செல்லுவோர் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவுடன் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும்.

### விவாதம்

**1) அனைத்து அமைப்புகளுக்கும் முதன்மை வாய்ந்தவர்கள் இருக்க வேண்டும்.** திரளான ஜனங்களைப் பார்த்து இயேசு எப்பொழுதுமே தம்மை பின் பற்றின திரளான ஜனங்களைக் கொண்டு, அவர்கள்மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல இருந்தமையால் மனதுருகினார். (மத்.9:36) ஆடுகளைப் போன்ற பிராணிகளின் கூட்டத்திற்கு கூட முதன்மை வாய்ந்தவர்கள் இருந்தாக வேண்டும். மனிதர்களின் கூட்டத்திற்கும் இது உண்மையானதே. குடும்பத்திற்கு முதன்மை (தலைமை) தேவை என்பதை தேவன் கண்டமையால், புருஷனையே, தலையாக நியமித்தார் (எபே. 5:23). தேசங்களின் மேல் முதன்மையானவர்கள் தேவை என்பதால் தேவன் இராஜாக்களையும் தேசாதிபதிகளையும் நியமித்தார். (1 பேது.2: 13,14) கூலியாட்களும் தங்களுக்கு ஒரு நல்ல தலைவன் இருந்தால் சிறப்பாக தங்கள் பணிகளைச் செய்வார்கள். எனவே சபையிலும் முதன்மை வாய்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய நியமம் என்று இவைகள் காட்டுகின்றன.

**(2) அனைத்து அமைப்புகளிலும் அதனை பின்பற்றிச் செல்லுவோர் இருக்க வேண்டும்** தனக்குத்தானே பிரிந்திருக்கும் எந்த பட்டணமும் வீடும் நிலைத்து நிற்காது என்று இயேசு சொன்னார். (மத். 12:25) நல்ல தலைவனை பின்பற்றிச் செல்ல நல்ல நபர்கள் இருக்க வேண்டும். பின்வரும் காரியங்கள் வழிநடத்திச் செல்ல ஏதுவான முன்னேறும் அமைப்புக்கு அத்தியாவசியமானதாகும். எப்படியிருப்பினும் மனிதர்கள் பின்பற்றிச் செல்லும் நபர்கள் முக்கியமானவர்கள் என்பதைக் குறித்து அக்கறை காட்டுவதில்லை. பின்பற்றும் நபர்களற்ற நிலையில் வழிநடத்துபவர்களுக்கான நன்மை என்ன? பின்பற்றும்நபர்கள் எப்படி பின்பற்றிச் செல்வது என்பது குறித்து பயிற்றுவிக்கப்பட வேண்டும். பின்பற்றிச் செல்வோர் நல்ல நபர்களாக இருக்க வேண்டும் என்பது தேவனின் எதிர்பார்ப்பு எப்படி பின்பற்ற வேண்டுமென அவர்கள் போதிக்கப்படவேண்டும்.

**(3) ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவுடன் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும் :** நல்ல தலைவர்களும் அவரை நன்கு பின்பற்றுபவர்களும் எப்படி நன்கு பணியாற்ற வேண்டும் என்பதை அறிவார்கள். தலைவர்கள் தங்கள் பணி இன்னது என்பதையும், பின்பற்றுவோர் தங்கள் பணி இன்னது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இருசாரருமே தங்கள் பொறுப்புகள் இன்னது என்பதையும் தாங்கள் செய்யக் கூடாதவைகளையும் அறிந்திருக்க வேண்டும். தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களை பாராட்டுவதும், பின்பற்றுவோர் தங்கள் தலைவர்களை கனம்பண்ணி நடந்து கொள்வதும் வேண்டும். இது யாவருக்குள்ளும் ஒரு நல்ல நட்பை ஏற்படுத்தும். சபையை மனித சரீரத்திற்கு ஒப்பிட்டு வேதம் பேசுகிறது. சரீரத்தில் அநேக அவ-

யங்கள் உள்ளன. ஆனால் எல்லா அவயங்களுமே முழு சரீரத்திற்கும் தேவை (1 கொரி. 12:12), காலானது கை-யாயிராததினால் தான் முக்கியமில்லை என எண்ணலாகாது (1 கொரி 12;15), கண்ணானது கையைப் பார்த்து, 'நீ எனக்கு தேவையில்லை' என்று சொல்ல முடியாது. சரீரத்தின் சிறிய அவயங்கள் கூட சரீரத்திற்கு தேவை-யானதும் முக்கியமானதுமாகும் (வச 20-26). இதுபோல-வே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் உண்மையானது (வச 27) வழிநடத்துவோரைக் குறித்து பின்பற்றுவோர் குறை சொல்லக் கூடாது. வழிநடத்துவோரும் பின்பற்று வோரை கவனிக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் ஒற்றுமையாய் தன்னால் இயன்ற ஊழியத்தை செய்ய வேண்டும். இந்தப் புத்தகம் வழிநடத்தவும், பின்பற்றவும் ஒத்துழைப்பை காட்டவும் கூடிய போதனையாய் அமையும்,

## கேள்விகள்

1. மத் 9:36ல்,. தங்களை வழிநடத்துவோர் இல்லா-மையால்———— ————இருக்கிறார்கள் என்று கிறிஸ்து சொன்னார்.

2. எபேசி 5:23ல் புருஷன்———— · · ————க்கு தலையா-யிருக்கிறான் என்றால்———— ————என்று கூறுகிறது.

3. 1 பேதுரு 2;13,14———— ————சரி———— ———— சரி———— ————கீழ்படியுங்கள்.

4. மத் 12:25 தனக்குத்தானே———— ————எந்த வீடும் ———— ————நிற்க மாட்டாது.

5. 1 கொரி. 12 சபை அங்கத்தினர்கள் ———— ————க்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

6. கூலியாட்களுக்கு தலைவன் தேவையா?
7. நன்கு பின்பற்றுதல் சபையின் தேவையா?
8. நல்ல ஒத்துழைப்புடன் பணியாற்றுதல் என்பதன் பொருள் என்ன?
9. சரீரத்தில் சிறிய அவயங்களுக்கு முக்கியத்துவம் இல்லை?
10. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்றால் என்ன?

## பாடம் - 4

### சபை என்பது என்ன? புறக்குறிப்பு.

1. வனாந்தரத்தில் சபை
2. சபை அல்லது கிறிஸ்துவின் சரீரத்தின் முழுமை.
3. பிராந்திய சபை,
4. சட்டம்.

### விவாதம்

(1) வனாந்தரத்தில் சபை ''சபை'' என்ற பதத்தின் பொருள் ''ஒரு அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம்'' என்பதாகும். இது கட்டிடம் என்று பொருள் படாது தரிக பட்டனத்தானாகிய சவுல்''சபையை''யும் ''ஸ்திரீகளையும் புருஷர்களையும்'' உபத்திரவப்படுத்தினான் (அப். 8:1-3). சபையின் அங்கத்தினர்களே சபையாகும். ஆனால் எல்லா ஆண்களும் பெண்களும் சபையாகாது. ''அழைக்கப்பட்வர்களின் கூட்ட்டமே'' சபையாகும். வேதாகமம் ''சபை'' என்று குறிப்பிடும் பொழுதெல்லாம் ''அழைக்கப்பட்டவர், களின் கூட்டத்தையே'' பேசுகிறது. ஸ்தேவன் இஸ்ரவேலர்களைக்குறித்து பிரசங்கிக்கும்போது, அவர்கள் எகிப்திலிருந்து வனாந்தரத்திற்குள் அழைக்கப்பட்டவர்கள் என்று கூறினார். அந்தமக்கள் அடிமைத்தனத்திலிருந்து அழைக்கப்-

டதால், அவர்களை ''வனாந்தரத்து சபையாக'' குறிப்பிடுகிறார் (அப் 7:38). இது ''சபை'' என்ற பதத்தின் உண்மை பொருளை விளக்க உதவுகிறது. ஆனால் அழைக்கப்பட்ட இந்தக்கூட்டத்தார் புதிய ஏற்பாட்டின் படியான கிறிஸ்துவின் சபை அல்ல. அவர்கள் மேகத்திற்குள் சிவந்த சமுத்திரத்தை கடந்ததால் மோசேயினால் ஞானஸ்நானம் பெற்றனர் (1 கொரி 10:1,2). இயேசுவானவர் கட்டின் சபை அவர் பூமிக்கு வந்து பிறகு பரத்திற்கு ஏறின பிறகே ஸ்தாபிக்கப்பட்டது. (மத் 16:18). பழைய ஏற்பாட்டின் மார்க்கம் யூதர்களின் மார்க்கமாகும். (கலா 1:13,14) அது கிறிஸ்தவ மார்க்கமல்ல, கிறிஸ்தவ மார்க்கத்தின் முன்னோடியாகும். (கலா 3:24,25)

மேலும் சபை என்பது ஒரு நாமகரண கூட்டமும் அல்ல. புதிய ஏற்பாட்டுச் சபையின் ஆரம்ப காலத்தில் எந்த ஒரு நாமகரண கூட்டமும் இருந்ததில்லை. இயேசு தமது சபையை ஸ்தாபித்து சில காலத்திற்குப்பின்பே மனிதர்களால் நாமகரண கூட்டங்கள் உருவாயின. எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்ற வேதாகம போதனைக்கு முரணாக நாமகரண கூட்டப்பிரிவுகள் மனிதர்களால் உருவாயின (யோவான் 17:20,21). இந்தப் பிரிவுகள் கிறிஸ்துவை பின்பற்றுவதற்குப்பதில் சுகவாசிகள் மனிதர்களின் போதனைகளை பின்பற்றிய (அவர்களின் பெயர்களை தரித்துக்கொண்ட) போது முதலில் ஆரம்பமாயிற்று (1 கொரி 1:10-13) வேதாகமத்தைப் பொறுத்த வரையில் அழைக்கப்பட்டவர்களின் கூட்டமே சபை என்பதில் மாற்றமில்லாதிருந்தது. இது கட்டிடமோ அல்லது நாமகரணமோ அல்ல. வனாந்தரத்தில் சபை என்பது பழைய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டோரின் யூதர்களின் கூட்டமாகும்.

(2) சபை அல்லது கிறிஸ்துவின் சரீரத்தின் முழுமை. புதிய ஏற்பாட்டை திருப்பும்போது நாம் கிறிஸ்துவின் சபையைக்குறித்து அறிகிறோம். ''நான் என் சபையைக் கட்டுவேன்'' என்று இயேசு சொன்னார் (மத். 16:18). இந்த சபை கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரயத்துக்கு வாங்கப்பட்டது என்று வேதம் கூறுகிறது, (அப். 20:28). அவர் இதற்காக அன்பு கூர்ந்து தம்மையே ஒப்புக்கொடுத்தார் (எபேசி. 5:25). இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் கர்த்தரால் இந்த சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (அப். 2:47). இது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவே இதற்கு தலையாயிருக்கிறார் (கொலே. 1:18,24) அனைத்து கிறிஸ்தவர்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் இது உண்மையிலேயே ''அழைக்கப்பட்டவர்களின் கூட்டமே''. இவர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குட்பட்டவர்கள் (கொலே. 1:13). உலகக்காரியத்திலிருந்து அவர்கள் வெளியே வந்து தங்களை விசேஷித்தவர்களாக்கிக் கொண்டவர்கள் (2கொரி.6:17). இப்படி அழைக்கப்பட்டவர்களின் இந்தக் கூட்டமே முழுமையான சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் என்று வேதத்தில் அழைக்கப்படுகிறது.

(3) **ஒரு பிராந்திய சபை:** ''சபையை'' புதிய ஏற்பாடு பிராந்திய கூட்டமாகவும் குறிப்பிடுகிறது. இது ஒரு பட்டணத்திலோ அல்லது ஒரு கிராமத்திலோ அழைக்கப்பட்டவர்களின் பிராந்திய கூட்டமாகும். ''கொரிந்தியிலுள்ள தேவனுடைய சபை'' என்று நாம் வாசிக்கிறோம், (1 கொரி. 1:2). ''ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்'' என்று நாம் காணும்போது, அது ஆசியா பட்டணங்களிலுள்ள ஏழு பிராந்திய சபைகளாகும் (வெளி.1;11) பிராந்திய சபைகளிலிருந்து பவுல் வாழ்த்துக்களை அனுப்-

பும்போது, ''கிறிஸ்துவின் சபை(கள்) யார் உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்'' என்றெழுதுகிறார் (ரோமர் 16:16). அழைக்கப்பட்ட விசுவாசிகளின் கூட்டம் எந்த பகுதியில் இருந்தாலும் அது பிராந்திய சபையே.

(4) ஒரு கூட்டம் நான்காவதாக வேதம் ''சபையை'' ஒரு கூட்டமாக குறிப்பிடுகிறது. தங்களின் வீடுகளிலிருந்து ஒரு கூட்டத்திற்குட்பட்ட கூட்டத்திற்கு ''சபை'' என்றால் ''அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்'' என்பதை ஞாபகத்தில் வைக்கவும். ''சபை'' கூடுதலை 1 கொரி. 14:23-ல் பவுல் குறிப்பிடுகிறார். ''சபைகளில்'' (கூடிவரும் கூட்டங்களில்) ஸ்திரீகள் அமைதலாயிருக்க வேண்டும். என்று அவர் குறிப்பிடுகிறார். ஸ்திரீகள் சபைகளில் (கூட்டத்தில்) பேசுகிறது அயோக்கியமாயிருக்கும்; (வச. 34,35). அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் கூட்டம் ஒன்று கூடி வருகின்ற கூட்டமே.

இப்படியாக ''சபை'' என்ற பதம் வேதாகமத்தில் 4 முறைகளில் பயன்படுத்துகிறது. நான்கிலுமே ''அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்'' என்ற பொருளிலேயே அழைக்கப்படுகிறது. சபையின் ஆளுகை அமைப்பைக்குறித்து படிக்கும்போது தயவுசெய்து இவைகளை மனதில் வைக்கவும். எப்பொழுதுமே வேதம் பேசுகிற இடத்திலே பேசுவோம். வேதம் அமைதியளிக்குமிடத்தில் அமைதியாயிருப்போம். வேதம் சபையை குறித்து பேசும் விதத்தில் மாத்திரம் நாமும் பேசுவோமாகில் எவ்வளவோ குழப்பங்கள் தீர்ந்துபோம். சபையைக் குறித்துக் வேதம் பேசாத கருத்துக்களை ஒதுக்கித் தள்ளுவோம்.

### கேள்விகள்

1. ''சபை'' என்றால் குறிப்பிடும்பொழுதெல்லாம் ——
   ——————

2. வனாந்தரத்து சபை எதிலிருந்து அழைக்கப்பட்டோரின் கூட்டம்?

3. வனாந்தரத்து சபை கிறிஸ்துவின் சபையைப் போன்றதா?

4. நாமகரன கூட்டங்களெல்லாம் கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டவைகளா?

5. யோவான் 17:21 "————————போகும்————ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்".

6. 1 கொரி. 1:10 நீங்களெல்லாரும் ஒரேகாரியத்தை பேசவும், ————————இல்லாமல்————".

7. 2 கொரி. 6:17 நீங்கள்———————— என்று கர்த்தர் சொல்லுகிறார்.

8. 1 கொரி. 1;22 ————————உள்ள தேவனுடைய சபை என்று கூறுகிறது.

9. எந்த சபையிலே ஸ்திரீகள் அமைதலாயிருக்க வேண்டும்?

10. முழுமையான சபை கிறிஸ்துவின்————இருக்கிறது.

## பாடம் - 5

## முழு சபை என்றால் என்ன?

### புறக்குறிப்பு.

1. தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் கீழானவன்.

2. கிறிஸ்துவின் கீழ் ஒவ்வொரு அங்கத்தினரும் சமமானவன்.

3. அனைவருக்குள்ளும் அன்பு, ஆர்வம், ஒத்துழைப்பு.

## விவாதம்

**1) தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் கீழானவன்.** உலகெங்கும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் சேர்ந்தே முழு சபையாக அமைகிறது என்றுகடந்த பாடத்தில் பார்ப்போம். அனைத்து பிராந்திய சபைகளிலிருக்கும் அனைத்து அங்கத்தினர்களையும் கொண்டே கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய முழு சபையாக அமைப்பு பெறுகிறது. விசுவாசிகளில் இந்த பெரிய சரீரத்திற்கு கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் (கொலே.1:13,24). நமது சரீரத்திற்கு ஒரே தலை இருப்பதுபோல், கிறிஸ்துவே அவருடைய சரீரத்திற்கு ஒரே தலையாயிருக்கிறார். நமது சரீரத்தின் அவையங்களெல்லாம் தலைக்கு கீழ்ப்பட்டிருப்பது போல கிறிஸ்தவன் தலையாகிய கிறிஸ்துவுக்கு கீழ்பட்டிருக்கிறான். வானத்திலும் பூமியிலும் கிறிஸ்து இயேசுவுக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28;18). தமது வேதமாகிய வசனங்கள் மூலம் அவர் தமது சரீரத்திற்கு தமது போதனையைக் கொடுக்கிறார் (மத்.28;19). உலகெங்குமுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், தலையாகிய கிறிஸ்துவுக்கு கீழ்பட்டிருந்து அவருடைய ஆவிக்குரிய சபையாகிய சரீரத்திற்கு அங்கம் வகிக்கின்றனர்.

**(2) கிறிஸ்துவின் கீழ் ஒவ்வொரு அங்கத்தினரும் சமமானவன் :** கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினர்களாகிய கிறிஸ்தவர்கள் அனைவரும் சமமானவர்கள், கிறிஸ்துவேயன்றி வேறே தலைவர்கள் அவர்களுக்கு இல்லை. அவருடைய வசனமேயன்றி வேறே அதிகாரத்தின் கீழ் அவர்கள் இருப்பதில்லை. முழு சபையிலும் எந்த அங்கத்தினரும், மற்ற அங்கத்தினர் மேல் எவ்வித அதிகாரத்தையோ வல்லமையையோ, ஸ்தானத்தையோ கொண்-

டிருப்பதில்லை. தனி அங்கத்தினனோ அல்லது அங்கத்தினர்களின் கூட்டமோ பிற அங்கத்தினர்களை கட்டுப்படுத்துவதில்லை. கிறிஸ்துவாகிய தலையின் கீழ் அனைவரும் சமமானவர்கள், வித்தியாசப்பட்ட திறமைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும். ''மேலானவன்'' யாருமில்லை (1 கொரி. 12:4-6). ஒவ்வொரு தனிப்பட்டவனின் திறமைக்கேற்ப நோக்கங்களை வைத்திருந்தாலும் எந்த அங்கத்தினனும் மற்ற அங்கத்தினனுக்கு மேல் உயர்த்தப்படுவதில்லை. 1கொரி. 12:12-24). கிறிஸ்துவின் சரீரமாகிய முழு சபையிலும் உள்ள அனைத்து அங்கத்தினர்களும் தலையாகிய கிறிஸ்துவுக்கு கீழ் சமமாயிருக்கிறார்கள்.

**(3) அனைவருக்குள்ளும் அன்பு, ஆர்வம், ஒத்துழைப்பு :** அனைத்து கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் சகோதரர்களைப் போல [அன்பு செலுத்துகின்றனர். அவர்கள் அனைவரும் தேவனுடைய குடும்பத்தில் சமமானவர்கள் (1யோவான் 3:1). அனைத்து அங்கத்தினர்களும், தமது சக அங்கத்தினர்கள் மீது ஆர்வம் காட்டி சரியான முறையில் செயல்பட செய்கின்றனர். அனைவரும் ஒரே சரீரத்தின் அவயவங்கள் (1கொரி. 12: 12,13). அனைத்து இனத்தார்களும், கோத்திரத்தார்களும் கிறிஸ்துவின் சரீரத்தில் சமமானவர்களையும், ஆட்களைப் போலவே பெண்களும் தேவனுடைய பார்வையில் சம அந்தஸ்துள்ளவர்களாயும் உள்ளனர். (கலா. 3:26-28). ஒரே சரீரத்தின் சக அங்கமாயிருப்பதினால், கிறிஸ்தவர்களனைவரும் அனைத்து பிராந்திய அங்கத்தினர் மீதும் ஆர்வம் காட்டுகின்றனர். கிறிஸ்துவின் சரீரத்தில் எவ்வித பாகுபாடுகளும் இருக்காலாகாது. (1கொரி. 12:25). அனைத்து அங்கத்தினர்களும், ஒருவரைக் குறித்து ஒருவர் அக்கரை காட்டுகின்றனர். ஒரு அங்கத்தினர் பாடுபட்டால்

அனைத்து அங்கத்தினரும் பாடுபடுகின்றனர். ஒரு அங்கத்தினர் கனப்படுத்தப்பட்டால் அனைத்து அங்கத்தினரும் மகிழ்ச்சி அடைகின்றனர் (1கொரி. 12:25,26). நமது மனித சரீரத்தில் ஒரு அங்கம் காயப்பட்டால், முழு சரீரமும் அக்கறை காட்டுகிறது. அதேபோல கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திலும் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் அனைவரும், ஒருவருக்கொருவர் அன்பையும், ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

## கேள்விகள்

1. கொலே. 1:18 கிறிஸ்து———யாகிய———க்குத் தலையாயிருக்கிறார் என்று சொல்லுகிறது.
2. மத். 28:18ல் கிறிஸ்துவுக்கு ————என்று போதிக்கப்படுகிறது.
3. கிறிஸ்துவின் சரீரத்தில் அனைத்து கிறிஸ்தவர்களும் சமமானவர்களா?
4. கிறிஸ்துவின் சரீரத்தில் எத்தனை தலைகள் உண்டு?
5. 1கொரி. 12:5-ல் நம்மில் அனைவருக்கும் சமமான ————என்று சொல்லப்படுகிறது.
6. கிறிஸ்துவின் சரீரத்தில் அனைத்து அங்கத்தினர்களும் சமமானவர்கள்தானா?
7. ஒருவனது இனம் அவனை உயர்ந்தவனாக்குமா?
8. ஆணைப்போலவே பெண்ணும் கிறிஸ்துவின் பார்வையில் சம அந்தஸ்து பெற்றவள்தானா?
9. வித்தியாசப்பட்ட பிராந்திய சபை அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு சரீரத்தை சேர்ந்தவர்கள்தானா?
10. 1கொரி. 12:25-ல் சரீரத்திலே————யிராமல் அமைத்திருக்கிறார்.

# பாடம்—6

## முழு சபையும் எவ்வித ஆளுகை அமைப்பை பெறுகிறது?

### புறக்குறிப்பு

1. பூமிக்குரிய (பொதுவான) ஆட்சி அமைப்பு இல்லை.
2. பூமியிலே தலைமையகம் இல்லை.
3. முழு சபையையும் ஆள முயற்சிப்பது பாவமாகும்.

### விவாதம்

**(1) பூமிக்குரிய (பொதுவான) ஆட்சி அமைப்பு இல்லை :** முழு சபைக்கும் அல்லது கிறிஸ்து-வின் சரீரத்திற்கும் பொதுவான ஆளுகையமைப்பு ஒன்று பூமியிலே இல்லை. பரலோக தலைமைத்துவத்தையும், பரலோக அதிகாரத்தையும் இது பெற்றிருக்கிறது. (மத். 28:18). இவ்வகையில் இது நாமகரன கூட்டங்களிலிருந்து வித்தியாசப்பட்டது. அவர்கள் போல் அல்லது ஆர்ச் பிஷப்புகளை தலையாக கொண்டுள்ளனர். மனிதர்களால் எழுதப்பட்ட கொள்கைப் புத்தகங்களையும், ஜெப புத்தகங் களையும் தங்களின் ஆலோசனைகளுக்கும், மரபு வழி உபதேசங்களுக்கும் அதிகாரமாக கொண்டுள்ளனர். ஆனால் வேதமோ கிறிஸ்துவாலேயன்றி வேறொரு மனித அதிகார மில்லை என்று அழைக்கிறது. (எபேசி 1:21-23). அனைத்து அங்கத்தினர்களையும் ஆளும் அதிகாரிகளாக கிறிஸ்துவின் சரீரத்தில் அமைப்பு பெறுவதில்லை. மாவட்டத்தலைவர் களாகவோ, வைதீக சபைகளாகவோ, பிரிவு அமைப்பு களாகவோ எதையும் இது பெற்றிருப்பது இல்லை. இதன் அங்கத்தினர்கள் ஒன்றாக கூடி, அதன் காரியங்களை முடி வெடுப்பதில்லை. இவைகளெல்லாம் மனிதர்களால்

கொண்டுவரப்பட்ட தூய்மை கேடுகளும், மாற்றங்களுமேயாம், அனைத்து கிறிஸ்தவர்களும் பிற கிறிஸ்தவர்களுடனும், கிறிஸ்துவுடனும் ஐக்கியம் கொண்டுள்ளார்களேயன்றி, பூமிக்குரிய முறையில் (பிராந்தியங்களுடன்) இணைக்கப்படுவதில்லை. கிறிஸ்துவுக்கு கீழ் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிராந்திய சபையும் சுய சார்பையும் சுயாதீனத்தையும் பெற்றுள்ளனர். எனவே முழு சபையும் பூமியிலே பொதுவான ஆளுகை, (ஆட்சி) அமைப்பை பெற்றிருப்பதில்லை.

**(2) பூமியிலே தலைமையகம் இல்லை :**

தலைவர் இருக்கும் இடத்திற்குப் பெயரே தலைமையகம் எனப்படும். இயேசு தமது சபைக்கு, தலைவராயிருப்பதால், பரலோகமே அதன் தலைமையகமாகும். (எப். 12:2). நாமகரமான கூட்டங்களுக்கெல்லாம் தலைமையகமாக ஒரு மையப்பகுதியை கொண்டுள்ளனர். இந்த மையப்பகுதியிலிருந்து கொண்டு அதன் தலைவர்கள் நாமகரண் கூட்டங்களை ஆளுகின்றனர். மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சபைகளுக்கும், கர்த்தரின் மெய்யான சபைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இது காட்டுகிறது. கர்த்தரின் சபைக்கு ஒரு பெரிய சபைக் கட்டிடத்தின் வளாகமோ அல்லது பள்ளியின் வளாகமோ (தலைமையகத்தின்) மையப்பகுதியாக அமைவதில்லை. ஒரு பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் பிராந்திய சபை பிற பிராந்திய சபைகளைக்காட்டிலும் உயர்ந்தல்ல. பூமிக்குரிய தலைமையகத்திற்கு செலுத்தும் கட்டண முறைகள் உதவவுமில்லை. எந்த மத்திய தலைமையகமும், பிரசங்கியார்களை அனுப்புவதோ அல்லது இடம் மாற்றுவதே கிடையாது. சபைகளின் கோட்பாடுகளை குறித்த தீர்மானங்களை எடுக்க அங்கத்தினர்களில் ஒரு பகுதியினர் எவ்வித குறிப்பிட்ட

இடத்தையும் அமைத்துக் கொள்வதில்லை. மாறாக, கிறிஸ்து இருக்கும் பரலோகமே கிறிஸ்துவின் சபையார்களின் தலைமையகமாகும்.

**(3) முழு சபையையும் (பூமியிலே) ஆள முயற்சிப்பது பாவமாகும்.**

தனிமனிதர்களும் பிராந்திய சபைகளும் கர்த்தருடைய சபையிலும் கூட அடிக்கடி நாமகரண கூட்ட அமைப்புகளை கொண்டுவர முயற்சிக்கலாம். ஒரு பெரிய பிராந்திய சபை அதன் பகுதிகளிலுள்ள சிறிய பிராந்தியங்களை ஆள முற்படலாம். இந்த ஆசையே பல நாடுகளினூடே காணப்படும் பல பிராந்தியங்களையும் அல்லது முழு சபையையும் ஆள முயற்சிக்கலாம். இன்று உள்ள அநேக அங்கத்தினர்களும் நாமகரண கூட்டங்களின் பின்னணியிலிருந்து வந்துள்ளமையால், சபையில் மனித ஆளுகை அமைப்பை அவர்களால் மறக்க கடினமாயுள்ளது அவர்கள் பெரிய பெரிய ஆலோசனை கூட்டங்களை நடத்த முற்படுகின்றனர். மனுஷர்கள் அநேகம் சபைகளை தம் கட்டுப்பாட்டில் கொண்டுவர முற்படுகின்றனர். அவர்கள் தங்களுக்கென அலுவலகங்களையும், (ஸ்தானங்களையும்), அதிகாரிகளையும் தங்களைச் சுற்றியுள்ள நாமகரண கூட்டங்களைப் போலவே கொண்டுவர விரும்புகின்றனர். வேதாகமத்தில் காணப்படுகின்ற தூய்மையான ஆளுகை அமைப்பை அவர்கள் கெடுக்கின்றனர். கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கப்பால் (வசனத்தை மிஞ்சி) நாம்போய்விடக்கூடாது. (2 யோவா 9). நாம் சுவிசேஷத்தை புரட்டாதிருப்போமாக (கலா. 1:6-9). நாம் வேதாகமத் திட்டத்தை கூட்டவோ குறைக்கவோ முற்பட வேண்டாம் (வெளி 22:18,19). முழு சபையையும் ஆள முயற்சிப்பது பாவமாகும்.

### கேள்விகள்

1. சபைக்கு தலைவர் எங்கே இருக்கிதார்?
2. கிறிஸ்துவின் சபை மாவட்ட வாரியாக பிரிக்கப்பட்டுள்ளதா?
3. எபேசியர் 1:22-ல் கிறிஸ்துவே ——— ——— ——— தலையாயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.
4. எபி 12:2-ல் கிறிஸ்து தேவனுடைய ———,———ல் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.
5. நாமகரண கூட்டங்களுக்கு பூமியிலே மையங்கள் (தலைமையகம்) உண்டா?
6. 2 யோவான் 9-ல் "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராது எவனும்——— ——— ——— அல்ல, "என்று சொல்லுகிறது.
7. கலா 1:7 சிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ——— ———
8. வெளி. 22:13 தேவனுடைய வசனத்துடன் ....... ஐ தடுக்கிறது.
9. வெளி. 22:19 தேவனுடைய வசனத்திலிருந்து ....... ஐ தடுக்கிறது.
10. கிறிஸ்துவின் சரீரம் பூமிக்குரிய ஆட்சி அமைப்பை உடையதா ?

## பாடம் 7

### சபை பூமியிலே எவ்வித ஆளுகை அமைப்பை பெறுகிறது:- புறக்குறிப்பு

1. பிராந்திய சபை மாத்திமே பூமிக்குரிய ஆளுகை அமைப்பை பெறுகிறது.

2\. பிராந்திய சபையின் நிரந்தர அமைப்பு வேதாகம உபதேசத்தை முற்றிலுமாய் கொண்டு அமைப்பு பெறுகிறது.

3\. பிராந்திய சபைகளுக்கு அப்புறம் பூமிக்குரிய அதிகாரிகள் யாருமில்லை.

## விவாதம்

(1) பிராந்திய சபை மாத்திரமே பூமிக்குரிய ஆளுகை அமைப்பை பெறுகிறது. கடந்த இரண்டு பாடங்களிலும், முழுசபையையும் ஆட்சி செய்கிற நிரந்தர பூமிக்குரிய ஆளுகை அமைப்பு இல்லை என்று பார்த்தோம். பிராந்திய சபைகளில் மாத்திரமே ஆளுகை அமைப்பும் அதனைச்சார்ந்த ஆளுனர்களும் உள்ளனர். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவிலிருந்து ஆள் அனுப்பி மூப்பர்களை வரவழைத்தான் (அப். 20:17). அவர்களிடம், பரிசுத்த ஆவி அவர்களை கண்காணிகளாக வைத்த மந்தை (சபை) முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி கூறினார் (இப். 20;28). பரிசுத்த ஆவியானவர் மட்டுமே பிராந்திய சபைகளில் கண்காணிகளை ஏற்படுத்துகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய முழு சபைக்கும் பொதுவான கண்காணிகளை நியமித்ததாக வேதம் கூறுவதில்லை. 1பேதுரு 5:2-ல், அவர்களுக்குள் இருக்கிற தேவனுடைய மந்தையை போஷித்து காப்பாற்ற வேண்டும் என்று மூப்பர்களுக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் தாங்கள் நியமிக்கப்பட்டிருக்கும் பிராந்திய சபையையன்றி வேறு பிராந்தியங்களின் மீது அதிகாரம் பெற்றிருக்கவில்லை. மேற்குறித்த வசனங்கள் பிராந்திய சபைகளை நடத்துகின்ற ஆளுனர்களைப்பற்றி மட்டுமே போதிக்கின்றன. சில வேளைகளிலே மனிதர்கள் ஆளுகை அமைப்பைக் குறித்த தங்களின் திட்டம் சிறந்தவையாக இருக்கும் என நினைக்கலாம். முழு சபையையும் தங்கள் கட்டுப்பாட்டின் ஆளுகைக்குள் கொண்டுவர விரும்பலாம்.

ஆனால்தேவனுடையபைத்தியம் எனப்படுவது மனுசருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது (1 கொரி. 1:25) பிராந்திய சபைகள் மட்டுமே பூமிக்குரிய ஆளுகை அமைப்பை பெறுகிறது என்பதற்கு அநேக நல்ல காரணங்கள் உள்ளன. தேவனுடைய திருப்பிட்ட மனிதன் மீதத்து, தேவனுடைய ஞானத்தை கனம் பண்ணி, தேவனுடைய திட்டத்தை பின்பற்றவேண்டும். பிராந்திய சபைகள் மாத்திரமே பூமிக்குரிய ஆளுகை அமைப்பை பெறுகிறதே [illegible]

## (2) பிராந்திய சபையின் நிரந்தர அமைப்பு வேதாகமம் உபதேசத்தை கைகொண்டு அமைப்பு பெறுகிறது:

வேதவசனங்களில் நிரந்த ஆளுகைகள் சபையின் ஆளுகைகள் என்று பேசும்போதெல்லாம், அவைகள் பிராந்திய அமைப்புகளை மட்டுமே குறிக்கும்.. 1 கொரி. 12:28-ல் "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" என வேதம் கூறுகிறது. ஆனால் அற்புதங்களை செய்ய ஏவிய பரிசுத்த ஆவியின் வரங்கள் தற்காலிகமானவை. 1 கொரி 13:8-10-ன்படி நிறைவாகிய வெளிப்பாடாகிய வேதாகமம் வந்தபோது, குறைவானவை ஒழிந்து போகும். சபையின் நிரந்தர ஆளுகைகள் தெரிந்தன. சபையில் நியமிக்கப்படுகின்ற மூப்பர்களுக்குரிய பதவிகள் அற்புத வல்லமைகளை சார்ந்திருக்கவில்லை. சபையின் மூப்பர்களுக்குரிய தகுதிகளை நாம் பார்க்கும்போது, அற்புதங்கள் செய்யும் வல்லமைகளைக் குறித்து ஒன்றும் குறிப்பிடப்படுவதில்லை. அற்புதங்களைச் செய்யும் சக்தி இல்லாமலேயே மனுசர்கள் மூப்பர்களாயிருக்கலாம்.

சபையின் அனைத்து ஆளுகை செய்கிற மனுசர்களும் அந்தந்த பிராந்திய சபைகளுக்கு மாத்திரமே முழு சபைக்குமே தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் ஆகிய பதவிகள் ஒழிந்து போயின. ஆனால் சபைகள் தோறும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர் (அப். 14:23). பட்டணங்கள் தோறும் மூப்பர்களை நியமிக்க தீத்து கிரேத்தா தீவிலே விடப்பட்டான். (தீத்து1:5) இந்த வசனங்கள் கிறிஸ்துவின் முழு சரீரத்திற்கும் அல்லது, ஒவ்வொரு பிராந்திய சபைகளுக்கு மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதை காட்டுகிறது. பரிசுத்தாவி கண்காணிகளாக நியமித்த மந்தையைக் குறித்து எபேசு பட்டணத்து மூப்பர்கள் எச்சரிக்கையாயிருக்கும்படி கூறப்பட்டனர். (அப். 20:28). இந்த மந்தை என்பது எபேசு பட்டணத்தில் இருந்த பிராந்திய சபையாகும் (அப். 20;17). மூப்பர்கள் தங்களிலுள்ள மந்தைகளை கண்காணிப்பு செய்யும்படி கட்டளையிடப்பட்டனர் (1 பேதுரு 5:23). முழு சபையையும் கண்காணிக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சபையின் நிரந்தர ஆளுகைகளைக்குறித்து தொடர்ந்து நாம் படிக்கும் போது, அது (ஒவ்வொரு தனிப்பட்ட) பிராந்தியங்களுக்கு மட்டுமே என்பதை காணப்போகிறோம். சபையின் நிரந்தர ஆளுகை அமைப்பைக் குறித்து பேசுகின்ற வசனங்களெல்லாம், பிராந்திய சபைகளின் அமைப்பையே பேசுகின்றன,

**3) பிராந்திய சபைகளுக்குப்பால் பூமிக்குரிய அதிகாரிகள் யாருமில்லை. இயேசு கிறிஸ்துவே இன்னும் பரலோகத்திற்குரிய தலையாயிருக்கிறார்.** கர்த்தருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளுமே இன்னமும் தொடர்ந்து சபைகளில் முதலிடம் வகிக்கின்றனர். ஏனெனில், அவர்கள் மூலமாய் ஏவப்பட்ட

வார்த்தைகளையே நாம் இன்றைய அதிகாரமாய் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் முழு சபையின் இந்த அதிகாரங்களெல்லாம் பரலோகத்தில் உள்ளன. அவர்களுக்கு என பூமிக்குரிய முகவர்களோ வம்சா வழியினரோ இல்லை. அனைத்து சபை ஆளுகை அதிகாரிகளும் இன்று பிராந்திய சபைகளில் மட்டுமே உள்ளனர். வசனங்கள் இவைகளைக் குறித்து அமைதியளிப்பதை வைத்தே நாம் இவைகளை அறிந்து கொள்ள இயலும். பிராந்திய சபைகளிலுள்ள அதிகாரிகளையின்றி வேறே ஆளுகைகளை வேதம் கற்பிப்பதில்லை. வேதாகமம் சகல நற்கிரியைகளையும் செய்ய நம்மை தகுதியுள்ளவர்களாக்குவதால் முழுசபைக்கு தேவன் பொதுவான அதிகாரிகளை இன்று தேவன் நியமிப்பதில்லை என்பதை நாம் அறிவோம் (2 தீமோ 3:16,17). வேதம் பேசுகின்ற இடத்திலே நாம் பேசுவோம்; வேதம் அமைதியளிக்குமிடத்தில் நாமும் அமைதியாயிருப்போம். நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் மாத்திரமே நிலைத்திருந்து எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாதிருப்போமாக.

(2 யோவான் 9).

## கேள்விகள்

1. அப். 20:17-ல் பவுல்——— —————————பட்டணத்து மூப்பர்களை வரவழைத்தான்.
2. அப் 20:28-ல்——— ———மேய்ப்பதற்கு பரிசுத்தாவி "உங்களை——— -- ———வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்லப்படுகிறது.
3. 1 பேதுரு 5:2-ல், மந்தையை————————செய்யுங்கள் என்று சொல்லப்படுகிறது.
4. முழு சபையும் பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதா?

5. சபையின் நிரந்தர ஆளுகை அதிகாரிகளெல்லாம் ——— ——— சபைகளில் மட்டுமே உள்ளனர்.

6. நிரு[illegible] வெளிப்படுத்[illegible] [illegible] [illegible]

[illegible]த்தி[illegible]

7. [illegible]

[illegible] வேண்டுமா[illegible]

8. அப். 14:23-ல் ——— ——— சபைகளிலே அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி என்று சொல்லுகிறது.

9. தீத்து 1:5-ல் "——— ———தோறும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர்" என்று சொல்லுகிறது.

10. பிரபஞ்சத்திய சபைகளுக்கப்பால் ஆழிக்குரிய ஆளுகை அதிகாரிகள் உண்டா?

## பாடம் 8

## அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் யார்?

### மனக்குறிப்பு

1. சபையின் ஸ்தாபித நாட்களிலேயே அவர்கள் விசேஷித்த ஆளுகை அதிகாரிகளாக இருந்தனர்?

2. அவர்களின் அற்புதம் செய்யும் சக்தி ஒழிந்து போயிற்று.

3. அவர்கள் தற்காலிகமானவர்களேயன்றி நிரந்தரமானவர்களல்ல.

### விவாதம்

(1) அவர்கள் சபையின் ஸ்தாபித நாட்களிலேயே விசேஷித்த ஆளுகை அதிகாரிகளாக இருந்தனர். பூமியிலுள்ள அனைத்து பொருட்களுமே அற்புதமாய் [illegible]யின் மனிதர்களும் உலகமும் அற்புதமாக உண்டாக்கப்பட்-

[illegible] இன்று [illegible] அற்புதமில்லாமல் [illegible] அற்புதங்களை [illegible] இன்றும் அற்புதங்களில்லாமல் [illegible] முதலில் அற்புதங்களைப் [illegible] இன்றும் அற்புதங்களில்லாமல் [illegible]

அப்போஸ்தலர்கள் சபையின் ஸ்தாபித காலத்திலே அற்புதங்களைச் செய்யும் [illegible] வல்லமையைப் பெற்றிருந்தனர். தேவன் அவர்களுக்கு [illegible] படுத்தும் [illegible] சபையின் ஆரம்பகாலத்தில் [illegible] தேவனுடைய வார்த்தையைக் கொடுத்தார். [illegible] அவர்களை 'சகல சத்தியத்திற்குள்ளும்' வழிநடத்துவார் என இயேசு அவர்களுக்கு வாக்களித்தார் (யோவான் 16:13). அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் சபையின் ஸ்தாபிதத்திற்கு அல்லது ஆரம்பத்திற்கு தேவைப்பட்டனர். (எபேசியர் 2:20). அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் முதலாவது தேவனானவர் நியமித்தார் என்று வேதம் கூறுகிறது (1கொரி. 12:28). அவர்கள் தங்கள் அப்போஸ்தலர் தகுதியை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபடுத்தினர் (2கொரி. 12:12). அவர்களின் பிரசங்கம் தேவனிடத்திலிருந்து மட்டுமே வந்தவை என்பதை அவர்களின் அற்புதங்கள் உறுதிசெய்தன (எபி. 2:3,4). சபையின் ஆரம்பகாலத்தில் இந்த ஆளுகைகளும், ஆளுகை அதிகாரிகளும் அவசியமானவர்களாயினர். ஆனால் அவர்களின் பதவிகளுக்கும் அற்புதங்களுக்கும் இன்று அவசியமில்லை.

**(2) அவர்களின் அற்புதம் செய்யும் சக்தி இன்று ஒழிந்து போயிற்று :** பூமியிலே சபைகளில் இன்று அப்போஸ்தலர்கள் இல்லை என்பதை நாம் அறிவோம். ஏனெனில் அற்புத வல்லமைகள் எல்லாம் இன்று ஒழிந்து போயின. அற்புதங்களின் தேவைகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிய பின் அந்த வல்லமைகள் ஒழிந்துபோக வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். தீர்க்கதரிசனங்கள் அந்நிய பாஷைகளில் பேசுதல், அற்புதங்களினால் உண்டாகும் அறிவு அனைத்தும் ஒழிந்து போகக் கூடியவைகளாயிருந்தன (1கொரி 13:8-10). இவைகள் யாவும் தேவனுடைய நிறைவான வெளிப்பாடாகிய வேதாகமம் வரும்போது, ஒழிந்து போக வேண்டியவைகளாயின. விசுவாசத்தின் ஒரு பகுதி நிறைவேறும் வகையில் மட்டுமே தேவன் இந்த வரங்களை கொடுத்தார் (எபேசி. 4:8,11-13). இப்பொழுது வேதாகமம் பூர்த்தியடைந்து, தேவனுடைய குமாரனை பற்றிய நிறைவான அறிவை பெற்றிருக்கிறோம். பரிசுத்தவான்களுக்காக ஒரே முறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம் இதுவே. இயேசு தேவனுடைய குமாரன் என்ற உண்மை அற்புதங்களினால் நிரூபிக்கப்பட்டன (யோவா. 20:30,31) ஒருமுறை உறுதி செய்யப்பட்ட காரியம் மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட வேண்டியதில்லை தேவனுடைய சத்திய வசனம் ஒரே தடவை உறுதி செய்யப்பட்டாயிற்று. ஒரு முறை உறுதியாக்கப்பட்ட வசனம் எப்போதைக்கும் உறுதியாக்கப்பட்டதே. இன்று வசனம் எந்த நற்கிரியையும் செய்ய நம்மை தகுதியுள்ளவனாக்குகிறது (2தீமோ. 3 : 16,17). அப்போஸ்தலர்களின் அற்புதம் செய்யும் வல்லமை அதன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டமையால், அது ஒழிந்து போயிற்று. அப்போஸ்தலர்களின் அற்புதம் செய்யும் வல்லமை ஒழிந்து போனபடியால் இப்பொழுது பூமியிலே அப்போஸ்தலர்கள் யாரும் இல்லை.

(3) **அவர்கள் தற்காலிகமானவர்களேயன்றி நிரந்தரமானவர்களல்ல :** அற்புத வரங்களெல்லாம் சபையின் அற்புத தோற்றத்திற்கென கொடுக்கப்பட்டவை. இந்த வரங்கள் அப்போஸ்தலர்களாகவும் தீர்க்கதரிசிகளாக-வுமிருக்கத்தகுந்த வல்லமையை மனிதர்களுக்கு அளித்தது. ஆனால் அற்புத வரங்கள் ஒழிந்து போய், தீர்க்கதரிசன வரங்கள் ஒய்ந்து போயின. ஆதலால் இன்று அப்போஸ்-தலராக தீர்க்கதரிசிகளாக இருக்கத் தேவையான வல்லமையு மில்லை, இன்றைக்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் தேவையுமில்லை. இந்த பதவிகள் நிரந்தரமானவைகளல்ல. அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வாரிசை தேவன் நியமிக்க எண்ணியதுமில்லை. அவர்களின் ஸ்தானங்-களெல்லாம் சபையின் ஸ்தாபிதத்திற்கேயொழிய, அதன் பரவுதலுக்கல்ல. நாம் வேதாகமத்தை விசுவாசிப்பதினாலே-யே. அற்புதங்கள் நடந்தன என்பதையும், அப்போஸ்தலர்-களும் தீர்க்கதரிசிகளும் வாழ்ந்தனர் என்பதையும் விசு-வாசிக்கிறோம். அதே காரணத்தினால் தான் அற்புதங்கள் ஒழிந்து போயின என்பதையும் அப்போஸ்தலர்களும் தீர்க்க-தரிசிகளும் இப்பொழுது இல்லை என்பதையும் நாம் விசு-வாசிக்கிறோம். வேதாகமம், அற்புதங்கள் நடந்தன என்-பதையும், அவைகள் ஒழிந்து போயின என்பதையும் தெளி-வாக்குகின்றது. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் வாழ்ந்தார்கள் என்பதையும் இங்கு இப்போது அப்போஸ்-தலர்கள் இல்லை என்பதையும் அதே வேதாகமம் தெளிவாக காட்டுகிறது. ஒரே வேதாகமமே இரண்டையும் போதிக்-கிறது இதனால் தான் சபையில் இன்று அப்போஸ்தலர்-களையோ தீர்க்கதரிசிகளையோ நாம் காணுவதில்லை. இவைகள் தற்காலிகமானவைகளேயொழிய நிரந்தர பதவி-களன்று. இன்று யாராகிலும் தங்களை அப்போஸ்தலர்கள் என்றோ தீர்க்கதரிசிகள் என்றோ கூறினால் அது தவறு.

(வெளி. 2:2). ஆரம்பத்திலிருந்தே கள்ள அப்போஸ்தலர்களோடும், அடையாளங்களோடும் மனிதர்கள் தோன்றுவர் (2தெச. 2:8,9). அவர்களில் அநேகர் அடையாளங்களையும் பலத்த செய்கைகளையும் செய்வதாக கூறுவர். ஆனாலும் இயேசு அவர்களை ஒருக்காலும் அறியவில்லை என்பார் (மத். 7:22,23). ஆதி சபையிலே அப்போஸ்தலர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களேயன்றி நிரந்தரமானவர்களல்ல.

### கேள்விகள்

1. ஒரு காலத்தில் அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டன என்று வேதம் கூறுகின்றதா?
2. அற்புதங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று வேதம் கூறுகின்றதா?
3. அப்போஸ்தலர்கள்——————க்குள்ளும் வழிநடத்தப்படுவார்கள் என்று யோவா. 16:13 கூறுகிறது.
4. சபை——————காலத்திலேயே அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் இருந்தார்களென எபேசி 2:20-ல் சொல்லப்படுகிறது.
5. 1 கொரி. 12:28-ல் தேவனானவர் சபையிலே ——————— அப்போஸ்தலர்களையும் —————— ஏற்படுத்தினர்.
6. 2கொரி. 12:12-ல், அப்போஸ்தலர்கள் தங்களின் அப்போஸ்தல தகுதிக்குரிய —————— களை காட்டினர்.
7. எபி. 2:3,4-ல் தேவன் —————— இருந்து ———————————சாட்சி கொடுத்தார் என்று சொல்லுகிறது.
8. யூதா 3-ல் பரிசுத்தவான்களுக்கு—————————— ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் என்று சொல்லுகிறது.

9. வெளி 2:2-ல் எப்படிப்பட்ட அப்போஸ்தலரை குறித்து பேசுகிறது?

10. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் ஸ்தானம் நிரந்தர-மானவையா?

## பாடம்—9

**பிராந்திய சபைகள் எவ்வித ஆளுகை அமைப்-பை பெறுகின்றன.**

### புறக்குறிப்பு

1. ஒவ்வொரு பிராந்திய சபையும் சுய ஆளுகை அமைப்-பை பெற்றவை.

2. இதில் ஆளும் மனிதர்கள் (அதனதன்) ஒரு பிராந்திய சபைக்குள் மட்டுமே ஆளுகை செய்ய முடியும்.

3. பிராந்திய சபைகளெல்லாம் கூட்டாட்சி அமைப்புள்ள-வைகளல்ல.

### விவாதம்

**(1) ஒவ்வொரு பிராந்திய சபையும் சுய ஆளுகை அமைப்பை பெற்றவை. :** கிறிஸ்துவின் சபையார் நாமகரண கூட்டங்களின் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் தேவனுடைய திட்டமாகிய வேதாகமத்தை மாத்திரம் கண்டிப்பாக பின்பற்ற முற்படு-வார்கள். புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டபடியே சபையை மீட்டு அமைக்க மன்றாடுகிறவர்கள். கர்த்தர் தமது சபைக்கு வைத்துள்ள திட்டத்தின் அனைத்து பகுதியையும் மீட்டு அமைக்கும் பணியில் இருப்பவர்கள் இவர்கள். இப்படி மீட்டு அமைக்கப்படும் பகுதிகளில் ஒன்றே பிராந்திய சபைகளில் வசன ரீதியான ஆளுகை அமைப்பு ஆகும். புதிய ஏற்பாட்டில் பேசப்படும் ஆளுகை

அமைப்பு முன்றமை நாம் கற்றுக்கொள்ளும்போது, அதே மாதிரி நாம் இன்னும் பின்பற்றுவோமாக. வசன ரீதியான ஆளுகை அதிகாரிகள் அனைவரும் இன்று (புதிய ஏற்-பாட்டுச்) சபையில் உள்ளனர் என்பதை கடந்த பாடம் நமக்கு விளக்கி காட்டியது பிராந்திய சபைக்கு புறம்-பேயான அதிகாரிகள் இன்று யாருமில்லை என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். இந்த பிராந்திய சபை-களெல்லாம் எந்த ஒரு கூட்டு கழகத்திற்கும் அல்லது ஆட்சி செய்யும் குழுவுக்கும் கீழ் கட்டுப்பட்டவர்களெல்லாம் ஒவ்வொரு பிராந்திய சபையும் அதனதன் ஆளும் அதிகாரி-களை சுயமாக ஏற்படுத்திக் கொள்கின்றன. எந்த ஒரு உயர் மட்ட குழுவும் சபைகளை ஆளுகை செய்வதில்லை. ''தன்னாட்சி'' என்ற வார்த்தையின் பொருள் ''சுய ஆளுகை'' என்பதாகும் தன்னாட்சி சபை தனக்குத்தானே ஆளுகை செய்து கொள்கிறது. அது தனக்கு மேலாக எந்த ஒரு உயர்மட்ட குழுவையும் உடையதல்ல. அது தனது சுய ஆளுகை அதிகாரிகளை தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. தனது சுய சுவிசேஷகர்களை ஏற்படுத்துகிறது, சுய பொரு-ளாதாரத்தை பராமரிக்கிறது, தனது ஒழுங்கற்றுத்திரியும் அங்கத்தினர்கள் மீது சுயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது. அது எல்லாவகையிலும் மனித மேற்பார்-வைக்கு அப்பாற்பட்டு இயங்குகிறது. அது கிறிஸ்துவுக்கு மாத்திரம் கீழ்படிந்திருக்கிறது. இதன் ஆளுகைக்கு உரிய அதிகாரப் (சட்ட) புத்தகம் வேதாகமம் மட்டுமே. அது தனது சுய ஆராதனை ஒழுங்குகளையும், பொருளாதார கூட்டங்களையும், ஊழியத் திட்டங்களையும் வகுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன்னாட்சி அல்லது சுய ஆளுகை அமைப்பை பெறுவதன் மூலம் புதிய ஏற்பாட்டுச்சபையில் ஆளுகையில் மீட்டு அமைக்க வேண்-டும்.

**2. இதில் ஆளும் மனிதர்கள் ஒரு பிராந்திய சபைக்குள் மட்டுமே ஆளுகை செய்ய முடியும்:** வச்சன் ரீதியான அமைப்புக்கு அப்பால் ஒரு பிராந்திய சபைக்குமேல் ஆளுகை அதிகாரிகள் ஆட்சி செய்ய முற்பட்டதால்தான் முதல்வழி விலகிபோதல் ஆரம்பித்தது. இந்த மாற்றங்கள் வேதாகமத்திற்கு முரணாய் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பிராந்திய சபைகளின் மேல் மாவட்ட ரீதியான அதிகாரிகளை நியமிக்க வழி வகுத்தது. இந்த நடைமுறைகள் பின்னர் போப் வரைக்கும் கொண்டு சென்றது. வேதாகம திட்டப்படி ஆட்சி அமைப்பை மீட்டு அமைக்க வேண்டுமானால் ஒரு பிராந்திய சபைக்குமேல் ஆளும் நபர்கள் இருக்கக்கூடாது. தேவனுடைய திட்டம் பின்பற்றப்பட்டிருக்குமேயானால் விலகிப்போன ரோமன் கத்தோலிக்க சபை என்று ஒன்று உருவாகியிருக்காது. அநேக 'பிராட்டஸ்டன்ட்' சபைகளும் கூட ஒரு பிராந்திய சபைக்கு மேல் ஆளும் அதிகாரிகளை பெற்றிருக்கின்றன. இவர்கள் ''மூகவர்களாகவும்'' அல்லது ''பார்வையிடும் பிஷப்புகள்'' என்றும் அழைக்கப்படுகின்றனர். அநேக பிராந்திய கூட்டத்தாரை மேற்பார்வையிடுவதே இவர்களின் பணி அவர்கள் தங்கள் மாவட்டத்தில் அல்லது பிராந்தியத்தில் சபைகள் தோறும் அடிக்கடி பிரகியாணம் செய்வர். ஆனால் வசனப்படியான ஆளும் அதிகாரிகள் தங்கள் ஒரு பிராந்திய சபையை மட்டுமே ஆளுகை செய்ய வேண்டும். கிறிஸ்துவின் சபையின் பெரிய சபையினர் தங்களைக்காட்டிலும் சிறிதாக உள்ள சபைகளை ஆளும்படி சோதிக்கப்படுகின்றனர். நகர சபைகள் கிராம சபைகளை ஆள முயற்சிக்கலாம். தங்கள் மூப்பர்களை அனுப்பி பலவீனமான சபைகளை ஆளச் செய்யக்கூடும். ஆனால் இது நாமகரன கூட்டத்தாரின் திட்டமே. சபையின் அதிகாரிகள் தங்கள் சபையை மேற்பார்வையிடுவார்கள் என்று

தெரிந்தாலே எந்த பிராந்தியமும் தன்னாட்சியை செய்ய இயலாது.

**3. பிராந்திய சபைகளெல்லாம் கூட்டாட்சி அமைப்புள்ளவைகளல்ல :** கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களில் அநேகரும் பல பிரிவுக் கூட்டங்களிலே அநேக வருடங்களைக் கழித்தவர்கள். இந்த நீடித்த அனுபவம் உண்மையான சபையின் ஆட்சி அமைப்பை எளிதில் புரிந்து கொள்ள இயலாமல் தடுக்கிறது. தங்களின் முன்னிருந்த பிரிவு கூட்ட அமைப்பை போன்றே கிறிஸ்துவின் சபையின் ஆளுகை அமைப்பையும் கொண்டுவர விரும்புகின்றனர். ஆதலால் ஒரு வட்டாரத்திலுள்ள அநேக சபைகளின் கூட்டு ஆலோசனையை அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் பொதுவான அமைப்புகளையும், அதிகாரிகளையும் வைத்து பொதுகாரியலாய கருவூலத்தையும் விரும்புகின்றனர். தங்களின் சுய பிராந்திய ஆராதனைக்கப்பால் ''கூட்டு ஊழியத்தை'' செய்வதை அடிக்கடி அனுசரிக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டு நாட்களில் எந்த பிராந்திய சபைகளும் ஒருமித்த கூட்டு ஊழியத்தை செய்ததாக இல்லை. ஆட்சி அமைப்பிலே ஒவ்வொன்றும் (ஏழு சபைக்கு) சுயேச்சையாய் செயல்பட்டன. கிறிஸ்துவ ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் நிருபங்களை எழுதினார் (வெளி 1:11) ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் தனித்தனியாக அந் நிருபங்கள் அனுப்பப்பட்டன. அந்த பிராந்திய சபைகளெல்லாம் ஒரே வட்டாரத்தில் (ஆசியாவில்) இருந்திருந்தாலும், பிராந்தியங்களின் கூட்டாட்சி அமைப்பு இருக்கவில்லை. ஏழு சபைகளையும் பொதுவாய் ஆட்சி செய்யும் பொது குழு அதிகாரிகள் இருக்கவில்லை. ஒவ்வொரு பட்டணத்திலும் இருக்க ஒவ்வொரு சபையும் சுயாட்சியே நடத்தின. புதிய ஏற்பாட்டுத் திட்டத்தின்படி சபையின் ஆட்சி அமைப்பு அமையுமேயானால் பல பிராந்திய சபைகளின் கூட்டாட்சி அமைப்புக்கு இடமிருக்காது.

## கேள்விகள்

1. ''தன்னாட்சி'' என்ற வார்த்தையின் பொருள் ———

2. ''முகவர்கள்'' மேற்பார்வையிடும் பிஷப்புகள்'' ஆகிய ஆகிய பதவிகளைக் குறித்து வேதம் பேசுகிறதா?

3. வெளி 1:11-ல், —— ——— விலுள்ள ஏழு சபைகளுக்கு நிருபங்கள் எழுதப்பட்டன என்று சொல்லப்படுகிறது

4. தங்களின் முந்தைய நாமகரண கூட்டமைப்பு பழக்கங்களே நமது சகோதரர்களை, ஒன்று சேர்ந்த ——— ஆட்சி அமைப்பை விரும்பச் செய்கின்றன.

5. காலத்தினூடே பலப்பட்ட பெரிய சபைகள், பலவீனமான சிறிய சபைகளை ஆட்சி செய்யலாமா?

6. அநேக பிராந்திய சபைகளின் மீது ஆட்சி செய்யும் பொதுக்குழுவை வேதம் பேசுகிறதா?

7. புதிய ஏற்பாட்டு சபைகளெல்லாம் கூட்டாட்சி அமைப்பை பெற்றிருந்தனவா?

8. ஆரம்பத்திலிருந்தது போலவே, மீட்டு உருவாக்குதல் என்றால் என்ன?

9. மாவட்ட ரீதியான அதிகாரிகளின் அமைப்பே பிறகு ——— —— உருவாக வழி வகுத்தது.

10. 2 யோவான் 9-ம்வசனத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் ——————பிதாவையும் குமாரனையும் உடையவர்கள். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராவிட்டால் ——————உடையவர்கள் அல்ல.

# பாடம் - 10

## பிராந்திய சபைகள் எப்படி சுயாட்சி அமைப்பை பெறுகின்றன?

### புறக்குறிப்பு

1. சுய ஆளுகை
2. சுய உதவி
3. சுய ஊழிய விருத்தி

### விவாதம்

**1. சுய ஆளுகை** பிராந்திய சபைகள் தங்கள் சுய ஆட்சியை செய்ய முக்கிய வழிகளில், ஒன்று சுய ஆளுகையை தாங்களே அமைத்துக்கொள்ளுதலாகும். கடந்த அநேக பாடங்களில் இவைகள் தெளிவாக்கப்பட்டன. தங்களின் சுய ஆளுகை அமைப்பு உரிமையை தவற விடுதல் சபையின் சுதந்திரத்தையே இழப்பதாகும். சபைகள் தங்கள் சொந்த காரியங்களை கட்டுப்படுத்த தவறும்போது, தங்களின் பிற சுய அமைப்பு முறைகளையும் உரிமைகளையும் கூட தவற விடுகின்றன. வேற்று மனிதர்கள் தங்களை (தங்கள் சபையை) ஆள அனுமதிக்கும்போது, சபை தன்து தன்னாட்சி உரிமையை இழந்து விடுகிறது. ஆனாலும் தனது சொந்த காரியங்களை கட்டுப்படுத்துதல் மட்டுமே ஒரு பிராந்திய சபையின் சுயேட்சை அமைப்பாகாது. அநேக சபைகள் தங்கள் சுய தீர்மானங்களை எடுத்தாலும், பணம் போன்ற பொருளாதார விஷயங்களிலும், பிற விஷயங்களிலும் புறம்பேயிருந்து வருவதை மாத்திரமே நிரந்தரமாகக் கொண்டிருக்கின்றன. சுய ஆட்சி என்பது ஒரு சபையின் சுய உதவிகளை செய்து கொள்ளும் போதே பூரண சுயேட்சைத் தன்மையை (சுதந்திரத்தை) அடைகிறது.

எப்படியாயினும் ஒரு முக்கிய வித்தியாசத்தை நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிராந்திய சபை தனது சுயேட்சை தன்மையை விடாமல் புறம்பேயிருந்து வருகின்ற ஆட்சித்தன்மையை பெற முடியாது. ஆனால் ஒரு சபை புறம்பேயிருந்து வருகின்ற உதவிகளை, தனது சுயேட்சைத் தன்மையை விடாமல், தற்காலிகமாக பெற்றுக் கொள்ள முடியும். இதை நாம் வேதாகமத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். புறம்பேயிருக்கிற மனிதர்களிடமிருந்து ஆளுகை வருவதற்கான உதாரணத்தையும் நாம் புதிய ஏற்பாட்டில் எங்கேயும் காணமுடியாது. ஆனால், பிராந்திய சபைகள் பிற பிராந்திய சபைகளிடமிருந்து பணம் பொருளாதார உதவிகளையும் மற்றும் ஆவிக்குரிய உதவிகளையும் பெற்றிருப்பதை நாம் வாசிக்க இயலும் யூதேயா சபையின் கண்காணிகள் அல்லது மூப்பர்கள் அந்தியோக்கியா சபையிலிருந்து பண உதவிகளைப் பெற்றுக் கொண்டனர் (அப் 11 : 27 -30) பவுல் கொரிந்து பட்டணத்திலே பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது பிற சபைகளிடமிருந்து ஊதியத்தையும் பெற்றிருந்தார் (2 கொரி 11:8) பிலிப்பி பட்டணத்திலிருந்த பிராந்திய சபை, பவுலின் தேவைக்காக, மற்ற இடங்களின் ஊழியத்தினிமித்தம் ஒரு முறைக்கு மேல் உதவிகளை அனுப்பினர் (பிலிப் 4 : 15, 16) எனவே, பண உதவி போன்ற தற்காலிக உதவிகளை மட்டுமே ஒரு பிராந்திய சபை இன்னொரு பிராந்திய சபையிலிருந்து பெற்றதேயல்லாமல், ஆளுகை அமைப்பிலே தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவே எவ்வித உதவிகளையும் நாடவில்லை என்பதை வேதாகம உதாரணத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

2. **சுய உதவி :** பிராந்திய சபைகள் சுயேட்சையில் இயங்க மற்றொரு தேவ வழி சுய உதவியாகும். ',சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே பிலிப்பி பட்டணத்து மக்கள்

பண உதவிகளை தனக்கு செய்ததை பவுல் பாராட்டுகிறார் (பிலிப் 4 ; 15) ஒரு பிராந்திய சபை தேவன் எதிர்பார்க்கும் சுய பண உதவிகளை தாங்களே செய்து கொள்ளதாவரை, அது முழுமையான சுயாட்சி அமைப்பை பெற்றதல்ல தற்காலிகமாக வரும் வெளி உதவி சில வேளைகளில் அவசிய மேயானாலும், சுய உதவியை விரைவில் அடைந்தே ஆக வேண்டும். வெளி உதவிகளை பெறுகிறபொழுதெல்லாம். வெளியிலிருந்து வரும் ஆளுகையும் ஏற்படும் அபாயமுண்டு. சில சபைகள் பிறரை அணுகி தங்களுக்கான தீர்மானங்களை எடுக்கச் முயற்சிக்கின்றன. பிராந்திய சபைகள் தன்தன் சொந்த கால்களிலே நிற்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நடக்க பழக்கும்போது, குழந்தை தனது கால்களை தானே எடுத்து வைக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு குழந்தை தனது கால்களை தானே அடி எடுத்து வைக்காவிட்டால், அது ஒரு போதும் நடக்க பழகி கொள்ளாது. ஆனால் அது சுயமாய் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும், அது சிறப்பாக நடக்க கற்றுக் கொள்கிறது, அதுபோலவே தான் ஒரு பிராந்திய சபையும், ஆரம்பத்திலிருந்தே சில அடிகளை தாமாக எடுத்து, வைக்க முயற்ச்சிக்க வேண்டும். பொருளாதார அடிப்படையிலே அது பிறரால் சுமக்கப்படும் வரையில் தாமாக ஒருபோதும் நடக்க கற்றுக்கொள்ளாது. எவ்வளவாய் முயற்சியில் அடிகளை எடுத்து வைக்கிறதோ அவ்வளவாய் அது தாமாக நடக்க கற்றுக்கொள்கிறது. சுய அனுபவத்தால் சுய உதவியுடன் இயங்க அது ஆரம்பிக்கும். ஒரு தாய்க்கோழி தன் குஞ்சுகளுக்கு சுயமாய் உணவைத் தேட கற்றுக்கொடுக்கிறது. தானே தன் குஞ்சுகளுக்கான உணவை அது கண்டுபிடித்து கொடுக்கும்வரையில், குஞ்சுகள் ஒருபோதும் சுயமாய் உணவு தேட கற்றுக்கொள்ளாது. ஆனால் தாய்க்கோழி குஞ்சுகளை தங்கள் உணவைத்

தேடி உண்ண பலவந்தம் பண்ணும்போது, அக்குஞ்சுகள் சுயமாய் வளர்ந்து பலப்படும். ஆரம்பத்திலே சில குஞ்சுகள் தாமாகவே உணவைத்தேட மறுக்கும், ஆனாலும் தாய்க்கோழி குஞ்சுகளை கொத்தி, சண்டையிட்டு, தாமாக உணவைக்கண்டு பிடிக்கச் செய்யும். விரைவில் தாமாக இரை தேடுதலே சிறப்பு அம்சம் என்பதை அவைகள் உணர்ந்து கொள்ளும். அதுபோலவே சில பிராந்திய சபைகள் சுய உதவியைச் சந்திக்க பலவந்தம் பண்ணப்பட வேண்டும். சில வேளைகளில் கடிந்துகொண்டு கூட சுய உதவியில் இயங்க வைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படக்கூடும். ஆனால் பிராந்திய சபைகள் முயற்சிக்கும்போது, அவர்கள் நினைத்ததைக் காட்டிலும் சிறப்பாக தாங்கள் செயல்படுவதை உணர முடியும். அவைகள் வளர்ந்து பெருக இயலும் உண்மையான சுயேச்சை சுய உதவிகளைச் சார்ந்திருக்கிறது.

3. **சுய ஊழிய விருத்தி :** இதன் பொருள் சுயமாக தொடருதல் என்றும் கூறலாம். சுய ஊழிய விருத்தியடையும் சபை, தாம் முன்னேறுவதுடன் சுவிசேஷத்தை பரவச் செய்து வேறுபல பிராந்திய சபைகளையும் ஆரம்பிக்கின்றது தேவனுடைய வசனம் இராஜ்யம் அல்லது சபையில் வித்தாகும் (லூக் 8 : 11) தன்னில் உயிருள்ள எந்த வித்தும் ஒரு புதிய செடியை முளைப்பிக்கும். அது போலவே வேதாகமம், சபையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தேவையான சக்தியை கொடுக்கிறது. நல்ல இருதயங்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ளும்போது, பிராந்திய சபைகள் செழிக்கும்,ஒரு பிராந்திய சபை இன்னொரு பிராந்திய சபையை ஆரம்பிக்கவோ, அல்லது தாமேவளர்ச்சியடையவோ வெளியிலிருந்து வரும் ஆளுகையை எதிர்நோக்க வேண்டுவதில்லை. இம்முறையில், ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒரு வாழைமரத்தைப் போன்றது. ஒரு

முறை நடப்பட்ட உடனே, அது வெளி உதவி எதுவுமின்றி வளர சுய பெலனை பெற்றிருக்கிறது. விரைவில் அது புதிய கன்றுகளையும் (இடைக் கட்டைகள்) முளைப்பிக்க ஆரம்பிக்கின்றது' சுய ஊழிய விருத்தி என்பதன் பொருள் இதுவே.சபை சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது (தீமோ 3:11) ஒவ்வொரு பிராந்திய சபையும், சத்தியத்தை பரப்புவதிலே உதவி செய்ய வேண்டும். பிறகு இது வேறு புதிய பிராந்திய சபைகளை நாட்ட வழி வகுக்கும். பிற பகுதிகளிலும் இது சத்தியத்திற்கும் ஆதாரமளிக்கும் எருசலேமிலிருந்த சபை சிதறிப்போய் எங்கும் திரிந்து வசனத்தை பிரசங்கித்தார்கள் (அப் 8 :4) ஊழிய சங்கங்களுக்கப்பால் அல்லது நாமகரண கூட்டங்களின் அமைப்புகளுக்கப்பால் கர்த்தரின் சபை பெருக இயலும். கர்த்தருடைய சபையின் பிராந்தியகள் அனைத்தும், சுயாட்சி அமைப்பு, சுய உதவி, சுய ஊழிய ஆகியவைகளிலே சுயேட்சையாய் செயல்படலாம்.

## கேள்விகள்

1. சபை தற்காலிகமாக வெளியிலிருந்து தங்களின் ஆளுகை அமைப்பை பெற்றுக்கொள்வது வசன ரீதியானதா?
2. சபை புறம்பேயிருந்து தற்காலிக உதவிகளை பெற்றுக் கொள்வது வசன ரீதியானதா?
3. 2 கொரி 11 : 8-ல் ———— ———— சபைகளிலிருந்து உதவிகளை பெற்றுக் கொண்டதாக கூறுகிறது.
4. பிலிப்பிய சபை பவுலுக்கு ———— ———————— ஆகிய தடவைகளில் பவுலுக்கு உதவிகளை அனுப்பியது என்று பிலிப் 4 : 15, 16 சொல்லுகிறது.
5. பிலிப் 4 : 15-ல் சுவிசேஷத்தின் ———————— லேயே அம்மக்கள் பவுலுக்கு உதவிகளை செய்ததாக சொல்லுகிறது.

6. சுய உதவியில் பிராந்திய சபை இயங்க வேண்டும் என்பதற்கான இரண்டு உதாரணங்கள் ——————————————

7. சுய ஊழிய விருத்தி என்பது ——————————

8. லூக்கா 8: 11-ல் தேவனுடைய வசனம் —————— இருக்கிறது

9. 1 தீமோ 3:15-ல் சபையானது சத்தியத்திற்கு————ம் ———————— முமாயிருக்கிறது என்று சொல்கிறது.

10. அப் 8 : 4 சீஷர்கள் எங்கும் திரிந்து —————— பிரசங்கித்தார்கள்.

## பாடம்—11

**பிராந்திய சபைகள் தன்னாட்சி அமைப்பை பெற வேண்டும் என்று தேவன் ஏன் எதிர்பார்க்கிறார்?**

### புறக்குறிப்பு

1. வழி நடத்துனர்களையும் அங்கத்தினர்களையும் உருவாக்குகிறது.
2. கொடுத்தலையும் ஊழியம் செய்வதையும் அதிகரிக்கிறது.
3. வீழ்ந்து போதலை தடுக்கிறது.

### விவாதம்

**1. வழி நடத்துனர்களையும் அங்கத்தினர்களையும் உருவாக்குகிறது :** தன்னாட்சி அமைப்பு பெற்ற சபைகள் தேவன் ஏன் எதிர்பார்க்கிறார் என்பது நமக்கு தெரியாவிட்டாலும், நாம் வேதாகமத்தில் அதிகாரத்திற்கு கீழ்படிய வேண்டும் பிராந்திய சபைகளில் தன்னாட்சி அமைப்பு ஏன் தேவனின் திட்டமாயிருக்கிறது என்பதில்

உள்ள அநேக சிறப்புக்களை நாம் காண இயலும். ஒவ்வொரு பிராந்திய சபைகளிலும் அது வழி நடத்துபவர்களையும், அங்கத்தினர்களையும் உருவாக்குவதும் ஒரு காரணமாகும். வெளியிலிருந்து சபையின் ஆளுகை நபர்களை கொண்டு வரும்போதெல்லாம், பிராந்திய சபையின் ஆளுகை நபர்கள் அல்லது வழி நடத்துனர்கள் முன்னேற்றமடைய முடியாது. வெளியிலிருந்துவரும் ஒரு குழு வந்து ஒரு பிராந்திய பணிகளைச் செய்யும் பொழுதெல்லாம், அச்சபையின் அங்கத்தினர்கள் விரைவாக முன்னேற்றமடைய முடியாது. கிறிஸ்த்துவம், ஒரு நபரின் சிறப்புத் திறமைகளை வெளிக்கொணர வேண்டும். சபையின் ஆளுகை அமைப்பை தேவன் திட்டமிட்டதற்கு காரணம் ஒவ்வொரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களையும் நிறைவான நிலைக்கு முன்னேற்றமடையச் செய்வதே. சபைக்கான தீர்மானங்களை எடுக்க வெளி மனிதர்கள் அனுப்பப்படுவார்கள் என்பதை சபைஅங்கத்தினர்கள் உணர்வார்களேயானால், தங்கள் பகுதியில் தாங்கள் கஷ்டப்பட்டு எதையும் செய்ய முயலமாட்டார்கள். நாம்கரான கூட்டங்களில் பிராந்திய சபைகளின் முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பதில்லை (ரோமர் 15:14) அப்போஸ்தலனாகிய பவுல் ரோமா புரியில் இருந்த சகோதரர்களைப் பாராட்டிச் சொல்லும்போது, அவர்கள் நற்குணங்களால் நிரப்பப்பட்டவர்களாயும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வல்லவர்களாயுமிருப்பதை புகழ்ந்தார். ஆனால் எபிரேயர் 5:12-14-ல் அங்கத்தினர்களின் வளர்ச்சியின்மையை கடிந்து கொள்கிறார். இந்த அங்கத்தினர்கள் சபையில் நீண்டகாலமாக இருந்தவர்கள். இருந்தும் இன்னும் போதிக்கும் திறமையற்றவர்களாயிருந்தார்கள். ஆதலால் அவர்களுக்கு போதிக்கும் அளவு பயிற்சி கொடுப்-

புது அவசியம் என கூட்டிக்காட்டப்பட்டார்கள். போதிக்கப்படுவதால் நாம் போதிக்க கற்றுக் கொள்கிறோம்; சபையின் வழிநடத்தும் தன்மை அனுபவ ரீதியில்வர வேண்டிய ஒன்றாகும். தேவன், பிராந்திய சபைகளில் சுய சார்பு அடைந்தவர்களால் ஆளுகை செய்யும் நபர்களை சிறப்பாகவும், விரைவாகவும் முன்னேறச் செய்ய வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறார்.

**2. கொடுத்தலையும் ஊழியஞ் செய்தலையும் அதிகரிக்கிறது :** பிரிவுக் கூட்டத்தார், அவர்களின் சபையின் பணவரவு செலவு கணக்குகளையும், திட்டங்களையும், ஆளுகை அமைப்புகளையும் அடிக்கடி தலைமையகத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று கூறுவார்கள். ஆனால் தன்னாட்சி அமைப்பையுடைய கிறிஸ்துவின் சபைகள் இப்படிப்பட்ட பூமிக்குரிய தலைமையத்தைப் பெற்றிருப்பதில்லை பணவரவு, செலவு திட்டத்தில் ஒவ்வொரு பிராந்திய சபையும் அதை எப்படி கர்த்தருடைய ஊழியத்திற்கு பயன்படுத்துவது என்பதையும் தாங்களே தீர்மானிக்க வேண்டும். மேற்பார்வையிடும் அதிகாரிகளோ அல்லது தலைமைய அமைப்புகளோ இதற்கு உதவி செய்வதில்லை. இத்திட்டம் நல்ல முறையில் காணிக்கை அளிக்கச் செய்கிறது; ஒரு பிராந்திய சபையில் அங்கத்தினர்கள்; தாங்கள் கொடுக்கும் பணம் முழுவதும் தங்கள் பிராந்திய சபையில் நிர்மாணப் பணிகளுக்கே பயன்படுகிறது என்பதை கண்ணுறும்போது இன்னும் அதிகமாய்க் கொடுக்க முற்படுகிறார்கள். நமது சொந்த கிராமத்து சபையின் தேவைகளை அவர்கள் பார்க்கிறார்கள். தான் அளிக்க வேண்டிய பணத்தின் தேவைகளையும் அவர்கள் பார்க்கிறார்கள். தான் அளிக்கும் வெகுமதிகளினால் இத்-

தேவைகள் சந்திக்கப்படலாம் என்பதை உணர்கிறார்கள். தங்களை தியாகம் பண்ணி கொடுக்கத்தக்கதாக அங்கத்தினர்களை ஊக்குவிக்க சிறந்த வழி, கொடுப்பவர்கள் முன்பாக தேவையின் முக்கியத்துவத்தை வைப்பதேயாகும். தேவனுடைய திட்டம் சபையின் பணவரவுக் காரியங்களில் கொடுப்பவரை ஊக்குவிக்கிறது. இதுபோலவே சபையின் மற்ற அனைத்து ஊழியங்களும் சரியாக நடைபெற தேவனுடைய ஏற்பாடு உதவுகிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் அங்கத்தினரும் தங்களைக்காட்டிலும் வேறு எந்த அமைப்பும் செயல்பட போவதில்லை என்பதை பார்க்கிறார். தாமே பிராந்திய சபைக்கு பொறுப்புள்ளவர் என்பதை உணர்கிறார். ஏதாவதொரு பணியில் தன்னை ஈடுபடுத்தவேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. இதை வேறு குழுக்கள் செய்ய வேண்டும் என்பதற்குப்பதில் பிராந்திய சபையினரே செய்ய வேண்டும் என்று உணர்கிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன்னாட்சி முறையில் விருத்தி அடைந்து, கொடுக்கவும் ஊழியஞ் செய்யவும் செய்கின்ற தேவனுடைய திட்டம் சிறந்த திட்டம்.

3. **வீழ்ச்சியடைதலை தடுக்கிறது :** அநேக கற்களை ஒரு துண்டுக் கயிற்றினால் சேர்த்து கட்டும் போது அவைகள் தனிப்பட்டவைகளாயிராமல் ஒன்றாக இணைக்கப் பட்டவைகளாகின்றன. அதில் ஒருக்கல் நதியில் விழுந்தாலும் மற்ற கற்களையும் தன்வசம் இழுத்துக்கொள்ளும். ஆனால் இந்தக் கற்கள் சேர்த்து கட்டப்படாமல் இருந்தால், ஒரு கல் விழுந்தாலும் மற்ற கற்கள் விழாது. ஏனெனில் அவை தனித்திருக்கின்றன. இந்த ஒப்புவமை சபைகளில் தன்னாட்சிக்கு மேலும் ஒரு காரணத்தைக்

காட்டுகிறது. பிரிவு கூட்டங்களில் ஆளுகை அமைப்பு பிராந்திய சபைகளை இணைத்துக்கட்டி, அவைகளின் சுதந்திரத்தை பிரித்துக்கொள்கின்றன அப்பொழுது அவைகளில் ஒரு பிராந்திய சபை வீழ்ச்சி அடைந்தாலும் மற்ற அனைத்து பிராந்திய சபைகளும் அதோடு சேர்ந்து வீழ்ச்சி அடைகின்றன. அல்லது மேற்பார்வையிடும் அதிகாரிகள் ஒரு பிராந்திய சபையில் கள்ள உபதேசத்தை போதித்தாலும் அது ஏனைய சபைகளும், அக்கள்ள உபதேசங்களை பின்பற்றுகின்றன. தேவனுடைய திட்டம், கள்ள உபதேசங்களையும் வீழ்ச்சியடைவதையும் தடுப்பதால் சிறந்த திட்டமாகும். ஒரு வேளை அநேக பிராந்திய சபைகளும் வசனத்திற்கு புறம்பான பழக்கங்களை அனுசரித்தாலும், பிற சபைகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும். ஏனெனில் அவைகள் சுய அமைப்புள்ளவைகள். தேவன், தன்னாட்சி செய்யும் பிராந்திய சபையை விரும்புகிறார். ஏனெனில் இந்தத்திட்டம் வழி நடத்துபவர்களையும், அங்கத்தினர்களையும் உருவாக்கி கொடுத்து, ஊழியம் செய்தலை அதிகரித்து வீழ்ச்சியடைதலை தடுக்கிறது.

### கேள்விகள்

1. ரோமர் 15:14-ல் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் ________________ வல்லவர்களுமாயிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.
2. எபிரேயர் 5:12-ல் காலத்தைப் பார்த்தால் நீங்கள் ________________ என்று சொல்லப்படுகிறது.
3. ஏனென்று தெரியாவிட்டாலும் நாம் தேவனுடைய திட்டத்தை பின்பற்றலாமா?
4. கிறிஸ்தவம் ஒரு மனிதனின் சிறப்பு________________ வெளிக்கொண்டு வருகிறது.

5. மனுசர்கள் —————————— கொண்டு போதிக்க கற்றுக்கொள்கின்றனர்.

6. சரியானபடி கொடுக்க ஏதுவாக கொடுப்பவர் ——————————— பார்க்க வேண்டும்.

7. அங்கத்தினர்கள் செய்ய வேண்டியதைக் காட்டிலும் வேறு எந்த குழுவும் ———————————

8. ஒன்றாக கட்டப்பட்ட கற்களெல்லாம் ———————————

9. வீழ்ச்சியடைந்த ஒரு பிராந்திய சபை இன்னொன்றை- ——————————— செய்யாது.

10. தன்னாட்சிக்கான நல்ல காரணங்களை நாம் காண முடிகிறதா?

## பாடம் 12

## சபை சமூக அரசுடன் எப்படி ஒப்பிடப்படுகிறது.

### புறக்குறிப்பு

1. சமூக அரசின் மாதிரி என்ன?
2. சமூக அரசின் கிளைகள் (பிரிவுகள்) என்ன?
3. கிறிஸ்துவின் இராஜ்யம் எப்படி ஒரு முடியாட்சியாகும்?

### விவாதம்

(1) சமூக அரசின் மாதிரி என்ன? நாடுகளில் உள்ள சமூக அரசின் மாதிரிகளைக்குறித்து தெரிந்து கொண்டு அதை சபையின் ஆட்சி முறையுடன் ஒப்பிட்டு பார்ப்பது இப்பொழுது நன்று. சமூக அரசில் மூன்று பெரிய மாதிரிகள் காணப்படுகின்றன. முறையே 1. அரசின்மை 2. குடியாட்சி அல்லது ஜனநாயகம் 3. முடியாட்சி.

1. அரசின்மை என்பது ''ஆளுகையே இல்லாமை''. அதாவது யாருமே ஆட்சி செய்யாத ஒரு ஒழுங்கற்ற தன்-

ன்மையை குறிப்பது. ஆளுகையும் இல்லாமல், அதிகாரியு-மில்லாத நிலை. அரசின்மை நிலையில் அதிகமான குற்றங்களும் கூட்டமான வன்முறைகளும் காணப்படும். சட்ட ஒழுங்கை அமுல்படுத்த காவல் துறையோ அல்லது அதிகாரிகளோ இருக்கமாட்டார்கள். உண்மையிலேயே சபை இப்படிப்பட்ட நிலையில் இருப்பதில்லை. அரசை அவமதிப்-பவர்களை வேதம் கண்டிக்கிறது (2 பேதுரு 2:9, 10). கிறிஸ்தவம் கிறிஸ்துவின் அதிகாரத்தையும் அவருடைய வசனத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்-றது. உண்மையாகவே சபை அரசின்மையல்ல.

2. குடியாட்சி என்பது மக்களால் ஆளப்படுவது. ஆளப்படுகிறவர்களாலே ஆளுகைக்கு மக்களை தேர்ந்-தெடுத்தலாகும். குடியாட்சியில் சுதந்திரமாக தேர்தல் நடத்தப்பட்டு. ஒவ்வொரு குடிமக்களும் ஆள ஆளுவதற்கு நபர்ககள் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தை பெறுவதாகும். ஆனால் சபை குடியாட்சியையும் கொண்டதல்ல. சபை-யின் தலைவராகிய கிறிஸ்து மாற்றப்படக் கூடியவரல்ல. சபையில் அவரை மாற்றி வேறொருவரை அமர்த்த எந்த மனிதனும் பாத்திரவானல்ல. சபையின் அங்கத்தினர் வேறொரு இராஜாவை தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்ற-வர்களல்ல. பூமிக்குரிய அரசுக்கு குடியாட்சி முறை சிறந்த-தேயாயினும், அது சபை ஆளுகைக்கு பொருந்தாது.

3. கிறிஸ்துவின் சரீரம் முடியாட்சி முறையை கொண்டதாகும் ஒரு இராஜாவால் ஆளுகை செய்யப்-படுவதற்கு பெயர் முடியாட்சி. ஒரே நபர் முழு அதிகா-ரத்தையும் பெற்று ஆளுவதாகும். ஓர் உண்மையான இராஜா, தனது இராஜ்யத்தில் எல்லா அதிகாரத்தையும் பெற்றிருப்பார். அவரது உரிமையை குறித்தோ அல்லது ஆளும் முறையைக் குறித்தோ ஒருவரும் கேள்வி எழுப்ப

அனுமதியில்லை. கிறிஸ்துவின் இராஜ்யமாகிய சபையையும் அதன் ஆளுகை அமைப்பையும் காண இது நமக்கு சரியான வெளிச்சமிட்டு காட்டுகிறது, இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28:18). அவரே நமது இராஜாவும், ஆண்டவருமாயிருக்கிறார் (யோவான் 18:37). அவருடைய சபையாகிய இராஜ்யத்தில் நாம் பிரஜைகளாயிருக்கிறோம் (மத். 16:18,19). சபை என்பது இயேசுவையே இராஜாவாகக் கொண்ட முடியாட்சி அமைப்பாகும். அவருக்கு அனைத்து உரிமையும், அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) சமூக அரசின் பிரிவுகள் அல்லது கிளைகள் யானவ? சமூக அரசின் பிரிவுகள் கிளைகள் 1. சட்டமன்றம். 2. நீதி துறை. 2. நிர்வாகத்துறை என்பனவாகும்.

1. சட்டமன்றம் நாட்டிற்குத்தேவையான சட்டங்களை இயற்றுகின்றது. வழக்கமாக இப்பிரிவு சடட சபை கூடுமிடமாகும். சட்ட மன்ற கழகம் என்பது நாட்டின் சட்டங்களை ஏற்படுத்துகின்ற கழகமாகும். நாட்டின் சட்டங்களை இது எழுதுகிறது.

2. நீதி துறை நாட்டின் சட்டங்களை ஆராய்ச்சி செய்கிறது அல்லது வியாக்கியானம் செய்கிறது. நாட்டின் பல நீதி மன்றங்களை தன்னகத்தே கொண்ட நீதித்துறை நாட்டின் சட்டங்களைக் கொண்டு மக்களுக்கு தீர்ப்பு வழங்குசிறது.

3. அரசின் நிர்வாகத்துறை நாட்டின் சட்டங்களை அமுல்படுத்துகிறது. அதிபர் அல்லது பிரதம மந்திரி போன்ற நிர்வாகிகளைக் கொண்டு அமுல்படுத்தப்படுகிறது. இந்த நபர் இராணுவத்திற்கும் காவல் துறைக்கும் தலைவர். நாட்டின் சட்டங்களை இவர் கொண்டு வருகிறார்.

எந்த அரசிலும் நிர்வாகத்துறையே அமல் நடத்தும் துறையாகும். சட்டமன்றம் சட்டங்களை உண்டாக்குகிறது. நீதித்துறை சட்ட விளக்கமளிக்கிறது நிர்வாகத்துறை சமூக அரசின் சட்டங்களை அமுல் படுத்துகிறது.

*(3)* **கிறிஸ்துவின் இராஜ்யம் எப்படி ஒரு முழு முடியாட்சியாகும்?** கிறிஸ்துவின் இராஜ்யம் அல்லது சபை முழு முடியாட்சி அமைப்புடையது என்பதற்கு மூன்று காரணங்கள் 1. அவர் சட்டங்களை இயற்றினார். 2. அவர் அந்த சட்டங்களை வெளியிட்டு விளக்கமளித்தார். 3. அவர் சட்டங்களை அமுலாக்குகிறார். சபையின் ஆட்சி அமைப்பில் இயேசு அனைத்து துறைகளில் ஸ்தானங்களையும் பெற்றிருக்கிறார், அவர் நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறார். (1தீமோ. 6:15). பூமியின் இராஜாக்களுக்கு அவர் அதிபதியாயிருக்கிறார் (வெளிப்படுத்தின விஷேம் 1;5). சபையின் எந்த அதிகாரிகளின் குழுவும் அவருடைய சபையின் சட்டங்களை இயற்றவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவருடைய சட்டங்களை வெளிப்படுத்தி விளக்கமளித்து அப்போஸ்தலர்கள் மூலம் எழுதினார் (யோவான் 16 : 13). கடைசி நாட்களில் கிறிஸ்துவின் உபதேசமே மனிதர்களை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2கொரி. 5:10). இயேசுவே நமது இராஜாவாகவும், கர்த்தராகவும், குருவாகவும், ஆண்டவராகவும் இருக்கிறார். அவருடைய சபையாகிய இராஜ்யத்திற்குள் கிறிஸ்தவர்கள், அந்தகாரத்தினின்று விடுதலையாகி, நுழைந்தவர்கள் (கொலோ. 1:13). ஒரு இராஜ்யத்திற்குள் நுழைகின்ற யாவரும் தாம் எப்படிப்பட்ட இராஜ்யத்திற்குள் நுழைகிறார்கள் என்பதை உணர வேண்டும் சபையில் ஆட்சி

நடத்தும் எண்ணத்துடன் ஒருவரும் வரக்கூடாது. சபையின் சட்டதிட்டங்களை இயற்ற ஒருவரும் உள்ளே வரக்கூடாது. கர்த்தருடைய சபைக்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிற யாவரும் தாழ்மையுள்ள ஊழியர்களும் இராஜாவாகிய கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்தவர்களுமாய் இருக்கின்றனர்.

## கேள்விகள்

1. "ஆட்சியற்ற தன்மைக்கு என்ன பெயர்?
2. "சுயஆட்சிக்கு" என்ன பெயர்?
3. ஒரு மன்னரின் (இராஜாவின்) ஆட்சிக்கு என்ன பெயர்?
4. அரசின் எந்த துறை சட்டங்களை அமல்படுத்துகிறது?
5. அரசின் எந்த துறை சட்டங்களை வியாக்கியானம் செய்கிறது?
6. அரசின் எந்த துறை சட்டங்களை இயற்றுகிறது?
7. 1 தீமோ. 6:15-ல் இயேசுவின் ——— ——— ——— ——— என்றெல்லாம் அழைக்கிறது.
8. யோவான் 12:48 -ல் இயேசு ——— ——— ——— கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று சொன்னார்.
9. கொலோசேயர் 1:13-ல், 'நாம் ———க்குள் நம்மை உட்படுத்தியிருக்கிறார் என்று சொல்லுகிறது.
10. கிறிஸ்துவின் இராஜ்யம் ஒரு முடியாட்சியா?

# பாடம் 13

## மனிதர்கள் ஏன் முன்னோடிகளை பின்பற்று-கின்றனர்?

1. அதிகாரத்திற்கு பயம் (பலவந்தத்தினால்).
2. பிரதிபலனுக்கான ஆசை (வேலைவாய்ப்பு அல்லது லஞ்சம்).
3. மாதிரியை பின்பற்றுதல்.

### விவாதம்

**(1) அதிகாரத்திற்கு பயம் (பலவந்தத்தினால்).** எம்மாதிரி அமைப்பு அரசாங்கத்திலும், மனிதர்கள் தங்கள் தலைவர்களை ஏன் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு எப்பொழுதுமே காரணங்கள் இருக்கின்றன. அக்காரணங்களில் ஒன்றுதான் அதிகாரத்திற்கு பயப்படுதலாகும். ஒரு தலைவர் ஒரு இராஜாவை யொத்த அதிகாரத்தை பெற்றிருக்கும் போது, அவரை பின்பற்றிப் போவோர் பலவந்தம் பண்ணப்பட்டு அவருக்கு கீழ்படியலாம். அப்படி பின்பற்றுவோர், தங்களின் தலைவருக்கு கீழ்படியாமல் போவதன் விளைவை குறித்த பயத்தால் அதிகமாக பயப்படுவர். கிறிஸ்தவம் தங்கள் தலைவர்களை பலவந்தம் பண்ணி பின்பற்றச் செய்வதில்லை தேவன் ஒருபோதும் மனிதனை பலவந்தம் பண்ணி தனக்கு கீழ்படிய பண்ணியதில்லை. இயேசுவுக்கு அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டிருந்தாலும், கீழ்படிதலை அவர் கட்டாயப்படுத்துவதில்லை. தேர்ந்தெடுக்கும் உரிமையோடு அவரை பின்பற்றுவோர், பின்பற்றுகிறார்கள். சபையின், வழிநடத்துவோருக்கும் இது உண்மையானதே. பின்பற்றும் மக்களை அவர்கள் பலவந்தம் பண்ணும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை உலக காரியங்களிலே

ஒரு மனிதனுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்தாலும், அவர் சபையில் மக்களை பலவந்தம் பண்ணி பின்பற்றச் செய்ய முடியாது. மற்ற அங்கத்தினர்கள் தனக்கு பயப்படட்டும் என்ற எண்ணத்திலே சபையின் எந்த ஒரு வழி நடத்து-வோரும் முயலக்கூடாது. கிறிஸ்தவர்கள் பிசாசை குறித்து பயப்பட வேண்டியது தான், ஆனால் அவர்கள் மனிதர்களை குறித்து பயப்படக் கூடாது. சரீரத்தை கொல்லுகிறவர்-களுக்கு பயப்பட வேண்டாம் என்று இயேசு சொன்னார் (மத். 10:28). சமூக அரசிலே மனிதர்கள் பலவந்தமாய் ஆளுகை செய்யலாம், ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யத்திலே அப்படிப்பட்ட ஆளுகை கூடாது. அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும், என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 4:18). மற்ற மனிதர்கள் தங்-களுக்கு பயப்பட வேண்டும். என்பதற்காகவோ அல்லது பலவந்தத்தினாலோ தான் சபையிலே தலைவராக வேண்டும் என்று எந்த மனிதனும் நினையாதிருப்பானாக.

**(2) பிரதிபலனுக்கான ஆசை (வேலைவாய்ப்பு அல்லது லஞ்சம் :** தலைவர்களை மக்கள் பின்-பற்றிப்போக மற்றொரு காரணம் தங்களுக்கு அதில் கிடைக்கும் பிரதிபலன் மீதான ஆசையாகும். தன்னை வேலைக்கு அமர்த்தியவரின் உத்திரவுகளுக்கு ஒரு மனிதன் செவிசாய்த்து போவதற்கு இதுவே காரணம். அவர் தனக்கு அளிக்கும் ஊதியத்தை தேடுகிறான். ஒரு மனிதனின் கட்ட-ளைக்கு மற்ற மனிதர்கள் கீழ்படிய லஞ்சம் கொடுப்-பதற்கும் இதுதான் காரணம். லஞ்சம் கொடுத்தலால் வரும் பிரதிபலனை அவர்கள் விரும்புகிறார்கள் நேர்மை யாய் வேலைக்கு அமர்த்துவது கனத்திற்குரியது. வியா பாரக்காரியங்களில் கூலி பெறுவது தவறல்ல. ஆனால் மார்க்க காரியங்களிலே தலைவர்களை பின்பற்றுவது இந்த

காரணங்களுக்காக அல்ல. சில உண்மையற்ற நபர்கள் ஒரு பிரசங்கியாரை, இலவுச வேதபுத்தகம் அல்லதுவேறு நன்மைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடே, பின்பற்றலாம். மார்க்க காரியங்களிலே பண ஆதாயத்தை பெற சிலர் தலைவர்களாக முயற்சிக்கலாம். ஆனால் இந்த உள் எண்ணம் கிறிஸ்தவ மார்க்கத்தில் சரியான எண்ணமல்ல. மந்தையைக் கண்காணிக்கும்படி கட்டளையிடப்பட்ட மூப்பர்கள் "அவலட்சணமான ஆதாயத்திற்கல்ல. உற்சாக மனதோடே மந்தையை மேய்க்கும்படி கட்டளையிடப்பட்டனர் (1 பேதுரு 5:2). ஒரு பணக்கார அங்கத்தினர் தனது பண செல்வாக்கினால் சபையை ஆட்சி செய்ய எண்ணலாம். தனது அதிக காணிக்கை அளித்தலினால் தன் விருப்பங்களெல்லாம் மதிக்கப்பட வேண்டும் என் எதிர்பார்க்கலாம். சபையின் மதிப்பை பெறுவதற்கான கொள்கை இதுவல்ல. பண ஆசை சபைக்கு புறம்பேயே நிறுத்தப்பட வேண்டும். அது எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது (2 தீமோ 6:10). அது வழிநடத்துவோரையும் பின்பற்றுவோரையும் மாசுபடுத்துகிறது. அதிகாரத்தை தகுதியற்றவர்கள்கூட பணம் கொடுத்து வாங்க வழி வகுக்கிறது. பணத்திற்காக எந்த மனிதனும் வழிநடத்தவோ அல்லது பின்பற்றவோ வேண்டாம்.

**மாதிரியை பின்பற்றுதல்:** சபையை வழி நடத்தி செல்வதற்கான சரியான கோட்பாடு மாதிரியை பின்பற்றிச் செல்வதேயாகும். கிறிஸ்தவத்திலே மனிதர்கள் சில மனிதர்களை பின்பற்றிச் செல்ல காரணம், அவர்களைப் போலவே தாங்களும் இருக்க விரும்புவதுதான். இது மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததும், சிறந்தது மான எண்ணமாகும். இந்தவித வழிநடத்துவோர் சிறந்த வழிகாட்டிகளை உருவாக்குகின்றனர். ஒரு மனிதனின்

தலைமைத்துவம் அம்மனிதனின் நடத்தையை பொறுத்து அமைய இது வழிகாட்டுகிறது. மேலும், மாதிரியை பின் வைத்தல் பின்பற்றுவோருக்கு ஒரு பலமான எண்ணத்தை அளிக்கிறது. நல்ல முன்மாதிரியை பின்பற்ற மனிதர்களுக்கு இது சுலபமாகும். சபை ஆளுகை அமைப்பிலே மாதிரியை வைத்தலே மிக முக்கியமான கொள்கையாகும். இந்த கொள்கை வேதாகமத்தின் அனைத்து தலைமைத்துவ போதனைகளுக்கும் உறுதுணையாகும். கிறிஸ்தவ தலை-மைத்துவத்தை புரிந்து கொள்ள இதுவே திறவுகோலாகும் உலகம் கண்ட மிகச்சிறந்த எடுத்துக்காட்டு இயேசு மட்டுமே. செய்யவும் உபதேசிக்கவும் செய்தவர் அவரே என கூறுகிறது (அப் 1:1). அவருடைய போதனைகளுக்கு கீழ்படியும்படி அவர் பலவந்தம் பண்ணுவதில்லை. தம்மை பின்பற்றுவோருக்கு அவர் பூமிக்குரிய பிரதிபலன்களை வாக்குத்தத்தம் செய்வதில்லை. ஆனால் இயேசுவே அனைத்து சகாப்-தங்களிலும் மிகப்பெரிய தலைவராயிருந்திருக்கிறார். வேறு எந்த தலைவருக்கும் தங்களை ஒப்புக் கொடுக்காத மிக அதிகமான மனிதர்கள் இவருக்கு ஒப்புக் கொடுத்து உள்ள-னர். ஏனென்றால் இவர் தம்மைப் போலவே மனிதர்களை மாற்றுவதால்தான் அதிகாரத்திற்கு அவர் ஒரு மாதிரியை காட்டுகிறார். இப்படிப்பட்ட தலைமைத்துவத்தை பின்-பற்றுவதே உயர்ந்ததும், சிறந்ததுமான காரணமாக மனித வர்க்கத்திற்கு அமைகிறது.

## கேள்விகள்

1. கிறிஸ்து மனிதர்களை பலவந்தம் பண்ணி பின்பற்ற செய்கிறாரா?
2. மத் 10:28–———————————————அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள், என்று சொல்லுகிறது.

3. 1 யோவான் 4:18——————அன்பு——————
புறம்பே தள்ளும்.
4. 2 பேதுரு 5:2, பல ஆசை————————என்று
கூறுகிறது.
5. 1 தீமோ 6:10——————எல்லா ——————
வேராயிருக்கிறது.
6. தலைவரைப்போல் இருக்க விரும்புவது என்றால்
என்ன?
7. அப் 1:1, இயேசு——————வும்——————வும்
செய்தார்
8. உலகின் தலைசிறந்த தலைவர் யார்?——————
8. சபை தலைமைத்துவத்துக்கப்பால் நேர்மையாக வேலை
வாய்ப்பளிப்பது கனமானதா?
10. தலைவர்கள் பின்பற்றுவதன் தலையாய காரணம்
என்ன?

## பாடம் - 14

## சபையில் முன்மாதிரி ஏன் முக்கியமானது?

### புறக்குறிப்பு

1. முன்மாதிரி என்ற வார்த்தையின் பொருள்
2. முன்மாதிரிகள் தேவைப்படுவதால்
3. முன்மாதிரிகளாயிருப்பதில் உள்ள வல்லமை

### விவாதம்

**1. முன்மாதிரி என்ற வார்த்தையின் பொருள் :** முன்மாதிரி என்பது ஒரு விளக்கப்படமாகும். இது சொல்வதைக்காட்டிலும் செயலில்காட்டுகிறது. மற்றவர்கள் தெளிவாய் பார்த்து பின்பற்ற ஏதுவாக முன்னதாக

வைக்கப்படும் எடுத்துக்காட்டாகும். தமது அடிச்சுவடுகளை பின்பற்றிவர கிறிஸ்து நமக்கு மாதிரியை பின்வைத்துப்-போனார் என்று வேதம் சொல்லுகிறது. (1பேது. 2 : 21) நாம் பிரயாணம் பண்ணுவதற்கு ஏதுவாக இயேசு ஜீவிய பாதையின் முன்னே நடந்து வழிகாட்டினார். தெளிவான மாதிரியை அவர் கொடுத்திருப்பதால் நாம் போகும் பாதையை நாம் சுலபமாக அறிந்து கொள்ள முடியும். முன்மாதிரி என்பதன் பொருள் இதுவே. ''மாதிரி'' என்ற பதமும் ''முன்மாதிரி'' என்ற பதமும் ஒன்றே. மாதிரி என்றால் என்ன என்பதை நாம் அறிய வேண்டும். ஒரு வியாபாரி சந்தை பகுதியில் வியாபாரம் செய்யும்போது தன்து சரக்கின் மாதிரியை காட்டி விற்பனை செய்வார். அப்படி மாதிரியாக காட்டும் சரக்கு மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும். அப்போதுதான் வாங்குபவர்கள் சரக்கை வாங்கும் படி பலவந்தம் பண்ணாமல் தான் காட்டும் மாதிரியை பார்த்தே வாங்க ஏதுவாக அவர்கள் கவர்-கிறார். கிறிஸ்தவ ஜீவியத்திலும் இந்த முன் மாதிரி உண்-மையானது. மற்றவர்களை கிறிஸ்துவினிடத்தில் ஆதாயப்-படுத்தும் அளவுக்கு கவர்கின்ற முன்மாதிரி நமக்குத்தேவை. மாதிரியை காட்டுதல் நல்லதுக்கும் பொருந்தும்; கெட்ட-துக்கும் பொருந்தும். கொடிய பட்டணங்களான சோதோம் கொமோரா பட்டணங்கள் நமக்கு முன் மாதிரியாக காட்-டப்படுகிறது. (யூதா. 7). அவைகள் தவறான முன்மாதிரி-கள். தீமையானவர்களின் மீது தேவன் அளிக்கும் ஆக்கி-னைக்கு ஒரு எடுத்துக்காட்டு. வனாந்திரத்தில் அவிசுவாசி-களாய்போன இஸ்ரவேலர்கள் நமக்கு திருஷ்டாந்தமான-வர்கள் (1 கொரி. 10 : 6, 11). எனவே முன்மாதிரிஎன்பது வரைபடம், மாதிரி, அல்லது விளக்கவுரையாக அமைந்து, நாம் செய்ய வேண்டியவைகளையும் செய்யக்கூடாதவை-களையும் நமக்கு காட்டுகிறது, ஒவ்வொரு கிறிஸ்தவனும்

நன்மைக்கு அல்லது தீமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறான். அவன் தொடர்ந்து மற்றவர்களுக்கு நல்லதோ அல்லது கெட்டதோ வான விளக்கப்படத்தை காட்டுகிறான். சபையிலே நல்ல முன் மாதிரிகளெல்லாம், மற்றவர்கள் பார்த்து எளிதாய் புரிந்துகொண்டு பின்பற்ற ஏதுவாக மிகவும் முக்கியமானதாகும். தீமையானவர்களின் மீது தேவன் அளிக்கும் ஆக்கினைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**(2) முன் மாதிரிகள் தேவைப்படுவதால் நல்ல முன் மாதிரிகள் சபையில் தேவைப்படுவதால் அவைகள் முக்கியமானவை.** உலகத்திற்கு பூரணமாக ஒரு முன் மாதிரி தேவை என்பதால்தான் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பினார். தேவன் மனிதர்களோடு பல நூற்றாண்டுகளாக தொடர்பு கொண்டிருந்தாலும், கிறிஸ்து வந்ததற்கு பிறகே தேவனைக் குறித்தும் தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது. உலகம் பல்வேறு போதகர்களையும், தலைவர்களையும் கண்டிக்கிறது. ஆனாலும், கிறிஸ்துவைப் போல் தமது உபதேசங்களை சம்பூரணமாய் தெளிவாக்கியவர்கள் வேறு யாருமிலர் உலகம் எப்பொழுதுமே போதிப்பதைப் போலவே செயல்படுகிறவர்கள் உண்டா என காண்பதில் ஆர்வம் கொண்டிருந்தது. இதன் தேவை இன்றைக்கும் பெரிதாகக் காணப்படுகிறது. இயேசு போதித்த போதனைகள் அவரைப் பின்பற்றுவோரிடத்தில் காணப்பட மனிதர்கள் பெரிதும் ஆவல் கொண்டுள்ளனர். உலகம் பலதரப்பட்ட உபதேசங்களையும் கொண்ட நிறைந்த போதகர்களை கொண்டுள்ளது. ஆனால் தங்கள் போதனைப்படி வாழ்கின்ற போதகர்கள் மிகவும் அபூர்வம். பிரசங்கியாகிய தீமோத்தேயுவை தன்னைக்குறித்தும் தன்வார்த்தைகளை குறித்தும் ஜாக்கிரதையாயிருக்கும்படி கூறப்பட்டான். இதனால், தன்னையும்

தன்போதகத்தை கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளக்கூடும் என்றும் சொல்லப்பட்டது. (*1 தீமோ. 4 : 16*) சபையில் முதன்மைத்துவத்தை விரும்புகின்ற அநேக மனிதர்கள் உண்டு; ஆனால் முன்மாதிரியாய் இருக்க விழைவோர் மிகச் சிலரே. சபைக்கு புறம்பேயும் உள்ளேயும் இதன் தேவை மிகப் பெரிது. (*1 தீமோ. 4 : 12*)-ல் தீமோத்தேயு 'விசுவாசிகளில்' மாதிரியாயிருக்கும்படி கூறப்பட்டான். திருத்திய மொழிபெயர்ப்பில் இதேவசனம், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று சொல்லப்படுகிறது. எனவே தலைமைத்துவத்தை விரும்புவோர், சபையிலும் சபைக்கு புறம்பானவர்களுக்காக சபைக்கும் மாதிரியாயிருத்தல் அவசியம். உலகிற்கு நல்ல முன்மாதிரிகள் தேவை, சபையும் பின்பற்றுவதற்கேதுவான முன்மாதிரியாய் இருப்பது அவசியம். நல்ல முன்மாதிரிகள் பெரிதாக தேவைப்படுவதால், அவைகள் முக்கியமானவை.

**(3) முன்மாதிரிகளாயிருப்பதில் உள்ள வல்லமை.** மிக அத்தியாவசமாய் முன்மாதிரிகள் தேவைப்படுவதற்கு காரணம், அதில் உள்ள வல்லமையே காரணமாகும். தன் பேச்சும் பிரசங்கமும் மனுச ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ''ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது'' என்று பவுல் சொன்னார். (*1 கொரி. 2:5*). பவுலின் முன்மாதிரி பெரிதாக இருந்தமையால், அவரது செல்வாக்கும் பெரிதாயிருந்தது. எந்த ஒரு வார்த்தையையும் பேசாமலேயே மனிதர்கள் வல்லமையாய் பிரசங்கிக்க முடியும். ஆபேல் பேசினதாகவேதம் ஒன்றையும் சொல்வதில்லை. ஏனோக்கு ஆபிரகாம் யேசுவா போன்றோர் சிறந்த பேச்சாளாளர்கள் அல்ல அவர்கள் செயல் வீரர்களாயிருந்தனர் அவர்களின் முன்மாதிரியின் வல்லமைகளை சிந்தித்துப்பாருங்கள் இன்று கர்த்தரின் சபையிலே சொல்லியும்

செயல்படாத அநேக பேச்சுவல்லவர்கள் இருக்கின்றனர். இவ்வித தலைமைத்துவம் மிகவும் பலவீனமான மாதிரி யாகும். வல்லமையான தலைவன் மதிப்பை சம்பாதித்துக்-கொள்ளும் மனிதனாகிறான். தனது நல்ல முன்மாதிரியால் சிறந்த ஒரு பின்பற்றப்படுபவனாகிறான். நன்மைக்கு ஏது-வான செல்வாக்கையும் வல்லமையையும் பெற்றிருக்கிறான். அவனது ஜீவியம் சபைக்கு உள்ளும் புறமும் வல்லமையால் காணுகிறது. கிறிஸ்துவின்ஜீவியம்எப்படிஉலகைமாற்றியது என்பதை சிந்தித்துப் பாருங்கள் பத்தொன்பது நூற்றாண்டு களாக, லட்சக்கணக்கானோர்: இயேசுவை பின்பற்றி அவ-ரைப் போலவே இருக்க முயற்சித்திருக்கின்றனர். அனைத்து கூட்டு பெலத்திற்கப்பால் அவர் உலகத்தின் செயல்பாட்-டையே அதிகமாய் மாற்றியமைத்துள்ளார். பெரிதான வல்லரசுகளும், படைபலமும் சக்கரவர்த்திகளும் வீழ்ச்சி-யடைந்து விட்டனர், மறக்கப்பட்டும் விட்டனர். ஆனால் கிறிஸ்துவின் செல்வாக்கு மட்டுமே வளர்ந்து கொண்டே இருக்கிறது. பாவம் நிறைந்த இவ்வுலகை மாற்ற இயேசுவின் ஜீவியத்தைக் காட்டிலும் வல்லமையான ஜீவியம் இருந்த தில்லை, இப்படிப்பட்ட மாதிரிகளின் வல்லமையால், சபை யிலும் முன்மாதிரிகள் முக்கியமானவைகளாகும்.

### கேள்விகள்

1. 1பேதுரு 2:21-ல், இயேசு நமக்கு ———— வைத்து போனார் என்று சொல்லுகிறது.
2. இரண்டு வகை முன்மாதிரிகள் யாவை?
3. 1தீமோ 4:16-ல் ''உன்னைக்குறித்தும் ————க்-குறித்தும் எச்சரிக்கையாயிரு'' என்று சொல்லப்படு-கிறது.
4. பணத்தைக் காட்டிலும் முன்மாதிரி முக்கியமானதா?

5. 1கொரி 2:4-ல், ''பவுல் பிரசங்கம் ஆவியினாலும், பலத்தினாலும் ———————— இருந்தது.

6. எபி. 11:4 ஆபேல் மரித்திருந்தும் ———— ————————

7. உலகின் மிகப்பெரிய முன்மாதிரியானவர் யார்?

8. முன்மாதிரிக்கு வேறு எந்த 2 வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது?

9. எபி. 4:11 ஒரு முன் மாதிரியைக்குறித்து பேசுகிறது யார்: ————————

10. வனாந்திர யாத்திரையில் வந்த இஸ்ரவேலர்கள் நமக்கு முன்மாதிரியானவர்களா?

## பாடம் - 15

### சபையின் முன்மாதிரியானவர்கள் யார்?

#### புறக்குறிப்பு

1. கிறிஸ்து
2. மூப்பர்களும் உதவிக்காரர்களும்
3. சுவிசேஷகர்கள்
4. பெற்றோர்கள்
5. பிராந்திய சபைகள்
6. ஒவ்வொரு அங்கத்தினரும்.

#### விவாதம்

**(1) கிறிஸ்து** ஒவ்வொரு வழிநடத்துவோரும் அங்கத்தினர்களும் எப்படிப்பட்ட முன்மாதிரியாயிருக்க வேண்டும் என்பதற்கு வேதாகமம் முன்மாதிரியின் முக்கியத்துவத்தை காட்டுகிறது. கிறிஸ்தவர்கள், பலவந்தத்தினாலோ அல்லது லஞ்சத்தினாலோ, உலகத்திடமும் அல்லது சக கிறிஸ்தவனிடமும் செல்வாக்கு பெற இயலாது. அவர்களின் செல்வாக்கு தங்களின் முன்மாதிரி ஜீவியத்திலிருந்தே பெறு-

கின்றனர். கிறிஸ்தவர்கள் செய்யும்படி எதிர்பார்க்கப்படும் அனைத்து காரியங்களையும் இயேசு முதலாவதாக செய்தார். அவர் செய்யவும் உபதேசிக்கவும் செய்தார் (அப். 1:1) அவரது அடிச்சுவடுகளை நாம் பின்பற்றிச் செல்ல ஏதுவாக அவர் நமக்கு மாதிரியை பின்வைத்துப் போனார் (1பேது. 2:21). நமது பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கிற பிரதான ஆசாரியராய் அவர் இருக்கிறார். எல்லாவற்றிலும் நம்மைப்போல அவர் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார். (எபி 4;15). இயேசு தமது மந்தையை வழி நடத்திச் செல்லும் பிராதான மேய்ப்பராயிருக்கிறார். அவர் அவைகளை விரட்டிச்செல்வதில்லை-(1பேதுரு 5:4). இயேசுவின் நாட்களிலே மேய்ப்பவர்கள் தங்கள் ஆடுகளுடன் மிகவும் நெருக்கமாய் இருப்பார்கள் அவர்கள் ஒவ்வொரு ஆட்டையும் தனித்தனியே அறிந்திருப்பார்கள். மேய்ப்பன் ஆடுகளை சிநேகித்தபடியால் ஆடுகளும் மேய்ப்பனை சிநேகித்து அவனை பின்பற்றிச்-செல்ல விரும்பும். மேய்ப்பன் எப்பொழுதுமே தன் ஆடுகளுக்கு முன்பாகச் செல்லுவான். அவைகள் போகவேண்டிய வழிகளை அவன் அவைகளுக்கு காட்டுவான். அவன் அவைகளை அடிக்கவும் மாட்டான். கட்டாயப்படுத்தவும் மாட்டான். ஆடுகள் தன்னை பின்பற்ற ஏதுவாக அவைகளை கனிவுடன் நடத்துவான். இப்படிப்பட்ட மேய்ப்பன்தான் கிறிஸ்துவும் கூட. இப்படிப்பட வழிநடத்தும் தலைவர்களாகத்தான் கிறிஸ்தவர்கள் இருக்க வேண்டும்:

### (2) மூப்பர்களும் உதவிக்காரர்களும் :—

பிராந்திய சபையின் உதவிக்காரர்களும் முப்பர்களும், மந்தைக்கு மாதிரியான கண்காணிகளும் ஊழியர்களுமாய் இருக்கிறார்கள். எபேசு சபை மூப்பர்கள் தங்களைக்குறித்து முதலாவதாக எச்சரிக்கையாயிருக்கும்படி சொல்லப்பட்-

டார்கள். பிற அவர்கள் மந்தையைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி கூறப்பட்டனர் (அப். 20:28). 1பேதுரு 5:3 ல், ''சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்,'' என்று சொல்லப்படுகிறது. மூப்பர்கள் அங்கத்தினர்களும், உலகமும் பின்பற்றி வருகிறதற்கேதுவான எடுத்துக்காட்டுள்ள தகுதியாம்சங்களை வழிகாட்டியாக கொண்டிருக்க வேண்டும். உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்ட முதல் சம்பவத்தில் அவர்கள் நற்சாட்சி பெற்றவர்களும், பரிசுத்தாவியால் நிரப்பட்டவர்களும், ஞானத்தால் நிறைந்தவர்களுமாயிருந்தனர் (அப் 6:3). உதவிக்காரர்கள் முன்னதாக சோதிக்கப்பட்டவர்களும், குற்றஞ்சாட்டப்படாதவர்களுமாயிருக்க வேண்டும் (1தீமோ. 3:10) மூப்பர்களும் உதவிக்காரர்களும் உண்மையிலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தகுதியாம்சமுடைய நல்ல மாதிரிகளாயிருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை நல்லதாகக் காணுவதால் சபை அவர்களைப் பின்பற்றிப்போக விரும்பும். வேறு எந்த நோக்கத்திற்காகவும் அவர்கள் பின்பற்றப்படவோ அல்லது தேர்ந்தெடுக்கப்படவோ கூடாது. கர்த்தருடைய சபையின் ஆளுகை அமைப்பு முன்மாதிரிகளை அடிப்படையாக கொண்டது. மூப்பர்களோ உதவிக்காரர்களோ மற்றவர்களை கடிந்து கொள்ளும்போது, அவர்களுடைய சுய வாழ்க்கை சிறந்த மாதிரியாக இருக்க வேண்டும். தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்த தெரியாத மூப்பர் தேவனுடைய குடும்பத்தையும் நடத்த தெரியாதவராகிறார் என்று வேதம் கூறுகிறது (1தீமோ-3:4.5). அவர் சபைக்கு புறம்பேயிருந்தும் நற்சாட்சி பெற்றவராயிருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (1தீமோ. 3:7). மூப்பர்களும் உதவிக்காரர்களும் நல்ல முன்மாதிரியுடையவர்களாயிருக்க வேண்டும்.

**(3) சுவிசேஷகர்கள்** சபைக்கு மற்றோர் முன்மாதிரியாயிருக்க வேண்டியவர்கள் பிரசங்கியார்கள் சுவிசேஷகர்கள், ''முன் மாதிரியாயிருங்கள்'' என்று கட்டளையிடப்பட்டுள்ளனர். (1தீமோ 4:12). அவர்கள் வார்த்தையிலும், ஜீவியத்திலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் மாதிரியாய் இருக்கும்படி கூறப்பட்டனர். பவுல் தீமோத்தேயுவை, தன்னைக் குறித்தும், தன் உபதேசத்தைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருக்கும்படி கூறினார். (1தீமோ 4:16). சரியான முன் மாதிரியை காட்டுவதன் மூலம், தனது போதனையின் மூலமும் தன்னையும், தன் உபதேசத்தை கேட்பவர்களையும் இரட்சித்து கொள்ள முடியும். ஆனால் நல்ல மாதிரியோ அல்லது நல்ல போதனையோ இல்லாமல், தன்னையும் தன் உபதேசத்தை கேட்கிறவர்களையும் இரட்சித்துக் கொள்ள இயலாது. தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு ''இன்னவிதமாய் எங்களை பின்பற்ற வேண்டுமென்று, நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும்'' (2தீமோ 3:7) இருக்கிறோம் என்று பவுல் சொன்னார். தான் ஜனங்களுக்கு மாதிரியாயிருக்கும்படி தன் செயல்களை செய்ததாக பவுல் விளக்கினார் (வச. 9) சுவிசேஷகர்கள், கிறிஸ்துவை பின்பற்றுவதன் மூலம் சபைக்கு மாதிரியாயிருக்க முடியும்.

**(4) பெற்றோர்கள்** கிறிஸ்தவ தகப்பன்மார்களும், தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளுக்கு நன்கு பலப்பட்ட முன் மாதிரியாயிருக்க வேண்டும். தீமோத்தேயுவுக்கு முன் விசுவாசமுள்ள தாயும், பாட்டியும் இருந்தார்கள் (2தீமோ 1:5). பெற்றோர்களின் உறுதி வாய்ந்த முன் மாதிரிக்கு அப்பால் வேறு யாரும் இருக்க முடியாது. தன் பெற்றோர்கள் வீட்டில் என்ன செய்கிறார்கள் என்று பிள்ளை அறி-

வான். அவ்வினை ஏமாற்ற முடியாது. எழுத படிக்கத் தெரியாத ஸ்திரீகள் கூட, தங்கள் நல் மாதிரியினாலே போதிக்க இயலும், சபையில் பெற்றோர்களின் முன்மாதிரி மிக முக்கியமானது.

(5) **பிராந்திய சபைகள்** முழு பிராந்திய சபையும், மற்றவர்களுக்கு காட்டுகின்ற மாதிரி நல்லதாகவோ தீய-தாகவோ மாறும். தெசலோனிக்கேயில் இருந்த பிராந்திய சபை அந்த வட்டாரத்தில் இருந்த பிற பிராந்திய சபை-களைக் காட்டிலும் வல்லமையான மாதிரிகளாக பேசப்-படுகின்றனர் (1தெச. 1:7). பலப்பட்ட சபையின் முன் மாதிரியால், பலவீனமான சபைகள் உற்சாகப்படுத்தப் படும். நாமகரன கூட்டங்களும், அஞ்ஞானிகளும் ஒவ்வொரு பிராந்திய சபையையும் கண்காணித்துக் கொண்டிருக்கின்-றனர். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாதது போல அவருடைய மக்களும் இருக்க வேண்டும் என்று இயேசு சொன்னார். (மத் 5:14). ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெளிச்சமாயிருக்கிறார்கள் என்றும், அவர்-கள் ஒன்று சேர்ந்த கூட்டம் பிரகாசிக்கிற பட்டணம் தொலை தூரத்திலிருந்து பார்த்தாலும் தெரிவது போல காணப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார். பிராந்-திய சபைகள் நல்ல மாதிரிகளாயிருக்க வேண்டும்.

(6) **ஒவ்வொரு அங்கத்தினர்களும்,** ஒவ்வொரு அங்கத்தினரும், சுடர் விட்டு பிரகாசியாவிட்டால், ஒரு பிராந்திய சபையும் பிரகாசிக்காது. இயேசு ஒவ்வொரு தனிப் பட்டவர்களையும் நோக்கி, ''மனுசருக்கு முன்பாக உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது'', என்று சொன்னார் (மத். 5:16). ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையும் பிற மனிதர்களால் அறிந்து வாசிக்கப்பட வேண்டிய

புத்தகமாகும் (2கொரி. 3:3), கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினனும், கிறிஸ்துவுக்கு ஒப்பான முன் மாதிரியாய் இருப்பது அவசியம்.

**கேள்விகள்**

1. எபி. 4:15-ல் கிறிஸ்து நம்முடைய பிரதான———— ————— இருக்கிறார், என்று சொல்லப்படுகிறது.
2. 1பேதுரு 5:4-ல் கிறிஸ்துவை ———————— என்று அழைக்கிறது.
3. அப். 20 : 28 - ல் மூப்பர்கள் முதலாவது தங்களைக் குறித்தும், ——————— குறித்தும், எச்சரிக்கையா-யிருக்க வேண்டும் என்று காட்டுகிறது.
4. 1 பேதுரு 5 : 4-ல் மூப்பர்கள் மந்தைக்கு ——— ——— க்ளாயிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.
5. உதவிக்காரர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு வசனப்பகுதியைக் கொடுக்கவும்.
6. 1 தீமோ. 3 : 7-ல் மூப்பர்கள் ———— ———— யிருந்தும் நற்சாட்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.
7. 1 தீமோ. 4 : 12 -ல். சுவிசேஷகர்கள், ———————— மாதிரியாயிரு என்று சொல்லப்படுகிறது.
8. 1 தீமோ. 4 : 16 -ல் எந்த இரண்டு காரியங்களுக்கு சுவிசேஷகர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டியவர்கள்?
9. 2 தீமோ. 1 : 5 -ல், தீமோத்தேயுவின் தாயார் ——— ——— பாட்டி ————— பெயர்களாய் சொல்-லப்படுகிறது.
10. பிராந்திய சபைகள்முன் மாதிரிகளாயிருக்க வேண்டும் என்பதற்கு, 2 வசன ஆதாரங்கள் கொடுக்கவும்.

# பாடம் - 16

## சபையின் ஊழியங்கள் யாவை?

### புறக்குறிப்பு.

1. மூப்பர்கள்
2. உதவிக்காரர்கள்.
3. சுவிசேஷகர்கள்.

### விவாதம்

**(1) மூப்பர்கள் சபையின் முன்னோர்கள் செயல்பட வேண்டிய வேலைகளைக் குறித்து அறிந்து கொள்ள நாம் இப்பொழுது தயாராகிறோம்.** ''பதவி'' என்ற வார்த்தையின் பொருளை முதலாவதாக நாம் அறிய வேண்டும். 1 தீமோ 3 : 1 -ல், ''கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையுள்ள வார்த்தை'' என்று சொல்லப்படுகிறது. சபையில் வகிக்கும் பதவி என்பது, ஒரு வேலை என்பதை இது காட்டுகிறது. சபையில் பதவி என்பது பொறுப்பு உள்ள பகுதி அல்லது செயல்பட வேண்டிய வேலையின் பகுதியைக் குறிக்கும். சபையில் பதவி வகித்தலை அநேகர் அரசாங்க உத்தியோகங்களை போன்று (அதிகாரம்மிக்கதாக) நினைக்கின்றனர். தங்களுக்கென ஒரு அலுவலகத்தையும், மேஜை, நாற்காலிகளையும் பெற்று, அங்கிருந்து கொண்டு மற்றவர்கள் செய்ய வேண்டியதை சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் சபையில் உள்ள பதவி என்பது செய்ய வேண்டிய வேலையைக் குறிப்பது ஆகும். வியாபாரத்திலும் அரசாங்கத்திலும் இருக்கும் அநேக பதவிகள் தேசங்களில் ஊழல்களை உண்டுபண்ணுகிறது. பதவியிலிருப்போர், சுலபமாய் பணத்தை சம்பாதிக்க ஏதுவாக லஞ்சம் கொடுக்

கப்படுகிறார்கள், வேலை செய்யாமல் தப்பித்துக் கொள்ள அவர்களுடைய ஸ்தானம் வழிவகுக்கிறது. குறைந்த வேலையும் மிகுந்த கனத்தையும் தங்கள் பதவியின் உயர் ஸ்தானத்தை அவர்கள் நினைக்கின்றனர். கர்த்தருடைய சபையில் இருக்கும் அதிகாரிகள் ஆமணக்கு எண்ணெய் ஆலையில் வேலை செய்யும் கூலியாட்களைப்போல இருக்க முடியும். ஒரு மனிதன் மரத்தில் ஏறி ஆமணக்கு காய்களை பறிக்கும் வேலையைச் செய்யலாம். ஒரு பெண்மணியறிந்த காய்களை எடுத்து ஒன்று சேர்த்து வைக்கலாம். மற்றொரு மனிதன் அதன் விதைகளை எடுத்து, அரைத்து, வேக வைத்து எண்ணெய் எடுக்கலாம். எல்லோருமே மனிதன் அதை தங்களுக்கென்ன நியமிக்கப்பட்ட இடத்தில் வைராக்கியமாய் வேலை செய்ய வேண்டும் இப்படியாக மூப்பர்கள் செய்ய பணிகள், உதவிக்காரர்கள் செய்கின்ற பணிகள், மற்றும் சுவிசேஷகர்கள் செய்யும் பணிகள் என தனித்தனியே உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்ய வேண்டிய பகுதிகள் உண்டு. ஒவ்வொவருக்கும் தான் செய்ய வேண்டிய குறிப்பு வேலைகள் உண்டு. இதுவே ஒருவனுடைய பதவி என்பதன் பொருளாகும். அது அவனுடைய வேலை அல்லது பணிசெய்தலின் மாதிரியாகும். மூப்பர்கள் சபையிலே (மந்தையை) மேய்க்கும் பணியை செய்கின்றனர் (1 பேதுரு 5:2). அவர்கள் கண்காணிகள் ஆவார் (அப் 20:31). அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்கு காவலர்களாயிருக்கின்றனர் (எபி 13:17). அவர்கள் மந்தையின் ஆவிக்குரிய மேய்ப்பர்களாவர் (அப் 20:28)

**2) உதவிக்காரர்கள் உதவிக்காரர்கள் சபையில் ஊழியம் செய்பவர்கள் :** 'உதவிக்காரர்கள்' என்ற வார்த்தையின் பொருள், ''வேலை செய்கிற (பணிவிடை செய்கிற)வன் என்று பொருள் அனைத்து கிறிஸ்தவர்களு

மே தாழ்மையான ஊழியக்காரர்கள் என்றழைக்கப்-பட்டாலும், உதவிக்காரர்கள் சபையின் தேவைகளை கவனித்துக் கொள்ள ஏதுவான விசேஷித்த தகுதிபெற்ற வர்களாவர். எருசலேம் சபையில் பந்தி விசாரணைக்கும், தேவைப்படும் அங்கத்தினர்களுக்கு போஷிப்பதற்கும், மனி தர்கள் தேவைப்பட்டனர். இந்தப்பணி, முதலில் தேர்ந்-தெடுக்கப்பட்ட உதவிக்காரர்களுக்கு அளிக்கப்பட்டது (அப் 6:1-6). உதவிக்காரர்களின் தகுதியாம்ச பகுதியில் அவர் கள் நன்னடத்தையும் வைராக்கியமும் உள்ள மனிதர்-களாக இருக்க வேண்டும் என்பதை காட்டுகிறது. தங்கள் ஜீவியத்திலும், ஊழியத்தினாலும் சபையில் நன்மதிப்பை பெற்றிருக்கிறார்கள் (1 தீமோ 3:8-13). மூப்பர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கான ஒரு பகுதி இருப்பது போல, இவர்களுக்கும் உண்டு. ''உதவிக்காவலர்களின் ஊழியம்'' என்பதன் பொருள் இதுதான் (1 தீமோ 3:13). மூப்பர் களும் உதவிக்காரர்களும் மட்டுமே சபையின் (முதன்மை) அதிகாரிகள் ஆவர். இவர்களுக்கு மட்டுமே வேதாகமப் படியான ஸ்தானம் உண்டு. நாமகரண கூட்டங்களிலிருக் கிற அநேக ஸ்தானங்களும் அதிகாரிகளும் நாம் வசனத்-தின்படி கேள்விப்படாதவை. பிலிப்பியர் 1:1-ல் பவுல் பிலிப்பிலுள்ள (மூப்பர்களுக்கும்) கண்காணிகளுக்கும், உதவிக்காரர்களுக்கும் எழுதுகிறார். கர்த்தருடைய சபை யின் மூப்பர்களும் உதவிக்காரர்களும்தான் அதிகாரிகள்.

**3) சுவிசேஷகர்கள் சுவிசேஷகன் என்பவர் சபை-யின் அதிகாரியல்ல:** ஆனால் அவர் செய்ய வேண்டிய குறிப்பான பணி அவர்களுக்கும் உண்டு. சுவி-சேஷகனுடைய வேலையை செய் என்ற தீமோத்தேயு விக்கு பவுல் கூறுகிறார். (2 தீமோ 4:5). சுவிசேஷகன் என்பவர் ஒரு பிரசங்கியார். அவர் பிரசங்கிக்கவும் போதிக்

கவும் வேண்டிய சிறப்பு பகுதியை பெற்றவர். பிலிப்பியில் மூப்பர்களும் உதவிக்காரர்களும் இருந்தாலும் (வச 1), சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும் தீமோத்தேயுவை பவுல் அங்கு அனுப்பினார் (பிலிப் 2:19). மற்ற அனைத்து அங்கத்தினர்களும் எப்படி மூப்பர்களின் மேற்பார்வைக்கு கீழானவர்களோ அப்படியே உதவிக்காரர்களும் கீழானவர்களே. மூப்பர்களுக்கு கீழ் பணியாற்றுகின்ற ஒரு பிரசங்கியார் மிகுந்த மரியாதையை மூப்பர்களுக்கு செலுத்த வேண்டும் (1 தீமோ 5:17). ஆனாலும் பிரசங்கியாரை கட்டுப்படுத்துவது மூப்பர்களின் அதிகாரமல்ல, தேவனுடைய வசனமே. ஒழுங்கற்ற மூப்பர்களை கூட மற்றவர்களுக்கு முன்பாக பயமுண்டாகும்படி கடிந்து கொள்ள வேண்டும் என வேதம் போதிக்கிறது (1 தீமோ 5:19-20) சபையிலே மூப்பர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் உரிய ஸ்தானத்தையும், சுவிசேஷகருக்குரிய ஸ்தானத்தையும் வைத்திருக்கிறார். ஒவ்வொருவரும் நல்ல தகுதியாம்சத்தோடு தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டும். தேவன் எப்படிப்பட்ட வேலையை அவரவர்களை செய்யும்படி எதிர்பார்க்கிறாரோ, அவைகளின் பகுதிகளையும், செய்ய வேண்டிய பொறுப்புகளையும் ஒவ்வொவரும் அறிந்திருக்க வேண்டும். அதேபோல சபையார்களும் இவர்களில் அவரவர்கள் செய்ய வேண்டிய அலுவல்களை அறிந்திருக்க வேண்டும். மூப்பர்கள் உதவிக்காரர்களேயல்லாமல் வேறே அதிகார ஸ்தானத்தை பெறும் நபர்களோ பதவிகளோ உருவாக்கப்படக் கூடாது. எந்த பிரசங்கியும் மூப்பர்களைப் போல சபையின் மீது அதிகாரம் செலுத்தும்படி நாட கூடாது. ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் சபையில் தேவன் வைத்திருக்கும் ஊழிய நிலவரத்தை அறியச் செய்ய வேண்டும். பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களும் சிறந்த தகுதியோடு தங்கள் வேலைகளை சரியாக செயல்படுத்த வேண்டும்.

## கேள்விகள்

1. தீமோ. 3 : 1 ''கண்காணிப்பை விரும்புகிறவன் ———— ————
2. சபையில் இருக்கும் இரு அதிகாரிகள் யாவர்? (தீத்து 1:1)
3. எபி. 13 ! 17 மூப்பர்கள் ———— ———— விழித்திருக்கிறார்கள்.
4. உதவிக்காரன் என்பதன் பொருள் ———— ————
5. 2 தீமோத். 4:5 தீமோத்தேயு, ———— ———— ———— ———— செய் என்று சொல்லப்பட்டான்.
6. சபையின் கண்காணிகள் யார்? 1 பேதுரு 5 : 1,2) ———— ————
7. சபையின் அதிகள் ஆமணக்கு எண்ணெய் ஆலையின் வேலையாட்களைப்போல, ஒவ்வொருவரும் தன் தன் ———— ————
8. 1 தீமோ 3 : 13 உதவிக்காரனின் ———— குறித்து பேசுகிறது.
9. முதன் முதலில் உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கூறும் அதிகாரம் யாது?
10. சுவிசேஷகர்கள் மூப்பர்களின் மேற்பார்வைக்கு கீழ்ப்பட்டவர்களா?

# பாடம் - 17

## மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மாற்று பெயர்கள் யாவை?

### புறக்குறிப்பு

*1. மூப்பர்கள்*

*2. பிரிஸ்பட்டர்கள் (மூப்பர்கள்)*

*3. பிஷப்புகள் (கண்காணி)*

*4. ஓவர்சியர் (கண்காணி அல்லது மேற்பார்வையாளர்)*

*5. பாஸ்டர்கள் (மேய்ப்பர்)*

*6. செப்பர்ட்ஸ் (மேய்ப்பர்)*

### விவாதம்

*(1)* **மூப்பர்கள்** *கர்த்தருடைய சபையில் மூப்பர்களுக்கு வேதாகமத்தின்படி 6 பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் ஒவ்வொன்றும், முக்கிய பொருளுடையவைகள். இதன் ஒவ்வொரு பெயரின் பொருளையும் படிக்கும் போது, இந்த அதிகாரங்களை குறித்து அதிகமாக தெரிந்து கொள்ள முடியும். அதிகமாக பயன்படுத்தும் பொதுவான பெயர் ''மூப்பர்கள்''. ''மூப்பர்'' என்றால் ''வயதானவர்'' என்று பொருள். அதாவது விசுவாசத்திலும், வயதிலும் மூத்தவர் என்பதை இது குறிக்கும். மூப்பர்கள்தான் அதிகமாக சபையிலே வளர்ச்சியடைந்தவர்களும், அனுபவ மிக்கவர்களாக இருக்கின்றனர். ''அவர்கள் நூதன சீஷர்களாயிருக்க கூடாது', (1 தீமோ. 3:6). தனது கிராமத்தில் ஒரு மனிதர் மூப்பு அடைந்திருப்பதால், சபையிலும் அவர் மூப்பனாயிருக்கலாம் என்பது பொருளல்ல, அவர் சபையிலேயே மிகவும் மூத்த சகோதரராக கூட இருக்கலாம், ஆனாலும் ஆவிக்குரிய முறையில் அவர் மூப்பர்க்குரிய தகுதி பெற்றவரல்ல. அவர் பிராந்திய சபையிலேயே முதல் அங்-*

கத்தினராக கூட இருக்கலாம். ஆனால் அது அவரை ஆவிக்குரிய மூப்பராக்காது. எபேசு சபையின் மூப்பர்களை பவுல் வரவழைத்தான் என்று வேதம் கூறுகிறது (அப். 20:7) பட்டணங்கள்தோறும் உள்ள ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர் (அப், 14:23). பட்டணங்கள் தோறும் மூப்பர்களை நியமிக்கும்படி தீத்துவை கிரேத்தா தீவிலே விடப்பட்டிருந்தார் (தீத்து 1:5) ''மூப்பர்'' என்ற இந்த வார்த்தை இந்த மனுசர்கள் விசுவாசத்தில் மூத்தவர்களும் வளர்ச்சி அடைந்தவர்களும் என்று பொருள். வருஷங்களினூடே அவர்களிடம் வளர்ந்து வரும் விசுவாசம். அவர்களுக்கு மதிப்பை கொணர்கிறது.

**(2) பிரிஸ்பட்டர்ஸ் (மூப்பர்கள்).** மூப்பர்களின் பதத்தை விளக்கப்படுத்தும் மற்றொரு பெயர் ''பிரிஸ்பட்டர்'' ''மூத்தவர்கள்'' என்பதற்கு மற்றொரு பதமே இது. வேதாகமத்தில் இது ஒரு முறை மட்டுமே பேசப்படுகிறது (1 தீமோத். 4:14). ''மூப்பர்கள் என்ற பொருள் விளக்கமே இதற்கும் இருப்பதால், மேற்குறித்த பதத்தின் விளக்கமே தெளிவாக்கும்.

**(3) பிஷப்புகள் ''மூப்பர்கள்''** என்ற பொருளின் பதம் ''கண்காணிகள்'' அல்லது ''மேற்பார்வையிடுவோர்'' என்றெல்லாம் பொருள்படும். இந்தபதம்1 தீமோ. 3:1,2 தீத்து 1:7 பிலிப் 1:1. இந்த பதத்திற்கு உதாரணமாக இயேசு நமது ஆத்துமாவிற்கு கண்காணியாயிருக்கிறார் என்று சொல்லுகிறது. (1 பேதுரு 2:2 ). யூதாஸ்காரியோத்தின் வீழ்ச்சியினால் அவனது கண்காணிப்பை இழந்தான் (அப். 1:20). இந்த பதம் மூப்பர்கள் செய்ய வேண்டிய பணியாகிய மேற்பார்வையிடுதலைக்குறிக்கும் பெயராகும். 1 பேதுரு 5:2-ல் அவர்கள் கண்காணிப்புக் செய்ய வேண்டியவர்கள். இதன் பொருள் மூப்பர்களே போதித்தலும்,

நடத்துதலுமாகிய எல்லா பணிகளையும் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட வேலைகளை மேற்பார்வையிடுபவர்கள் பிராந்திய சபையை கண்காணிப்பது அல்லது நிர்வாகம் செய்வது அவர்களுடைய கடமை. எல்லா அமைப்புகளிலுமே மேற்பார்வையிடுவோர் இருப்பதுபோல, கர்த்தருடைய சபையிலும் கண்காணிகள் அல்லது மேற்பார்வையிடுபவர்கள் உள்ளனர்.

(4) **ஓவர்சீயர் (கண்காணி அல்லது மேற்பார்வையாளர்).** மேலே குறிப்பிட்டது போல, பிஷப்புகள் என்ற வார்த்தையின் பொருளே இதுவுமாகும். ''மேல்' ''பார்வை'' என்ற இரண்டு பதங்களை உடையது இது ஒரு மேற்பார்வையாளர் சபையை மேல்பார்வையிடுகிறார். பிராந்திய சபையின் நலனுக்கான விவகாரங்களில் இவர் காவல்காரனாயிருக்கிறார். அப். 20:28,ல் எபேசு சபை மூப்பர்களை பரிசுத்த ஆவி, மந்தையின் மீது கண்காணிகளாக வைத்ததாக கூறுகிறது. வருகின்ற கள்ள போதகர்களை தவிர்ப்பது இவர்களுடைய பொறுப்பு (வச. 29,30). மேற்பார்வையாளர் என்ற இந்த பதம் கர்த்தருடைய சபையில் மிகவும் முக்கியமான அத்தியாவசியமான பணி என்பதை இது காட்டுகிறது.

(5) **பாஸ்டர்கள் (மேய்ப்பர்).** மூப்பர்களுக்கு இந்த பெயர் ஒரே ஒரு முறை மட்டும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது (எபேசி. 4:11). இதன் மற்றொரு பொருள் மேய்ப்பர் என்பதாகும். இஸ்ரவேலர்களின் ஆவிக்குரிய முன்னோடிகளுக்கு ''மேய்ப்பர்கள்'' என்ற பதம் இருந்தது (எரேமியா 2:8). கர்த்தருடைய ஆடுகளை கெடுத்து சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ, (எரேமியா 23:1-7). ''மேய்ப்பன்'' என்ற வார்த்தை ''மேய்ப்பவன்'' என்ற வார்த்தைக்கு ஒத்தது. மேலும் ஆட்டுமேய்ப்பனுக்-

கும் ஆடுகளுக்கும் உள்ள தன்மையை இது குறிப்பிடுவது. வேதாகமத்தின்படி மேய்ப்பர்கள் என்றால் மூப்பர்கள்தான் அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக ஒவ்வொரு சபையிலும் இருக்க வேண்டும்.

*(6)* **செப்பர்ட்ஸ் (மேய்ப்பர்கள்).** பேதுரு மூப்பர்களுக்கு எழுதும்போது ,தங்களிலுள்ள மந்தையை போஷிக்கும்படி எழுதுகிறார். மேலும் அவர் எழுதும் போது, பிரதான மேய்ப்பன் (கிறிஸ்து) வெளிப்படும் போது, வாடாத கிரீடத்தை அவர்கள் பெறுவார்கள் என்று சொல்லுகிறார் (1 பேதுரு 5:1-4). பிரதான மேய்ப்பனாகிய கிறிஸ் துவுக்கு கீழ் மூப்பர்கள் பிராந்திய சபையிலே மேய்ப்பர்களாயிருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. மேய்ப்பர்கள் என்று மூப்பர்களை அழைக்கும் இந்த ஒப்புவமை அர்த்தமுள்ளது. வேதாகம தேசங்களில் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளின் மீது அதிக கவனம் செலுத்துவார்கள். அவர்கள் அவைகளை நேசித்து போஷிப்பார்கள். (சங் 23). அவைகளின் முன்தாமே நடந்து வழிநடத்துவாரேயொழிய பின்னிருந்து விரட்டிச் செல்லமாட்டார். ஒவ்வொரு தனி ஆடுகளின் பிரச்சனையும் அவர்கள் அறிந்தமையால் ஒவ்வொன்றையும் நேசிப்பர். அவைகளை அவர்கள் பாதுகாத்து, போஷித்து, ஆடுகளை பாதுகாப்பதிலும் அதிகமான உபத்திரவங்களையும் சகித்து கொண்டு பாதுகாப்பார்கள். மூப்பர்கள் இப்படிப்பட்ட அதிகாரிகளாகத்தான் சபையில் இருக்க வேண்டியவர்கள். ''மேய்ப்பன்'' என்ற பெயரும் சபையிலே மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பிற பெயர்களும், நாம் இவர்களைக்குறித்து நன்கு தெரிந்து கொள்ள உதவுகிறது. மூப்பர்களேதான் பிரிஸ்பட்டர்ஸ் என்றும், பிஷப்புகள் (மேய்ப்பர்கள்) என்றும், மேற்பார்வையாளர்கள் (ஓவர்சியர்ஸ்) என்றும், பாஸ்டர்கள் என்-

றும், (மேய்ப்பர்) செப்பர்ட்ஸ் என்றும் அழைக்கப்பட்ட-னர்.

## கேள்விகள்

1. மூப்பர்களுக்கு எத்தனை பெயர்கள் உண்டு?
2. "மூப்பர்" என்ற வார்த்தையின் பொருள் ———— ————
3. அப். 20:17-ல் பவுல் எபேசு சபையின் ——— ———
4. அப். 14:23-ல் ——— ——— தோறும் ——— ———நியமிக்கப்பட்டனர்.
5. 1 தீமோ. 4:14-ல் மூப்பர்கள்——— ——— என்றழைக்கப்படுகின்றனர்.
6. 1 தீமோ 3-1-ல் ——— ——— விரும்புகிறவன் ——— ——— விருப் புகிறான்.
7. "பிஷப்" (கண்காணி என்பதும் "ஓவர்சியர்ஸ்" (மேற்பார்வையாளர்கள் என்பதும் ஒன்றா?
8. "மேற்பார்வையாளர் என்ற பதம் எந்த இரண்டு வார்த்தைகளை உடையது?
9. எபேசி. 4:11-ல் மூப்பர்கள் ——— ——— என்றைழைக்கப்படுகின்றனர்.
10. ஒரு சபையில் எத்தனை பாஸ்டர் (மேய்ப்பர்கள்) இருக்க வேண்டும்?

# பாடம் - 18

## மூப்பர்கள் எப்படி அடிக்கடி தவறாக புரிந்து கொள்ளப்படுகின்றனர்?

### புறக்குறிப்பு.

1. ஒரே நபரைக் குறிக்கும் ஆறு பெயர்கள்.
2. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எப்பொழுதுமே ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருப்பார்.
3. அனைத்து மூப்பர்களுக்குமே சம அதிகாரம் சபையில் இருக்க வேண்டும்.

### விவாதம்

**(1) ஒரே நபரைக் குறிக்கும் ஆறு பெயர்கள் :**

மூப்பர்களைக் குறித்து அநேக தவறாக புரிந்து கொள்ளுதல் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரே நபரைக் குறிக்கும் ஆறுபெயர்களை புரிந்து கொண்டால் தவறாக புரிந்து கொள்ளுதலில் ஒன்றை தவிர்க்கலாம். பிரிவுக் கூட்டங்களிலே மூப்பர்கள் பாஸ்டர் (மேய்ப்பர்) களிலிருந்து வித்தியாசமானவர்களாக உள்ளனர். பிஷப்பு-களும் (கண்காணிகள்) வித்தியாசப்பட்ட அதிகாரிகள் தான். ஆனால் பாடம் 17-ல் 2 பெயர்கள் ஒரே பொருளில் பேசப்பட்ட 3 வகையாக பார்த்தோம். ''மூப்பர்கள்''. ''பிரிஸ்பட்டர்கள்'' ஆகிய இரண்டு வார்த்தைகளும் ''முதியோரை'' குறிக்கும். ''மேற்பார்வையாளர் - கண்காணி'' இரண்டும் கண்காணித்தலை'' குறிக்கும். ''செப்பர்ட்ஸ்'' ''மேய்ப்பர்'' - ''பாஸ்டர்'' ஆகிய இரண்டும் ஆடுகளை மேய்ப்பவனைக் குறிக்கும் இப்பொழுது இந்த மூன்று ஜோடி வார்த்தைகளும் எப்படி கூட்டாக ஒரே நபரை சுட்டிக் காட்டுகிறது என காண்போம். அப். 20:17ல்; அப். 20: 17ல் ''மூப்பர்கள்'' எபேசு சபையிலிருந்து அழைக்கப்பட்-

டார்கள் என்பதையும், அவர்களே வச. 28ல் ''கண்காணி-கள்'' என அழைக்கப்படுவதையும், அவர்கள் 'மந்தைக்கு' மேல் பார்வையிடுவதால், அவர்கள் மேய்ப்பர்கள் அல்லது பாஸ்டர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் ஆதலால், மூப்பர்களை (பிரிஸ்பட்டர்கள்), மேற்பார்வையாளர்கள் அல்லது கண்காணிகள் (பிஷப்புகள்) என்றும் பாஸ்டர்கள் அல்லது மேய்ப்பர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவை கள் வித்தியாசப்பட்ட பதவிகளாயிராமல், ஒரே பதவியைக் குறிக்கும் வித்தியாசப்பட்ட பெயர்களேயாகும். ஆறு பெயர்களும் ஒரே மூப்பரைக் குறிக்கும் ஒரே பதமே என 1 பேதுரு. 5ம் அதிகாரம் காட்டுகிறது. வசனம் 1ல் ''மூப்-பர்களிடத்தில்'' பேசுகிறது. வசனம் 2, இந்த மூப்பர்கள் ''தேவனுடைய மந்தையை மேய்க்கும்படி சொல்லப்பட்-டார்கள். அதே 2ம் வசனத்தில் மந்தையை ''கண்காணிக்-கும்படி'' கூறப்பட்டனர், இது இவர்களை கண்காணி களாக்குகிறது. மூப்பர்கள், பிரிஸ்பட்டர்கள் மேற்பார்வை யாளர்கள் அல்லது கண்காணிகள், பிஷப்புகள், மேய்ப்பர்கள் பாஸ்டர்கள் ஆகியோர் வித்தியாசப்பட்ட அதிகாரிகள் அல்ல. கர்த்தருடைய சபையின் ஆளுகை அமைப்பில் அதி-காரிகளின் ஆறு வித்தியாசப்பட்ட பெயர்களேயாகும்.

2. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எப்பொழுது மே ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருப்பர். பிரிவு. கூட்ட சபைகளில் உள்ள மற்றொரு தவறு சபைக்கு மேல் ஒரு பாஸ்டர் (மேய்ப்பர்) அல்லது பிஷப்புக்களை (கண்காணி களை) கொண்டுள்ளனர். புதிய ஏற்பாட்டு நாட்களில் ஒவ்-வொரு பிராந்திய சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பாஸ்டர் (மேய்ப்பவர்) அல்லது கண்காணிகள் இருந்தனர். ஒரு சபைக்கு ''ஒரு பாஸ்டர்'' என்று நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. மாறாக, சபைகள் தோறும் ''மூப்பர்களை'' நியமித்தார்-

கள் என்று வேதம் கூறுகிறது. (அப். 14:23) பட்டணங்கள் தோறும் ''மூப்பர்'' (''ஒரு மூப்பன்'' அல்ல), கள் நியமிக்கப் பட்டனர் (தீத்து 1:5). பவுல் எபேசு சபையின் ''மூப்பர்களை'' அல்லது ''கண்காணிகளை'' வரவழைத்தார் (அப். 20:17,28). அவர் பிலிப்பி பட்டணத்தில் உள்ள கண்காணிகளுக்கு எழுதினார் (பிலிப். 1:1) சபையின் ஆளுகை அமைப்பிற்கு இது கிறிஸ்து வகுத்த திட்டமாகும். இத்திட்டத்தில் நிறைந்த ஞானமுண்டு. ஒரு தனி நபர் ஆளுகை நடத்தினால் தானே சபைக்கு ''தலை'' என்ற எண்ணம் வரக்கூடும். தனக்குத்தானே முதன் இடத்தை தேட ஆரம்பிப்பார். அடுத்தவர்களுக்காக இவர் அக்கறை காட்டமாட்டார். முழு ஆட்சியையும் தனக்கே கொண்டிருப்பார். கிறிஸ்துவின் திட்டமோ எந்த மனிதனையும் ''தன்னை பெரியவனாக'' காட்டிக் கொள்ள அனுமதிப்பதில்லை. மூப்பர்களின் குழுவே ஒவ்வொரு பிராந்திய சபையையும் கண்காணிக்க வேண்டும் என்பது வேதம் காட்டும் திட்டம். ஒரு பிராந்திய சபையில் குறைந்தபட்சம் 2 பேராகிலும் தகுதியடையாமலிருந்தால், தகுதியுள்ளவர்கள் வரும்வரை அந்த சபை காத்திருக்க வேண்டும். ஒருவரை மாத்திரம் அமர்த்துவது வசனத்திற்கு புறம்பானது, இரண்டு மூப்பர்களை உடைய சபையில் ஒரு மூப்பர் இறந்து போனாலோ அல்லது தகுதியற்றுபோனாலோ மூப்பர் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும். எப்பொழுதுமே ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் ஒவ்வொரு சபையிலும் இருக்க வேண்டும்.

3. அனைத்து மூப்பர்களுக்குமே சம அதிகாரம் சபையில் இருக்க வேண்டும். பெரும்பாலும் ஏற்படுகின்ற மற்றொரு தவறு ஒரு மூப்பரைக் காட்டிலும் மற்றொரு மூப்பர் உயர்ந்தவராக தன்னை நினைத்துகொள்வது. ஆதி சபையின் ஆளுகை முறையிலிருந்து வழுவிப்போக அடி-

கோலியவைகளில் இதுவும் ஒன்று. இதுவே பின்னால் அநேக சபைகளுக்குமேல் ஒரு "பிஷப்" என்ற ரோமன் கத்தோலிக்க முறைமைக்கு வழிகாட்டியது. 1 பேதுரு. 5:4-ல் கிறிஸ்துவை ''பிரதான மேய்ப்பன்'' என்று பேசப்படுகிறது. ஒரு சாதாரண மூப்பர்களில் ஒருவரையும் வேதாகமம் ''பிரதான மேய்ப்பர்'' என்று வேதம் அழைப்பதில்லை கிறிஸ்து ''மட்டுமேதான்'' பிரதான மேய்ப்பன் என்று அழைக்கப்படுவதால், அவர் மட்டுமே பிரதான மேய்ப்பனென்று நாமும் விசுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். 1பேதுரு 2:25-ல் உங்கள் ஆத்துமாக்களுக்கு ''மேய்ப்பரும் கண்காணியுமானவர்'' கிறிஸ்து என்று கூறப்படுகிறது. பல பிராந்திய சபைகளுக்குமேல் ஒரு ''பிஷப்'' (கண்காணி) இருந்ததாக நாம் வாசிப்பதில்லை. ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ''மேற்பார்வையாளர்கள்'' (கண்காணிகள்) இருந்தனரேயொழிய ''ஒரு கண்காணியோ'' ''ஒரு மேய்ப்பரோ'' (பாஸ்டர்) இருக்கவில்லை. மேலும், அநேக வருடங்களாக பணி செய்த ஒரு மூப்பர், குறைவான பணி செய்தவர்களை காட்டிலும் மேற்பட்ட அதிகாரம் பெற்றவரல்ல. பெரிய பிராந்திய சபையிலிருக்கும் மூப்பர்கள், சிறிய பிராந்திய சபையின் மூப்பர்களைக் காட்டிலும் பெரிய அதிகாரம் பெற்றவரல்ல. அப்போஸ்தலனாகிய பேதுரு மற்ற மூப்பர்களுடன் தன்னை உடன் மூப்பன் என்றே அழைத்துக் கொண்டார் (1பேதுரு 5:1) மூப்பர்கள் இறுமாப்படைந்து பிசாசின் கண்ணியில் விழாதபடிக்கு எச்சரிக்கப்பட்டார்கள். ஒரு மூப்பரை இறுமாப்படைய செய்வதில் சந்தோஷமடைகிறான். மனிதனின் இறுமாப்பு, மிகச் சுலபமாக முன்னோடிகளை மாசுபடுத்திவிடுகிறது. அனைத்து மூப்பர்களும் சபையில் சம அந்தஸ்து பெற்றவர்கள். ஒருவரும் மற்றவருக்கு மேலான அதிகாரம் பெற்றவரல்ல.

## கேள்விகள்

1. ஆறு பெயர்களும் எத்தனை பதவிகளை குறிக்கும்?

2. ஆறு பெயர்களும் உண்மையிலேயே ——— ——— பெயர்களை ——— ——— ——— கொண்ட ——— ——— ——— வகைகளை கொண்டது.

3. அனைத்து பெயர்களையும் இணைத்து ஒரு பதவியாக காட்டுகின்ற 2 வேத வசன ஆதாரங்களை கொடு.

4. அப். 14:23-ல் ——— ——— ——— தோறும் ——— ——— ——— ஏற்படுத்தப்பட்டனர்.

5. தீத்து 1:5 ——— ——— ——— தோறும் ——— ——— ——— நியமிக்கப்பட்டனர்.

6. பிலிப். 1:1 பவுல் பிலிப்பியிலுள்ள ——— ——— களுக்கு எழுதுகிறார்.

7. ஒரு மனிதன் தனியாய் மூப்பருக்குரிய பணியை செய்யலாமா?

8. 1 பேதுரு 2:25-ல் கிறிஸ்து உங்களின் ஆத்துமாக்களுக்கு ——— ——— ——— ஆகவும் ——— ——— ஆகவும் இருக்கிறார்.

9. ஒரு சபைக்கு ''ஒரு பிஷப்பு'' (கண்காணி) என்று வேதம் எங்காவது பேசுகிறதா?

10. 1 தீமோ, 3:6 ——— ——— ——— விழாதபடிக்கு எச்சரிக்கப்படுகின்றனர்.

## பாடம்—19

### பிரிவு கூட்டங்கள் எப்படி சபையின் ஆளுகை அமைப்பை கெடுக்கிறது.

### புறக்குறிப்பு.

1. வேதாகம அதிகாரத்திற்குப் பதில் மனித அதிகாரத்தை பின்பற்றுதல்
2. ''சபைகளின் பிராந்திய தன்னாட்சிக்கு'' மிஞ்சி செயல் படுதல்''
3. வசன ஆதாரமற்ற அதிகாரிகளையும் பதவிகளையும் நியமித்தல்.
4. வசன ரீதியான பதவிகளை மாற்றுதல்.

### விவாதம்

(1) வேதாகம அதிகாரத்திற்குப்பதில் மனித அதிகாரத்தை பின் பற்றுதல். இப்பாடத்திலும் அடுத்த பாடத்திலும் சபையின் ஆளுகை அமைப்பு எப்படி அடிக்கடி கெடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறோம். பிரிவு கூட்டங்கள் எப்படி சபையின் ஆளுகை அமைப்பை கெடுக்கிறது என்பதை இப்பாடத்தில் பார்ப்போம். அடுத்துவரும் பாடத்தில் சபையின் ஆளுகை அமைப்பு எப்படி கர்த்தருடைய சபையாராலேயே கெடுக்கப்படுகிறது என்பதை காண்போம், பிரிவுக் கூட்டத்தாரின் சபை அமைப்பு வேத அதிகாரத்திற்குப் பதில் மனித அதிகாரத்தை பின்பற்றுவதே தூய்மை கேடடையச் செய்யும் பெரிய காரணமாகும். அவர்களின் பெரிய தவறு அவர்கள் பின்பற்றுகிற கொள்கை புஸ்தகமே. நாமகரண கொள்கை புத்தகங்கள் சபையின் ஆளுகை அமைப்பை வேதம் காட்டுவதிலிருந்து அநேக மாற்றங்களை உண்டாக்குகிறது. கொள்கை புஸ்தகங்களே தங்களின் அதிகாரமாக கொண்டு பின்பற்றுவதால், மாற்றங்களும் மாறுபாடுகளும் பின்பற்றப் படுகின்றன. மனித கொள்கை புஸ்தகமே தங்கள் வழிகாட்டி

அதிகாரமாக கொண்டிருக்கும் வரையில், உண்மையான சபையின் ஆளுகை அமைப்பின் திட்டத்திற்கு மக்களை கொண்டு வருவது இயலாத காரியம். மார்க்க ரீதியான காரியங்களிலே வசனங்கள் மட்டுமே சரியான அதிகாரமாக மதிக்கப்பட வேண்டும். ஒரு கிறிஸ்தவனை எந்த நற்கிரியையும் செய்ய ஏதுவாக்குவது அவைகளே (2 தீமோ, 3:17). மற்ற மார்க்க சம்பந்தப்பட்ட காரியங்கள் அவைகளினால் மதிக்கப்படுவதுபோலவே, சபை ஆளுகை அமைப்பின் அதிகாரமும் மதிக்கப்பட வேண்டும்.

(2) பிராந்திய சபைகளின் தன்னாட்சிக்கு ''மிஞ்சி செயல்படுதல்'' உண்மை சபையின் ஆளுகை அமைப்பு புரட்டப்படுவதற்கு மற்றொரு காரணம், பிராந்திய சபையின் தன்னாட்சி தன்மையைமதிக்கத் தவறுவதாகும். கர்த்தருடைய சபையின் ஆளுகை அமைப்பு ஒவ்வொரு பிராந்திய சபையும் தன்னாட்சி அமைப்புடையதாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாகும். பிரிவுக் கூட்டங்களில் பெரும் பாலும் பிராந்திய சபைகளின் தன்னாட்சி அமைய்பு இருப்பதில்லை. அவர்களுடைய ஆளுகை அமைப்பு விதமே முற்றிலும் வித்தியாசமானது. ஆனால் நாம் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மீறி போகக்கூடாது என எச்சரிக்கப்படுகிறோம் (2 யோவான் 9,10). கர்த்தர் தமது சபைக்கு வைத்துள்ள மற்ற சட்டதிட்டங்களைப் போலவே சபையின் ஆளுகை அமைப்பிலும் நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருகக வேண்டும். வேதாகமத்தின்படியான சபையின் ஆளுகை அமைப்பை நாம் பெற்றிருப்போமானால், தன்னாட்சி செய்யும் பிராந்திய சபைகளை மட்டுமே காணலாம். மனிதர்கள் இதற்கு மிஞ்சி, மாவட்ட ஆலோசனைக்குழுக்களை நிர்ணயிக்கும் போது அவைகள் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பதில்லை. பிராந்திய சபைகளின் தன்னாட்சிக்கு

மிஞ்சி செயல்படுவதால் பிரிவுக் கூட்டங்கள் கர்த்தருடைய சபையின் ஆளுகை அமைப்பை கெடுத்துவிட்டன.

(3) வசன ஆதாரமற்ற அதிகாரிகளையும் பதவிகளையும் நியமித்தல். (பேதுரு 4:11-ல், நாம் பேசினால் தேவனுடைய வார்த்தை பேசுகிறபடி பேசவேண்டும். வேதாகம காரியங்களை வேதாகம வழியில் செய்து, வேதாகம காரியங்களை வேதாகம பெயரிட்டு அழைத்தல் என்பதே இதன் பொருள். வெளி. 22:18,19. தேவனுடைய வசனத்துடன் கூட்டுவதையும் குறைத்தலையும் குறிப்பிடுகிறது. இந்தக் காரணங்களுக்காக கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு பகுதியும் வேதாகமத்தை மட்டுமே சரியாக பின்பற்றப்படவேண்டும் சபையின் அதிகாரிகள் வேதாகமத்தின் அதிகாரிகளைப் போலவே இருக்க வேண்டும். ஆனால் பிரிவு கூட்ட சபைகளிலே வசன ஆதாரமற்ற அதிகாரிகளும் பதவிகளும் உள்ளன. இந்த பதவிகளெல்லாம் மனிதர்களால் உண்டானவைகளேயொழிய, வேதாகமத்தில் காணப்படுவதில்லை. ''சுயேட்சை ஊழியன்'' என அழைப்போர், ''சபை முகவர்'' ''ஆர்ச் பிஷப்புகள்'' (பேராயர்) 'போப்' போன்ற பதவிகளெல்லாம் இப்படிப்பட்டவைகளே. இது வேதம் பேசும் படியானதன்று. இது தேவனுடைய வசனத்துடன் சேர்த்தலாகும். புதிய ஏற்பாட்டில் காணுகிறபடியல்லாத அதிகாரிகளும் பதவிகளும் எடுத்தெறியப்பட்டால் ஒழிய கர்த்தருடைய சபை இன்று மீட்டு அமைக்கப்பட முடியாது.

(4) வசன ரீதியான பதவிகளை மாற்றுதல். உண்மை சபையின் ஆளுகை அமைப்பை பிரிவு கூட்டத்தார் மாற்றியமைக்க காரணம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள பதவிகளை மாற்றி அமைப்பதாலாகும். அதாவது வேதாக பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதன் வேதாகம

பொருள் பின்பற்றப்படவில்லை. இது பிரிவு கூட்டங்களின் பிஷப்பு (பேராயர்) களை குறித்த பதவியில் உண்மையானது. கண்காணி (பிஷப்) என்ற பதவி வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், நாமகரன கூட்ட பிஷப்பு கள் புதிய ஏற்பாட்டின்படியானவர்களாயில்லை. நாமகரன கூட்ட பாஸ்டர் (மேய்ப்பர்) களிடமும் இது உண்மையானது வேதாகமத்தின்படி பாஸ்டர்கள் (மேய்ப்பர்கள்) என்போர், ஒரு பிராந்தியசபையிலுள்ள மூப்பர்களே இன்றைய சபை களிலே பாஸ்டர் என்பவர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற் பட்ட சபைகளின் பிரசங்கியார்களாவர். பெயர் ஒன்றுதான் ஆனால் பதவிதான் தவறானது. மற்றொரு உதாரணம் நாமகரண கூட்ட பாதிரியார்கள். வேதாகமத்தின் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆசாரியனாயிருக்கிறான் (1 பேதுரு 2:5,9). ஆனால் பிரிவுக் கூட்டங்களிலோ ஒரு பிராந்திய சபையின் அதிகாரியாக பாதிரியார் செயல்படுகிறார் இந்த காரியங்களிலும்கூட, வசனப்படியான பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது, ஆனாலும் வசன ஆதாரமற்ற பொருள் கொடுக் கப்பட்டுள்ளது. ஆகையால் பிரிவு கூட்டங்களில், மனிதர் களின் அதிகாரம் பின்பற்றப்பட்டு, உண்மை சபையின் ஆளுகை அமைப்பு கெடுக்கப்படுகிறது. அவர்கள் பிராந்திய சபைகளின் தன்னாட்சியை மறுதலித்து, வேதாகமத்தில் காணப்படாத பதவிகளை புகுத்தி, வசனப்படியான பதவி களின் அர்த்தங்களை அனர்த்தமாக்கி மாற்றி போடுகின்றனர்.

## கேள்விகள்

1. மனித அதிகாரத்தை பின்பற்ற பிரிவு கூட்டம் பயன் படுத்தும் புத்தகத்தின் பெயர் என்ன?
2. 2 தீமோ 3:17-ல் வசனங்கள் நம்மை எந்த நற்கிரியையும் செய்ய ............ இருக்கிறது.

3. 2 யோவான் 9 வசனத்தில், கிறிஸ்துவின் ......... வேண்டும் என சொல்லுகிறது.

4. வேதாகமத்தின்படி காணப்படும் பிராந்திய சபைகள் எப்படிப்பட்டவை?

5. 1 பேதுரு 4:11-ல் ஒருவன் பேசினால் .......... படி ...................

6. வெளி 22:18, 19 ஒன்றையும் .................. ........ இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறது.

7. வேதாகமத்தில் காணப்படாத 4 பதவிகள் யாவை?

8 பிரிவுக் கூட்டத்தார் கெடுக்கிற 3 வேதாகம பெயர்களை குறிப்பிடுக.

9. 1 பேதுரு 2:9-ல் நாம் ................ களாயிருக்கிறோம்.

10. சபையின் உண்மையான பதவிகள் மாற்றப்படாமல் புதிய ஏற்பாட்டு சபை மீட்கப்பட முடியுமா?

## பாடம் - 20

## கிறிஸ்துவின் சபைகள் எப்படி சபையின் ஆளுகை அமைப்பை கெடுக்கின்றன

### புறக்குறிப்பு

1. தகுதியற்ற அதிகாரிகளை நியமித்தல் மூலம்.
2. ''வேஷதாரி மூப்பர்களை'' கொண்டிருப்பதன் மூலம்.
3. பணிகளை உயர் ஸ்தானங்களாக மாற்றிக் கொள்ளுதல்
4. சபையில் கமிட்டிகளை (ஆலோசனை கூட்டங்களை) அமைத்துக் கொள்ளுதல்.

**விவாதம்**

(1) தகுதியற்ற அதிகாரிகளை நியமித்தல் மூலம் நாமகரண கூட்டங்களில் ஏற்படும் கெடுதலைப்போலவே, கர்த்தருடைய சபையிலும் நிகழும் கிறிஸ்துவின் சபைகளில் சில வேதாகம திட்டங்களை கவனமாக பின்பற்றுவதில்லை உதாரணமாக, மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஆகியோரின் தகுதியாம்சங்களை வேதாகமம் தெளிவாக காட்டுகிறது. ஒருவர் அதிகாரியாக இருக்க விரும்பினால் இந்த தகுதிகளை பெற்றிருக்க "வேண்டும்" என சொல்லுகிறது (1 தீமோ 3:2). "இருக்க வேண்டும்" என்ற பதம் "கட்டுப்படுத்துகிற" வார்த்தை. இது ஒரு பலமான வார்த்தையானதால் இந்த தகுதியாம்சங்களை அத்தியாவசியமானவைகள். "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று இயேசு சொன்னார். (யோவான் 3:7) தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க, மறுபடியும் பிறத்தல் அவசியமாகும், விதிவிலக்கே இல்லை. மூப்பர்களுடைய தகுதியாம்சங்களை பொறுத்தமட்டிலும் கூட இது உண்மையானதே. ஒரு மனிதன் இந்த தகுதியை பெற நன்நடத்தையை பெற்றேயாக "வேண்டும்". ஒவ்வொரு நடத்தைக்கும் இருக்க "வேண்டும்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில நடத்தைகளை பெற்று சில நடத்தைகளை பெறாமலிருந்தால் அந்த நபர் தகுதி பெற்றவர் அல்ல. தேவையான அனைத்து தகுதிகளையும் பெறாமல் ஒரு மனிதர் அதிகாரியாக்கப்பட்டால் அது வேதாகமத்தை மீறுவதாகும். கர்த்தருடைய சபையின் ஆளுகையை இது கெடுக்கும்.

(2) "வேஷதாரி மூப்பர்களை கொண்டிருத்தல் மூலம் "வேஷதாரியான மூப்பர்களை" கொண்டிருப்பதன், மூலம் கிறிஸ்துவின் சபைகள் தவறு செய்கின்றன. மூப்பர்களுக்குரிய தகுதியாம்சமே இல்லாமல் ஒரு மனிதர் தன்னை

மூப்பர் என அழைக்கப்படுவதை விரும்புவார். அவர்கள் தகுதிபெற்ற மூப்பர்களல்லர், ஆனால் மூப்பர்களைப் போல நடிப்பார்கள். இது தேவனுடைய வார்த்தையை மீறுவதாகும். ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் கிறிஸ்து மூப்பர்களை நியமிக்கும் திட்டத்தை அவர்களின் முன் மாதிரிகளை அடிப்படையாக கொண்டே அமைந்துள்ளது. ஒரு மனிதன் சொல்லப்படுகிற அனைத்து தகுதியாம்சங்களையும் பெறாத பட்சத்தில், அவன் அவைகளை பெற்றதைப் போல நடிக்க கூடாது. உதாரணமாக, ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமலேயே, "கிறிஸ்தவனைப்போல" நடிக்க விரும்புகிறான். அவன் உண்மையிலேயே கிறிஸ்தவனாக இல்லாத நிலையில் சபை அவனை ஏற்றுக்கொள்ளுமா? உண்மை கிறிஸ்தவனாக இல்லாமல் ஒருவன் கிறிஸ்தவன் என்ற பெயரை தரித்துக் கொள்ள முடியாது. அதேபோலதான், உண்மையிலே ஒருவன் மூப்பனாக இல்லாமல், "மூப்பன்" என்ற பெயரை தரித்துக் கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அது வசனத்தை மீறுதலாகும். கிறிஸ்து தமது சபைக்காக திட்டமிட்ட ஆளுகை அமைப்பை இது கெடுப்பதாகும்.

(3) பணிகளை உயர்ஸ்தானங்களாக மாற்றுதல் மூலம் மூன்றாவதாக, ஒரு நற்கிரியை செய்வதே உயர் ஸ்தானமாக கருதிக்கொண்டு செயல்படுவதால், சபையில் கிறிஸ்துவின் திட்டம் கெடுக்கப்படுகிறது. பணிபுரிதல் என்பது ஒரு செயல். உதாரணமாக, சபையில் கர்த்தருடைய பண வரவுகளை கவனித்துக் கொள்ளுதல். அப்படி கவனித்துக் கொள்பவரை "பொருளாளர்" என்றழைக்கிறோம். ஆனால் ஒரு பொருளாளர் ஒரு அதிகாரியல்ல. அவர் கொடுக்கப்பட்ட செயல்களை செய்பவர் மட்டுமே. கர்த்தருடைய பணத்தை கவனித்துக் கொள்ளுதல் நல்லது தான். இது சபையில் ஒரு ஸ்தானம் அல்ல. சபையில் வேதாகமத்தின்

படி ''பொருளாளர்'' என்றொரு ஸ்தானமில்லை. ஆனால் சில வேளைகளிலே பொருளாளர் பணியை ஒரு பதவியாக்க (ஸ்தானமாக்க) சிலர் விரும்புகின்றனர். இது தேவ வசனத்துக்கு முரணானது. சபை ஆராதனையில் நீண்ட குச்சியை வைத்துகொண்டு ஜனங்களை விழித்திருக்கப்பண்ணுகிறவன் அதிகாரியல்ல. தேவையான ஒருபணியை மாத்திரமே அவன் செய்கிறான். ஆனால் அப்படிப்பட்ட மனிதன் தனக்குள் அதை சபையில் ஒரு ஸ்தானமாக நினைத்து செயல்பட்டுக் கொண்டிருந்தால் அவன் தான் செய்கிற பணியை ஸ்தானமாக்கி அதற்கு ஒரு பட்டத்தை அல்லது ஒரு அதிகாரத்தை உண்டாக்கி கொண்டால் அவன் பணியை ஸ்தானமாக்கி கொள்கிறான். பாட்டு நடத்துபவரும் அப்படிதான். இப்படிப்பட்டவர்கள் நல்ல நிலையில் பாடல்களைப் பாட வழிநடத்தலாம். ஆனால் அவன் அதை வைத்துக்கொண்டு சபையில் ஒரு அதிகாரி என்ற நினைவு வரும்போது, அச்செயலால் அவன் நல்ல ஒரு பணியை கெடுக்கிறான். 1 கொரி. 14-ம் அதிகாரத்தில் ஆராதனையில் அங்கத்தினர்கள் பங்கேற்று செய்கின்ற பாகங்களை காண்கிறோம். சபையின் ஆராதனையை நடத்துவதினாலே மாத்திரம் ஒரு மனிதன் அதிகாரியாகிவிட முடியாது. அவர் ஒரு பணியை மாத்திரம் செய்கிறார். அவருடைய பகுதி ஒரு பணியே ஒழிய, ஸ்தானமில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சபையின் ஆராதனையிலே செயல்பட ஒவ்வொரு பணியுண்டு ஆனால் இது நம் எல்லாரையும் அதிகாரிகளாக்குவதில்லை. தாங்கள் செயல்பட இயலுகின்ற பணியை செய்வதைக்காட்டிலும், சந்தர்ப்பத்தை ஆதாயமாக்கி ஒரு அதிகார ஸ்தானத்தை அடைய விரும்பும் போதுதான் பிரச்சனையே உருவாகிறது. தாங்கள் செய்யக்கூடிய நற்கிரியைகளைக் காட்டிலும், முதன்மை ஸ்தானத்தை தங்களுக்கு ஆதாயப் படுத்திக்கொள்ளவே அநேக மனிதர்கள் ஆர்வம் காட்டு-

கின்றனர். அப்படி முதன்மை இடத்தை வகிக்க விரும்பிய-வர்களில் ஒருவன் தான் தியோத்திரேப்பு என்பவனும் (2 யோ-வான் 9); இன்று அநேக நாகரீக தியோத்திரேப்புகள் சபையில் இருக்கின்றனர். அவர்கள் சுய மகிமையை தேடும் மனிதர்கள். அவர்கள் கர்த்தருடைய சபையை, தங்களை "பெரிய மனிதர்களாக" காட்டிக் கொள்வதிலேயே கெடுத்து போடுகின்றனர். சபை பணிகளை பதவிஸ்தானங்களாக மாற்றுகின்றனர். அவர்கள் செய்கின்ற பணி நல்லவைகளாக இருக்கலாம். ஆனால் அதை அவர்கள் அதிகாரஸ்தானமாக மாற்ற முயற்சிப்பதன் மூலம் கெடுத்து போடுகின்றனர். நாமகரண கூட்டங்கள் சபையை கெடுப்பது எவ்வளவு விளையமானதோ அதுபோலவே இந்தக்காரியங்களும் சபையை கெடுக்கின்றன. தேவனுடைய வசனத்திற்கு மிஞ்சி நாம் போகக்கூடாது.

**(4) சபையில் கமிட்டிகளை (ஆலோசனை குழுக்களை) அமைத்துக்கொள்ளுதல்.** பணிகளை பதவிகளாக்க முயலும் வழிகளில் ஒன்று அங்கத்தினர்கள் கமிட்டிகளை அமைத்துக் கொள்ளுதல் ஆகும். "கமிட்டி" என்ற ஆங்கில பதத்தின் பொருள், குறிப்பிட்ட வேலைக்காக தங்களை ஒப்புக்கொடுத்தல் என்று பொருள். சபையிலே தீர்மானித்து சில வேலைகளைச் செய்யும்படி மனிதர்களிடம் கொடுக்கும் போது, விரைவில் அதை அவர்கள் அதிகார ஸ்தானமாக மாற்றிட சிந்திப்பார்கள்; இது விசேஷ-மாக அந்த கமிட்டியின் தலைவரை பொறுத்தவரை உண்மையானது. இப்படிப்பட்ட மனிதர் முதன்மை இடத்திற்காக சோதிக்கப்படுவார்கள். அவர் தன்னை விரைவில் நிரந்தர கமிட்டி தலைவராக அழைத்துக் கொள்வார். சபையின் பதவிகளை வகித்துக்கொள்ள முயற்சிப்பார். சபைக் கட்டிடத்தின் கூரையை பழுது பார்க்க அநேக மனிதர்களை

நியமிக்கலாம். இந்த மனிதர்கள் தங்களை மற்றவர்களுக்கு மேலான அதிகாரிகள் என்று தங்களை நினைத்துக்கொள்-ளாதவரை நல்லது. சபைக்கு ஒரு ஊழியரை கண்டுபிடிக்க அநேகரிடம் சபை பொறுப்பை கொடுக்கலாம். அவர்களோ சபையில் முதன்மையானவர்கள் என்ற நினைவில் தங்களை பிரசங்கியார் ''நியமன குழு'' என அழைத்து கொள்வர், இப்படி சபையில் தங்களுக்கு அதிகாரம் அல்லது ஸ்தானம் இருப்பதாக யூகித்துக்கொள்வர். ஒரு மனிதன் தன்னை ''கமிட்டி தலைவராக'' அழைத்துக்கொள்ளும்போது, இதன் அபாயம் பயங்கரமானது. அந்த மனிதர் தன்னை அந்த குழுவுக்கும் தலைவராக்கிக் கொண்டு நிரந்தர அதிகாரியாக நியமித்துக்கொள்ள முயற்சிக்கிறார். கமிட்டிகள் மனிதர்-களை அதிகாரத்திற்கும் முதன்மைக்கும் வழி வகுத்துக் கொடுப்பதால் அபாயகரமானது. எனவே இப்படிப்பட்ட கமிட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும் (3 யோவான் 9). அந்த வகை கமிட்டிகள் நிரந்தரமாகி, அதன் தலைவர் அதிகாரி யாக மாறிவிடுகிறார். அவைகள் தேவைப்படுகிற வேலை களை தாழ்மையாய் செய்வதற்குப் பதில், அதிகாரத்தை பெற விரும்புகின்றனர். அதிகார ஸ்தானத்திலே நன்கு வேலை செய்கின்றனர். சபை கமிட்டிகள் எப்பொழுதுமே கர்த்தருடைய சபையின் சாதாரணமான வசனப்படியான சட்டதிட்டங்களை கெடுக்கின்றன.

## கேள்விகள்

1. 1 தீமோ. 3:2-ல், 'வேண்டும்' என்ற வார்த்தையின் பொருள் என்ன?
2. 'வேண்டும்' என்ற வார்த்தையை அனைத்து தகுதியாம்சங்களுக்கும் பொருந்தக் கூடியதா?
3. வேதாகமத்திலே ''வேட்டாரி மூப்பர்களைக்'' குறித்து படிக்கிறோமா?

4. கிறிஸ்தவனல்லாத ஒருவன், தன்னை ஒரு "நடிக்கும் கிறிஸ்தவனாக்கிக் கொள்ள முடியுமா?

5. 'பணி' என்பது என்ன?

6. சபையின் பொருளாளர் என்பவர் ஒரு அதிகாரியா?

7. தியோத்திரேப்பு என்ன ஸ்தானத்தை விரும்பினான்?

8. 1 கொரி. 14-ல் சொல்லப்பட்டுள்ள அங்கத்தினர்களின் ஊழியங்களெல்லாம் அதிகார பதவிகளா?

9. ஒரு கமிட்டியின் தலைவர் அதிகாரியா?

10. ஒரு .......... என்பது .......... செய்யக் கூடிய குழுவினர் என்று பொருள்.

## பாடம் 21

### சபையின் ஆளுகை அமைப்பிலே பிராந்திய சபைகளின் போக்கு என்ன?

#### புறக்குறிப்பு

1. வசனப்படி ஆளுகை அமைப்பை பெறாமை.
2. வசனப்படியற்ற ஆளுகை அமைப்பை பெறாமை.
3. வசனப்படியுற்ற ஆளுகை அமைப்பை பெறுதல்.
4. வசனப்படி ஆளுகை அமைப்பை பெறுதல்.

#### விவாதம்

(1) வசனப்படி ஆளுகை அமைப்பை பெறாமை. தகுதி வாய்ந்த மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் கொண்ட அமைப்பை அனைத்து பிராந்திய சபைகளும் அடைய பாடுபட வேண்டும். ஆனால் இதற்கு அநேக வருடங்கள் ஆகலாம். இந்த பாடத்தில், சபையின் ஆளுகை அமைப்பில் பிராந்திய சபைகளின் போக்கு எப்படி உள்ளது.

என்பதை படிக்க விரும்புகிறோம். இந்தப் பாடத்தில், நான்கு வார்த்தைகளான ''வசனப்படி'', ''வசனப்படி-யற்ற'', ''ஆளுகை அமைப்பை பெறுதல்'', ''ஆளுகை அமைப்பை பெறாமை'', என்பவைகளை பயன்படுத்தி பார்ப்போம். ''வசனப்படி'' என்றால், ஆளுகை அமைப்பில் பிராந்திய சபையின் நிலைமை வேதாகமத்தின்படி சரியானது என்பதாகும். ''வசனப்படியற்ற'' என்றால் நிலைமை தவறானது அல்லது பாவமானது என்பதாகும். ''ஆளுகை அமைப்பை பெறுதல்'' என்றால், சபையில் மூப்பர்களும் உதவிக்காரர்களும் உள்ளனர் என்பதாகும். ''ஆளுகை அமைப்பை பெறாமை'' என்றால், ''மூப்பர், உதவிக்காரர்கள் இல்லாத சபை என்பதாகும். ஒரு சபை-யானது வசனப்படி? ஆளுகை அமைப்பை பெறாமலிருக்க-லாம். . தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லாமையால், யாருமே நியமிக்கப்படாத பிராந்திய சபை இது. தகுதியுள்ளவர்கள் இல்லாமையால் அதிகாரிகள் யாரும் சபையில் இல்லா விட்டாலும், சபையானது வசனத்தின்படி? சரியானதே. சபையின் ஆரம்பகாலத்திலே ஒவ்வொரு பிராந்திய சபை-யிலும் அதிகாரிகள் இருப்பதில்லை என்பது கிறிஸ்துவின் திட்டம். கிறிஸ்தவ மனிதர்கள் கர்த்தருக்குள் வளர்ந்து பெலப்பட போதிய அவகாசம் கொடுக்கவே இப்படியுள்ளது. இந்த இடைவெளி காலத்தில் வேதாகமம் சபையின் ஆளு-கை அமைப்பைக் குறித்து கொண்டுள்ள உபதேசத்தை சபை கற்றுக் கொள்ள முடியும். தகுதிவாய்ந்த அதிகாரி-கள் இல்லாமையால் அந்த சபை ''ஆளுகை அமைப்பை பெறவில்லை'' என்று அழைக்கப்படுகிறது. பின்னதாக தகுதியுள்ள அதிகாரிகளை பெற்றபின் அது ஆளுகை அமைப்பைப் பெறக்கூடும் என்பதால் முழு அமைப்பை அது இன்னும் பெறவில்லை. அதிக காலம் ஆகாமலிருக்கும் சபையில் தகுதியுள்ள அதிகாரிகளை இன்னும் பெறாம-

லிருந்தால் அது மோசமான நிலையில் இருப்பதாக கூற-முடியாது. வேதாகமத்தில் அதிகாரிகளோ மற்றவர்களோ இல்லாத பிராந்திய சபைகளை நாம் காண்கிறோம். தகுதியற்ற அதிகாரிகளைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதி-காரிகளே இல்லாமலிருப்பது நல்லது. வசனப்படியான ஆளுகை அமைப்பை பெறாத சபை என்பது, இன்னும் தகுதியுள்ள மனுசர்களோ அதிகாரிகளோ அதில் இல்லை என்று பொருள்.

**(2) வசனப்படியற்ற ஆளுகை அமைப்பை பெறாமை.** அதிகாரிகளையே பெற்றிராத ஒரு பிராந்திய சபை ஆளுகை அமைப்பை பெறாமலிருக்கிறது, இதே நிலையில் இது (தொடர்ந்து) இருக்குமானால் அது வசனத்திற்கு புறம்பானதாக அல்லது தவறானதாக இருக்கிறது. அது தவறானதாக இருப்பதற்கு காரணம் அந்த சபையில் தகுதியுள்ள மனிதர்கள் இருந்தும் இன்னும் நியமிக்கா-மலிருப்பது தான். அப்படிப்பட்ட சபைகள் மனிதர்களை தகுதிபடுத்த அநேக வருடங்களை எடுத்துக் கொள்கின்றன. மனிதர்கள் தகுதியுள்ளவர்களாக உள்ளனர். ஆனால் சபை இன்னும் அவர்களை நியமிக்கவில்லை. இதுவே வசனத்-திற்கு புறம்பானது. மனிதர்கள் தகுதிகளைப் பெற்றவுடனே அவர்களை நியமிப்பது நன்று. ஒரு பிராந்திய சபை தகுதியுள்ள அதிகாரிகளாகிய மூப்பர் உதவிக்காரர்களை பெற்றிராத பட்சத்தில் சரியான முறையில் செயல்பட இயலாது. ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒரு பூர்த்தியான ஆளுகை அமைப்பை நோக்கி தகுதியான மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் பெற ஏதுவாக பாடுபட வேண்டும். வச-னப்படி ஆளுகை அமைப்பை பெறாத சபை என்பது தகுதியுள்ள மூப்பர்களை பெற்றிருந்தும் அவர்களை அதி-காரத்தில் அமர்த்தாததாகும்.

**(3) வசனப்படியற்ற ஆளுகை அமைப்பு பெறுதல்.** இந்தவகை பிராந்திய சபைகளில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் ஆளுகை அமைப்-

யை பெற்றிருக்கின்றன. ஆனால் மனிதர்களோ தகுதியற்றவர்களாவர். இவ்வகையில் இது வசனப்படியானதன்று. சில சபைகள் அவசரப்பட்டு ஆளுகையை அமைக்கின்றன. தகுதியாம்சங்களை சரியாக பெறுவதற்கு முன்பதாகவே அதிகாரிகளை நியமிக்கின்றனர். இப்படிச் செய்வதால் அதிகமான கேடுகளையும் தொல்லைகளையும் வருவிக்கின்றனர். தகுதியற்றவர்களை நியமிக்காமலிருப்பது வசனப்படியானது. ஆனால் உண்மையிலேயே தகுதிபெறாத மனிதர்களை மூப்பர்களாக நியமிப்பது வசனத்தின் படியானதல்ல. இது சபையில் பெரிய கெடுதலையும் உபத்திரவத்தையும் கொண்டுவரும். எனவே வசனப்படியற்ற ஆளுகை அமைப்பை பெறுகிற சபை தகுதியற்ற மனிதர்களை அதிகாரிகளாக பெற்றவைகளாகும்.

(4) வசனப்படியான ஆளுகை அமைப்பை பெறுதல். வசனப்படியான ஆளுகை அமைப்பை பெறுகிற சபை என்பது, தகுதியுள்ள மனிதர்களை மூப்பர்களாகவும் உதவிக்காரர்களையும் பெற்றிருக்கும். மனிதர்கள் தகுதியுள்ளவர்களாகும்வரை, சபை அவர்களை நியமிக்க மறுக்கும். தகுதிகளைப் பெற்றவுடனே அவர்களை அதிகாரிகளாக நியமிக்கிறது. அப்படிப்பட்ட சபைகள் மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் பெற்றிருப்பதால் அது ஆளுகை அமைப்பை பெற்ற சபையாகும். சரியானபடி தகுதியுள்ளவர்களை நியமிப்பதால் அது வசன ரீதியானது. ஒவ்வொரு பிராந்திய சபையும் வசனரீதியான தகுதியுள்ள அதிகாரிகளை பெற ஏதுவாக கற்றுத்தேர்ந்து அதற்காக உழைக்கட்டும். ஆனால் உண்மையிலேயே தகுதியில்லாதவர்களை அவசரப்பட்டு நியமிக்கும் சபை எதுவுமில்லாமலிருக்கட்டும். 1 தீமோத்தேயு 3-ம் அதிகாரத்திலும், தீத்து 1ம் அதிகாரத்திலும் மூப்பர்களுக்கும் உதவிக்காரர்களுக்கும் உள்ள

தகுதியாம்சங்களை கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்கள் அதிகமாக படிக்கப்பட வேண்டும். பின் வரும் பாடங்களில் மூப்பர்களின் தகுதிக்குள்ள நடத்தைகளை ஒன்றன்பின் ஒன்றாக அலச ஆரம்பிப்போம். வசனப்படி ஆளுகை அமைப்பை பெறாமை, வசன ரீதியற்ற ஆளுகை அமைப்பை பெறாமை, வசனப்படியற்ற ஆளுகை அமைப்பை பெறுதல், வசனப்படி ஆளுகை அமைப்பை பெறுதல் ஆகியவைகளினால் பிராந்திய சபைகளின் போக்கு வெளிப்படும்.

## கேள்விகள்

1. சபையின் நிலை சரியாக இருக்கிறது என்பதைக்காட்ட நாம் ______________ சொல்லுகிறோம்.
2. சபையில் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதைக்காட்ட நாம் ______________ சொல்லுகிறோம்.
3. சபையின் நிலை தவறாக இருக்கிறது என்பதைக்காட்ட நாம் ______________ சொல்லுகிறோம்.
4. சபையில் அதிகாரிகளே இல்லை என்பதைக்காட்ட நாம் ___________ சொல்லுகிறோம்.
5. ஆளுகை அமைப்பை பெற்ற, பெறாத சபைகளை வேதாகமத்தில் காணுகிறோமா?
6. சபையில் தகுதியற்ற மனிதர்களை நியமிக்காமலிருப்பதற்கு ___________
7. சபையில் தகுதியுள்ள மனிதர்கள் இருந்தும் நியமிக்காமலிருந்தால் ___________
8. சபையில் தகுதியற்ற மனிதர்களை நியமிப்பதற்கு ______________

9. சபையில் தகுதியுள்ள மனிதர்கள் இருந்து அவர்களை நியமித்தால்————

10. அதிகாரிகளின் தகுதிகளைக் குறித்து பேசுகின்ற 2 அதிகாரங்கள் யாவை?

## பாடம் 22

### மூப்பர்களின் தகுதியாம்சங்கள் (1)

1. குற்றஞ்சாட்டப்படாதவன்
2, ஒரே மனைவியுடைய புருஷன்
3, ஜாக்கிரதையுள்ளவன்
4. தெளிந்த புத்தியுள்ளவன்
5. யோக்கிதையுள்ளவன்.

#### விவாதம்

மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து ஒவ்வொரு கருத்துக்களாக ஆரம்பிக்கும் முன், முகவுரையாக சிலவற்றை காண்போம். 1 தீமோ 3:1.ல், கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்'', என்று சொல்லப்படுகிறது. கர்த்தருடைய சபையில் அதிகாரியாக இருக்க விரும்பிகிற ஒவ்வொரு மனிதனும் அது நல்ல வேலை என்பதால் விரும்புகிறான். அது முதன்மைத்துவம் அல்லது அதிகாரம் மிக்கது என்பதற்காக அதை விரும்பாமல், கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதால் இதை விரும்ப வேண்டும். வேலையிலிருந்து தப்பித்துக் கொள், ளாமல், மற்றவர்களுக்கு எப்படி வேலை செய்ய வேண்டும் என்று சொல்வதற்குமல்லாமல், ஒரு மூப்பர் கடின உழைப்பிற்கு தன் உட்படுத்த விரும்ப வேண்டும், ஒரு மூப்பருடைய வேலை அதிகமான முயற்சியையும், அநேக மணி

நேரத்தையும் எடுத்துக் கொள்கிற வேலையாகும். ஆதலால் இது அதிகாரத்திற்கோ முதன்மைத்துவத்திற்கோ தேடப்பட வேண்டிய வேலையல்ல. 1 தீமோ 3:2 ல் ''கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், யோக்கிதையுள்ளவனும் உபசரிக்கிறவனும் போதக சமர்த்தனுமாயிருக்க வேண்டும்''. என்று சொல்லப்படுகிறது'' இருக்க வேண்டும் என்ற பதம், ''கட்டுபடுத்துதல்'', ''தேவைப்படுகிறது'', அவசியமானது'', அல்லது ''அத்தியாவசியமானது'', என்றெல்லாம் பொருள்படும். அப்போஸ்தலர்கள் பூமியிலே காட்டுகிறது எதுவோ (மத் 16:19). மூப்பர்களின் தகுதியாம்சங்களும் கூட பரலோகத்திலும் பூமியிலும் கட்டப்படுகிற ஒன்றே. ஒவ்வொருதகுதியும் அவசியம் ''வேண்டும்''. அனைத்து தகுதியாம்சங்களும் இல்லாமல் ஒரு மனிதன் வசன ரீதியான மூப்பராக இருக்க இயலாது.

*(1)* **குற்றஞ்சாட்டப்படாதவன்.** ''குற்றஞ்சாட்டப்படாதவன்'' என்றால் ''கடிந்து கொள்ளப்படாதவன்' என்று பொருள். குற்றமற்றவன் எவனும் குற்றஞ்சாட்டப் பட மாட்டான். எல்லா மனிதர்களும் பாவம் செய்யக் கூடியவர்களாயிருப்பதால், (யோவன் 1:8) பாவமே இல்லாத பூரணத்தை உடையவன் என்பது இதன் பொருளல்ல, தன் தவறை தான் அறியும் பொழுது உடனே மனந்திரும்பி, அறிக்கை செய்து, ஜெபம் செய்கிறவனாயிருப்பான், இவ்வகையில் இவன் நடத்தையில் குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்கிறான். சக்கரியாவும், எலிசபெத்தும் பழைய நியாயப் பிரமாணத்தின்படி குற்றமற்றவர்களாயிருந்தனர் (லூக்கா 16:99) சபையில் உதவி செய்யப்படுகிற விதவை குற்றமற்றவளாயிருக்க வேண்டும். (1தீமோ 5:7) மோசேயின் பிரமாணத்தின்படி, சவுல் குற்றஞ்சாட்டப்படாத-

வனாயிருந்தால் (பிலிப் 3:6) அனைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் வருகையின்போது குற்றமற்றவர்களாயிருக்கவேண்டும். (1தெச 5:23, 2பேதுரு 3:14). இவ்வசனங்களின் வாயிலாக குற்றமற்றவர்களாயிருக்க வேண்டிய சாத்தியகூறுகளை காணுகிறோம். மூ ப் ப ர் க ள் தங்கள் குணாதிசயங்களில் கடிந்து கொள்ளப்படுதலுக்கும், குற்றஞ் சாட்டப்படுதலுக்கும் அப்பாற்பட்டு இருக்க வேண்டும்.

**(2) ஒரே மனைவியை உடைய புருஷன்.** இதன் அவசியம் இரண்டு பொருள்களை உடையது. ஒருவன் திருமணமானவனாக இருக்க வேண்டும். அடுத்து, ஒரு மனைவியை மட்டும் உடையவனாக இருக்க வேண்டும். திருமணமாகாதவனோ அல்லது பலதார மணம் செய்தவனோ மூப்பராக இருக்க முடியாது. மற்றவைகளைப் போலவே இந்த விஷயத்திலும் அவன் முன் உதாரணமாய் இருக்க வேண்டும். ( பேதுரு 5:3). ஒவ்வொரு புருஷனும் தன் சொந்த மனைவியையும், ஒவ்வொரு மனைவியும் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். (1 கொரி 7;2), முதல் வாழ்க்கைத்துணை இருக்கும்போதே இரண்டாம் மணம் செய்தால் அது விபச்சாரம். (ரோமர் 7: 1-3). இடையில் இருதயக் கடினத்தினிமித்தம் சில மாற்றங்கள் இருந்திருந்தாலும், தேவன் ஆரம்பம் முதல் அப்படி வைக்கவில்லை என்று இயேசு சொன்னார். (மத் 19 : 3-9). ஒரு மூப்பர் ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருக்க வேண்டும்.

**(3) ஜாக்கிரதையுள்ளவன்.** ஜாக்கிரதையாயிருத்தல் என்பது எச்சரிக்கையாயிருத்தலாகும். இரவுக்காவலன் விழிப்பாய் இருப்பதைப்போல, எல்லா ஆபத்துக்களுக்கும் எச்சரிக்கையாயிருக்கிறான். இஸ்ரவேலின் மதிற் சுவற்றின் மேல் காவல்காக்கும் காவற்காரன், வருகின்ற

ஆபத்துக்கு எச்சரிக்கை செய்யும்படியாகவும், எச்சரிக்கை செய்யாவிட்டால் இரத்தபழிக்கு ஆளாவார்கள் என்றும் சொல்லப்பட்டது. (எசேக் 3: 17-19). எபி 13:17ல் மூப்பர்கள் ஆத்துமாக்களுக்கு பொறுப்பாளிகளானதால் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாமோ வென்று சமயம் பார்த்து சுற்றித்திரிவதால், எல்லா கிறிஸ்தவர்களுமே தெளிந்த புத்தியும் எச்சரிக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டும். (1பேது 5:8). மூப்பர்கள் மந்தையில் மீதுள்ள தங்கள் பொறுப்பை உணர வேண்டும்.

**(4) தெளிந்த புத்தியுள்ளவன்.** தெளிந்த புத்தியுள்ளவனாயிருத்தல் என்றால், மனத்தெளிவு உள்ளவனாய், புத்திகூர்மை மிக்கவனாய், வினயமுள்ளவனாயிருத்தல் என்று பொருள். தீமை நிறைந்த உலகத்திலே எல்லாவற்றிலும் கிறிஸ்தவர்கள் தெளிவானவர்களாய் வாழ வேண்டும். (தீத்து 2;12). சுவிசேஷம் சத்தியத்தையும், தெளிவையும் பெற்றதாய் காணப்படுகிறது. (அப் 26:25). நாம் தூங்குகிறவர்களாயிராமல், தெளிந்த புத்தியும் ஜாக்கிரதையுமுள்ளவர்களாயிருக்க வேண்டும். (1தெச 5:6). நமது மனம் தெளிந்த புத்தியை தரித்துக் கொள்ள வேண்டும். (1பேதுரு 1:13). கிறிஸ்தவ ஜீவியத்தின் வினயத்தின் தன்மையை நாம் சிந்திக்க வேண்டும். (1பேதுரு 4:7;5:8). ஒரு மூப்பர் தெளிந்த புத்தியிலுள்ள உண்மைகளைக் குறித்து கவனக்குறைவாய் இருக்கக்கூடாது. நடத்தையிலே வினயமான எண்ணமும், சிந்திக்க கூடியவனும், புத்திக்கூர்மையும் உள்ளவனாய் இருக்கவேண்டும்.

**(5) யோக்கிதையுள்ளவன்.** தன்னை மூப்பராக்குவதற்குரிய தகுதியை பெற, ஒரு மனிதனின் ஜீவியம் நன்கு ஒழுக்கமுள்ளதாயும் கட்டுப்படுத்தபட்டதாயும் இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல், பிற கிறிஸ்-

தவர்களுக்கு முன்பாக நல்ல முன் மாதிரியை வைத்தார் (1தெச 2:10, 2தெச 3:7). நமது ஜீவியத்தின் மாதிரி, கனமுள்ளதாயும், அவிசுவாசிகளுக்கு முன்பாக நல்லவை-களாயுமிருக்க வேண்டும். அப்பொழுது அவர்களை கிறிஸ்துவினிடத்தில் ஆதாயப் படுத்திக் கொள்ளலாம். (1பேதுரு 2:12). ஒரு மூப்பரின் வாழ்க்கை அவரை அறிந்த எல்லோருக்கும் முன்பாக சரியானதாகவும், உண்மையுள்ள-தாகவும், முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும்.

## கேள்விகள்

1. ''கட்டுப்படுத்துகிறது'' என்பது எந்த வார்த்தையின் பொருள்?
2. 1தீமோ3:1ல் ஒரு மனிதன் ———— விரும்புகிறான்.
3. மத் 16 : 19ல் அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் பரலோகத்திலும் பூமியிலும் ————.
4. குற்றஞ்சாட்டப்படாதவன் என்றால் ————
5. குற்றஞ்சாட்டப்படாமை என்றால், பாவமற்ற பரி-பூரணமா?
6. ''ஒரே மனைவியை உடைய புருஷன்'' என்பது ஒரு மனிதனை ————
7. ஜாக்கிரதையாயிருத்தல் என்பது ————
8. ''தெளிந்த புத்தி'' என்பதற்கு மூன்று விளக்கங்கள் கொடுக்கவும்.
9. ''யோக்கியதையுள்ளவன் என்பதற்கு 2 வார்த்தைகள்?
10. எபேசு் 3:17-19ல் எந்த மனிதனைப் பற்றி பேசப் படுகிறது?

# பாடம் - 23

## மூப்பர்களுக்கான தகுதியாம்சங்கள் (2)

### புறக்குறிப்பு

1. அந்நியரை உபசரிக்கிறவன்
2. போதக சமர்த்தன்
3. மதுபான பிரியனாயில்லாமை
4. அடிக்கிறவனாயிராமை
5. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயிராமை
6. பொறுமையுள்ளவன்

### விவாதம்

**(1) அந்நியரை உபசரிக்கிறவன்** மூப்பர்களுக்கான தகுதியாம்சங்களை குறித்து அதிகமாக படிக்க வேண்டும். ஒவ்வொரு குறிப்பும் அதிக விளக்கமாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றிருக்க வேண்டிய குணாதிசயங்களும், தன்மைகளும் இவை-கள் திருமண சம்பந்தப்பட்ட சில தகுதியாம்சங்களைத்தவிர மற்ற அனைத்து தகுதியாம்சங்களையும் ஒவ்வொரு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனும் பெற்றிருக்க வேண்டும். பெரும்பாலான குணாதிசயங்களை அனைத்து கிறிஸ்தவர்களும் அடைய முயற்சிக்க வேண்டும். அவைகளில் ஒன்று தான் அந்நியரை உபசரித்தல். தீத்து 1:8-ல், ஒரு மூப்பர் அந்-நியரை உபசரிப்பதில் பிரியப்படக் கூடியவனாயிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதன் பொருள் தேவையுடையவர்களை தனது வீட்டிற்கு வரவேற்க வேண்-டும் என்பதாகும். ஒருவன் தனது உணவையும் உறைவிடத்தையும் பகிர்ந்து கொடுக்கத்தக்க கிறிஸ்தவ அன்புள்ளம் கொண்டவனாக இருக்க வேண்டும். உபசரிப்பு எல்லா மனு

சரிடத்திலும், விசேஷமாக சக-கிறுஸ்தவர்களிடம் காட்டப் பட வேண்டும் (கலா. 6:10). ரோமர் 12:13ல், ''பரிசுத்த வான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள் அந்நியரை உபசரிக்க நாடுங்கள்''. என்று சொல்லப்படு-கிறது. எபிரேயர் 13:2ல், ''அந்நியரை உபசரிக்க நாடுங்கள் சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு,'' என்று சொல்லப்படுகிறது. இந்த வசனம் ஆபிரகாமிடத்-தில் வந்த அந்நியர்களாகி தேவ தூதர்களை அவன் உப-சரித்த தன்மையை குறிப்பிடுகிறது (ஆதியாகமம் 18:1-8). 1 யோவான் 3:17ல், ''ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுள்ளவனா யிருந்து, தன் சகோதரனுக்கு குறைச்சல் உண்டு என்று கண்டு தன் இருதயத்தை அடைத்துக்கொண்டால் அவனுக் குள் தேவ அன்பு நிலைக்கொள்வது எப்படி''? என்று போதிக்கிறது. 1பேதுரு4:9ல், முறுமுறுப்பில்லாமல்ஒருவரை யொருவர் உபசரியுங்கள்'' என்று சொல்லப்படுகிறது. ஒரு மூப்பர் உபசரிப்புத்தன்மை உள்ளவராயிருக்க வேண்டும்.

**போதகசமர்த்தன்** ''சமர்த்தன்'' என்ற வார்த்-தையின் பொருள், ''தகுதியுடையவனாயிருப்பதுடன்'', ''விருப்பமுள்ளவனாயுமிருத்தல்'' என்பதாகும். ஒரு மூப்பர் ஒரு சிறந்த தகுதி வாய்ந்த போதகனாயிருக்க வேண்டும். இது கவனமான வாசிப்பிலும் விழிப்பான ஆயத்தத்திலும் அதிகமான அனுபவத்திலும் வருவதாகும். ஒரு சுவிசேஷ கனும் கூட போதக சமர்த்தனாய் இருபபது அவசியம் (1 தீமோ 2:24). கிறிஸ்தவம் போதனை மார்க்கமாகும். ''சகல ஜாதிகளுக்கும் போதித்து, ஜனங்களை ஞானஸ் நானப்படுத்தி, அவர்களுக்கு மறுபடியும் போதிக்கும்படி இயேசு சொன்னார் (மத் 28:19-20) கேட்டு அறிந்து கொள்வதன் மூலம் தேவன் ஜனங்களை கிறிஸ்துவினிடம் இழுக்கிறார் (யோவான்6:44,45). மற்றவர்களுக்கு போதிக்

கத்தக்க உண்மையுள்ள மனுசர்களிடத்தில், தன்னிடத்தில் கேள்விப்பட்டவைகளை ஒப்புவிக்கும்படி பவுல் தீமோத்தேயுவிடம் சொன்னார் (2 தீமோத்தேயு 2:2). ஆதி சபை போதிப்பதிலும், பிரசங்கிப்பதிலும் இடைவெளி விட்டு வைக்கவில்லை (அப் 5:42). எபிரேய கிறிஸ்தவர்கள் போதகர்களாக இருக்க வேண்டிய காலத்திலும் அவர்களுக்கு மறுபடியும் தேவனுடைய வசனத்தின் மூல உபதேசங்களையே போதிக்க வேண்டியதாயிற்று (எபிரேயர் 5:12). சபையில் நல்ல போதகர்களையும், நல்ல போதகங்களையும் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை இந்த வசனங்கள் காட்டுகின்றன.

(3) **மதுபான பிரியனாயில்லாமை** இதன் பொருள், ஒரு மூப்பர் மதுபானத்தை அருந்துவதோ அல்லது மதுபானம் அருந்துவதற்கு இட்டுச் செல்லும் காரியத்தையே செயல்படுத்தக்கூடாது என்பதாகும். பவுல் தான் எதற்கும் அடிமைப்படுவதில்லை என்று சொல்லுகிறார். (1 கொரி 6:12). மதுபான வெறியர் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று அவர் கொரிந்தியர்களுக்கு எழுதுகிறார் (1 கொரி 6:10). மதுபான வெறியர்கள் தரித்திரத்தையும், ஐயோ (ஆபத்தையும்), துக்கம் சண்டை, புலம்பல், காயமில்லாத காயங்களையும், இரத்தங்கலங்கின கண்களையும், உடையவர்களாவார்கள் (நீதி 23:21,29-35): மதுபானம் மெதுவாக இறங்கும், பாம்பைப் போல கடிக்கும், விரியனைப் போல தீண்டும். மதுபான வெறியை உண்டு பண்ணுவதில் திராட்சை இரசமும் ஒன்றாகும். கர்த்தருடைய பந்தியிலே திராட்சை சரியாக இரசத்தை பயன்படுத்துவது நன்றே (மத் 26:29). மருந்தாகவும் அதை பயன்படுத்தலாம் (1 தீமோத்தேயு 5:23).

ஆனால் அதே திராட்சை இரசம் ஒருவரை குடிப்பழக்கத்திற்கு கொண்டு செல்லுமானால் அது பாவமாகும். மதுபான பழக்கமில்லாமலும் மூப்பர்கள் சபைக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும்.

(4) **அடிக்கிறவனாயில்லாமை.** ஒரு மூப்பர் மற்றவர்களை அடிக்கும் சுபாவமுடையவர்களாயிருக்கக் கூடாது. அவர் சவுக்கடி இல்லாமலேயே மற்றவர்களின் செல்வாக்கை பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிறிஸ்தவன் எப்பொழுதும் யாரையுமே அடிக்க கூடாது. வாரை உண்டுபண்ணி, தேவாலயத்திலிருந்த மிருகங்களை இயேசு விரட்டினார் (யோவா. 2:15). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இரட்சிக்க வேண்டும் (நீதி 13 : 24 ). ஆனால் மூப்பர்கள் தங்கள் முன்மாதிரியான அதிகாரத்தை பயன் படுத்த வேண்டுமேயொழிய, வாரையோ, கோல்களையோ (தடிகளை) அல்ல. சமூக அரசுகளில் மாம்சபிரகாரமான தண்டனைகள் நிறைவேற்றப்படுகின்றன (ரோமர் 13:3,4). ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யம் பட்டயத்தால் ஆளப்படுவதல்ல (மத்தேயு 26:51, 52). மாம்ச பிரகாரமான எந்த ஈட்டிகளையும் காட்டிலும், தேவனுடைய வசனமே அதிக வல்லமையுள்ளவைகளாகும். (எபி. 4:12). நம்மை அடிக்கும் ஒருவருக்கு வல்து கன்னத்தைக் கொடுத்தலே, வன்முறையால் மேற்கொள்ளாத சத்துருவையும், வெற்றிகொள்ளச் செய்யும் (மத்தேயு 5:39). மற்றவர்களை அடிக்கும் சுபாவமற்ற முன்மாதிரி மூப்பர்களுக்கு இருக்குமானால், அதுவே மற்ற கிறிஸ்தவர்களுக்கு ஏற்றதாயிருக்கும்.

(5) **இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயில்லாமை.** ஒரு மூப்பர் இச்சிக்கிறவராயிருக்கக்கூடாது.

இழிவான ஆதாயம் என்பது பணமோ அல்லது உலக ஆதாயமோ, இச்சிக்கிற மனிதன் தனக்குண்டான உலக பொக்கிஷத்தில்தான் தனது வாழ்க்கை அமைந்துள்ளது என எண்ணுபவன் (லூக்கா 12:15). அவன் தனக்குத்தானே (சொத்துக்களை) பொக்கிஷத்தை சேர்த்து வைக்கிறானே யல்லாமல், தேவனுக்காக அல்ல, (லூக்கா, 12:21). நாம் தேவனுக்கும் உலக காரியத்துக்கும் (பணத்திற்கும்) ஊழியம் செய்ய முடியாது என்று இயேசு சொன்னார். (கொலேசே-யர் 3:5). அவர்கள் பரலோகத்திற்குள் நுழைய முடியாது (1கொரி 6:9,10) அவர்கள் சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் (1கொரி 5:11). கிறிஸ்தவர்கள் ஐசு-வரியவான்களாக மாற தேடக்கூடாது. தேவ பக்தியே அவர்களின் மிகப்பெரிய ஆதாயம். உண்ணவும் உடுக்கவும் இருந்தால் போதும் என்று திருப்தியுடையவர்கள், தங்களை அழிவிலே அமிழ்த்துகின்ற ஐசுவரியம் என்னும் கண்ணியிலே சிக்காமல், சோதனையினின்று தங்களைக் காத்துக்கொள்-கிறார்கள். அவர்கள் பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேறா-யிருக்கிறது என்றும், சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளினாலே தங்களை உரு-வக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவார்கள் (1 தீமோ 6:6-10). ஒரு கிறிஸ்தவனுக்கு பிரதிபலன் பர-லோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (5:12). அவன், பண ஆசை கொண்டுவருகிற சுய நலத்தையும், ஆசையையும் தவிர்க்கிறான். பணஆசையிலும், உலக ஆதாயத்திலுமிருந்து விடுதலையாக்கியவராக ஒரு மூப்பர் மற்றவர்களுக்கு பல-மான முன்மாதிரியை வைக்க வேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிப்பவர்களல்லர்.

(6) **பொறுமையுள்ளவன்.** ஒரு மூப்பர் தன்மையும் பொறுமையும் உடையவராயிருக்கிறார். அவர் நீதியும்

இரக்கமுள்ளவராயிருக்கிறார். கோபமில்லாமல் மற்றவர்களை தாங்குகிறார். அவர் விரைவில் சோர்வடைந்து காரியங்களை விட்டுவிட மாட்டார். அவர் உறுதியும் சகிப்புத்தன்மையும் உடைய வராயிருக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும் பொறுமை கடை பிடிக்கப்பட வேண்டும் (2 பேதுரு 1:6). சோதனை விசுவாசத்தின் கிரியையால் பொறுமையை உண்டாக்குகிறது (யாக். 1:3). கஷ்ட நேரங்களில் சகித்துக் கொண்டிருப்பது தேவன் மீது நம்பிக்கையை வளர்க்கிறது. ஒரு மூப்பரின் பொறுமையால் மற்றவர்களுடைய கஷ்ட சூழலில் உற்சாகமளிக்க முடியும். அவர் தன்மையும், நீதியும் உள்ளவராயிருப்பதால், சோதனை நேரத்தில் மக்கள் அவரிடத்தில் ஆலோசனை பெற அவரையே சார்ந்திருப்பர். சபையின் ஆலோசனை உரையாடல்களை சண்டையாக மாறாதபடி காத்துக் கொள்கிறார். பிராந்திய சபையை நிலையாகவும், ஸ்திரமான ஒன்றாகவும் அமைக்கிறார். கிறிஸ்தவனுக்கு அதிமுக்கியமாக தேவைப்படுகிற மிகச் சிறந்த குணாதிசயம் பொறுமையாகும். மூப்பர்கள் பொறுமைக்கு முன்மாதிரியானவர்கள்.

## கேள்விகள்

1. உபசரிப்பு என்பதற்கு குறுகிய பொருள் கொடுக்கவும்.
2. யாருக்கு உபசரிப்பு செய்ய வேண்டும் ..........
   விசேஷமாக யாருக்கு .......... ............
3. ''போதக சமர்த்தன்'' என்பதற்கு குறுகிய பொருள் கொடுக்கவும்.
4. ''போதித்தல்'' குறித்து பேசும் 7 வசனக் குறிப்புகள் யாவை?
5. திராட்ஷை இரஷம் முறையாக பயன்படுத்தப்பட வேண்டிய 2 காரியங்களை குறிப்பிடுக.

6. ''அடிக்கிறவன்'' என்றால் என்ன?

7, ''அடிக்கிற நிலைக்கு என்பதற்கு 2 முன் மாதிரி வசனங்களை குறிப்பிடுக.

8. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவன் என்பதற்கு என்ன பொருள்?

9. இச்சித்தலைக் குறித்து பேசுகின்ற 7 வசனக்குறிப்புகள் யாவை?

10. ''பொறுமை'' என்றால் என்ன?

# பாடம் - 24

## மூப்பர்களுக்கான தகுதியாம்சங்கள் (3)

## புறக்குறிப்பு

1. முற்கோபமில்லாதவன் (சண்டை பண்ணாதவன்)
2. தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.
3. விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன்
4. நூதன சீஷனாயிராதவன்
5. புறம்பேயிருந்து நற்சாட்சி பெற்றவன்
6. தேவனுடையது உக்கிராணக்காரன்

### விவாதம்

*(1)* **சண்டை பண்ணாதவன் (முற்கோபமில்லாதவன்).** 1 தீமோத் 3:3ல் ஒரு மூப்பர் சண்டை பண்ணாதவராயிருக்க வேண்டும் என்று சொல்லுகிறது தீத்து 1:7ல் முற்கோபமுள்ளவனாயிருக்கக் கூடாது என்று சொல்லுகிறது. அதாவது ஒரு மூப்பர் சண்டை பண்ணக் கூடியவராயிருக்கக் கூடாது என்பது இதன் பொருள். அவர் தன் கோபத்தை கட்டுப்படுத்துகிறார். அவர் பேச்சிலோ நடத்தையிலோ கோபமிருப்பதில்லை. அவர் சமாதானமுடையவரும், சமாதானம் பண்ணுகிறவருமாயிருக்கிறார்.

சமாதானம் பண்ணுகிறவர்களை கிறிஸ்து ஆசீர்வதித்தார் (மத்தேயு 5:9). கிறிஸ்தவர்கள் எல்லா மனுசரிடத்திலும் சமாதானமாய் வாழ வேண்டியவர்கள் (ரோமர் 12:18). அவர்கள் நல்ல தன்மையும் இரக்கமும் தெய்வீக ஞானத்தால் பெற்றிருக்கிறார்கள். நீதியின் கனியாகிய சமாதானத்தை அவர்கள் விதைக்கிறார்கள். அவர்கள் சமாதானம் பண்ணுகிறார்கள் (யாக் 3:17, 18). ''சகலவிதமான கசப்பும் கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாய் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'' (எபேசியர் 4:31,32). கேட்பதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கும்படி நாம் சொல்லப்படுகிறோம். (யாக்கோபு 1:19) சண்டை பண்ணுகிற மனிதன் கலகத்தை விரும்புகிறான் அவன் ஒழுங்கற்ற தன்மையையும், சண்டைகளையும் கொண்டு வருபவன் என பிறர் அறிவர். ஒரு மூப்பரோ நல்ல தன்மையும் சமாதானமுடையவராகவும் இருப்பதற்கு ஓர் முன் உதாரணமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் சண்டை பண்ணுகிறவராகவோ முற்கோபமுடையவராகவோ இருப்பதில்லை.

(2) **தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்**. ஒரு மூப்பர் ஒரு நல்ல கணவனாகவும், தகப்பனாகவும் இருக்கிறார். அவருடைய நல்லநடத்தை தேவபக்திக்கு ஊக்குவிக்கிறது. மற்றவர்களை விட, ஒருவனின் குடும்பே நன்கு அவனை பார்க்கவும் அறியவும் செய்கிறது. ஆதலால், அவன் நடத்தையால் நல்லதையோ, தீமையையோ அவர்களுக்கு முன் சிபாரிசு செய்கிறான். 1 தீமோ

3:5ல், ‘‘ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?’’ என்று சொல்லப்படுகிறது. குடும்பமும் சபையும் கிறிஸ்தவ கோட்பாடுகளின் ரீதியிலே நடத்தப்படுபவை. ஒரு மனிதனின் முன் மாதிரியும் திறமையும் அவனுடைய குடும்பத்தாரால் அறியப்படும். ஒரு மனிதன் தன் குடும்பத்தை தன்வயப்படுத்தும் திறமையற்றவனாக இருந்தால், தான் ஒரு மூப்பனாயிருப்பதற்குரிய தகுதியையும் பெற திறமையற்றவனே. கொர்நெலியு தன் குடும்பத்தோடு தேவனுக்கு பயந்திருந்தான் (அப் 10:2). சரியானவைகளைச் செய்ய ஏதுவாக அவனது குடும்பம் அவனுக்கு மதிப்பைக் கொடுத்து அவனை பின்பற்றியது. ஒரு மூப்பர் தன் குடும்பத்தை நன்கு அதிகாரம் செலுத்தி (தனது கட்டுப்பாட்டில்) வைத்திருக்கும் போது, பிறருடைய குடும்பப் பிரச்சனையில் அவர்களின் தேவையறிந்து ஆலோசனை கொடுக்க இயலும் ஆசாரியனாகிய ஏலி, தன் மகன்களை நன்கு ஒழுக்க ரீதியான காரியத்திலே நடத்தாதபடியால் தண்டிக்கப்பட்டான். (1 சாமுவேல் 3:13). எனவே, மனிதர்கள் முதலாவதாக தங்களை சொந்த குடும்பத்திலே நிரூபித்தால்தான் தேவனுடைய சபையாகிய சபையையும் அவர் கண்காணிக்க இயலும்.

(3) **விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன்** மேலே குறிப்பிடப்பட்ட விவாதத்தின் தொடர்ச்சிதான் இதுவும். ஒரு மூப்பரின் பிள்ளைகள் ‘‘சகலநல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்படியக்கூடியவாகளாயிருக்க வேண்டும்’’ (1 தீமோ 3;4). அந்த பிள்ளைகள், ‘‘துன்மார்க்கரென்றும், அடங்காதவர்கள் என்றும் பேரெடுக்காதவர்களாயிருக்க வேண்டும்’’ (தீத்து 1:6) எனவே, ஒரு மூப்பரின் பிள்ளைகள், அவரை தகுதியுள்ளவனாகவோ

தகுதியற்றவனாகவோ மாற்றக் கூடும். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்க்க வேண்டும் (எபே 6:4). ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை சிட்சித்து கற்பிப்பதுபோல், பிறரையும் நன்கு போதித்து நடத்த முடியும் என்பதை நிரூபிக்கிறார். அவர் கோபத்தை உண்டு பண்ணும் அளவுக்கு கண்காணிப்பைச் செய்யாமல், சிட்சையிலும் பெரிதான அன்பிலும் அக்கரையுடன் கண்காணிப்புச் செய்கிறார். ஒரு தகப்பன் முன்னின்று மனிதனை நடத்துவதைப் போலவேதான் ஒரு மூப்பரும் முன்னின்று நடத்துகிறார். ஒரு மனிதனின் பிள்ளைகள் துன்மார்க்களும் நல்லொழுக்க மற்றவர்களாயுமிருந்தால் அவர்களின் தகப்பன் அவர்களை கீழ்படுத்த அறியவில்லை என்பதை காட்டுகிறது. ஆதலால், அவர் ஒரு சபையையும் கண்காணிக்க தகுதியற்றவராகிறார். ஒரு மூப்பர் தனது பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படிய பண்ண வேண்டும்.

(4). **நூதன சீஷனாயிருக்ககூடாது.** ஒரு மூப்பர் ஆரம்பகாலத்தவராயிருக்ககூடாது. நூதன சீஷனாக ஒரு மூப்பர் இருந்தால், அவர் அனுபவ மற்றவரும், வளர்ச்சியின்மையால் பொறுப்பற்றவராயிமிருக்கக் கூடும். ''மூப்பர்'' என்ற பதமே வளர்ச்சியடைந்தவரும் அனுபவமுள்ளவரும் என்று பொருள். புதிதாக மனமாற்றப்பட்ட ஒரு அங்கத்தினர் மூப்பராக இருக்க இயலாது. ஒரு நூதன சீஷன் இறுமாப்படைந்து பிசாசின் ஆக்கினையிலே விழும் ஆபத்துக்குள்ளாகிறான். (1 தீமோத். 3:6). அவர் இன்னும் தலைமைத்துவத்துக்கு ஆயத்தமாகவில்லை. எத்தனை ஆண்டுகள் கழித்து ஒருவர் தகுதியை பெறுகிறார் என்று வேதம் கூறுவதில்லை. ஆனால், வளர்ச்சியடையும்போது

இருக்க வேண்டிய நடத்தைகளை குறிப்பிடுகிறது. ஒரு மனிதர் இந்த தகுதியாம்சங்களை சில வருடங்களிலே-யே அடைந்து விடக்கூடும். ஆனால் மற்றொருவருக்கு அநேக வருடங்கள் ஆகலாம். ஒரு வாலிபனுக்கு ஞானத்-தை பெற ஏதுவான வயதும் அனுபவமும் பெற்றாக வேண்டும். ஒரு மூப்பர் ஆரம்ப கால நூதன சீஷனா-யிருக்கக்கூடாது.

**(5) புறம்பேயிருந்து நற்சாட்சி பெற்றவன்.** ஒரு மூப்பர், அங்கத்தினர்களல்லாதவர்களிடத்திலும் நற்-பெயர் பெற வேண்டும். (1 தீமோ. 3:7). அவருடைய கீர்த்தி புறம்பானவர்கள் கடிந்து கொள்ளப்படுவதற்கும் அப்பாற்பட்டதாய் இருக்க வேண்டும். அவர் பழகும் மக்கள், உடன்வேலை செய்வோர், நண்பர்கள் ஆகிய அனைவரிடத்திலும் அவரது நடத்தையால் உண்டாகும் நன்மதிப்பை பெற்றிருக்க வேண்டும். இருளில் உள்ளோ-ருக்கு அவர் ஒளியாய் இருக்க வேண்டும் (மத். 5:14). மனுஷர்கள் அவருடைய நற்கிரியைகளை கண்டு தேவனை மகிமைப்படுத்த ஏதுவாக, அவருடைய வெளிச்சம் அவர்-களுக்கு முன்பாக பிரகாசிக்க வேண்டும். (மத். 5:16). அவர் மீது விசுவாசம் வைக்காதவர்கள்கூட, இவருடைய நல் ஜீவியத்தை கண்டு கனம் செலுத்த வேண்டும். கிறிஸ்த-வர்களல்லாதோர் நம்மை எப்பொழுதும் குற்றப்படுத்த காத்துக்கொண்டிருக்கிறார்கள். குற்றம் கண்டு பிடிப்ப-தற்குப் பதிலாக, உண்மை கிறிஸ்தவ ஜீவியத்தை காணும் போது, அவர்கள் மரியாதை செலுத்துவார்கள். ஒரு மூப்-பர் இப்படிப்பட்ட வராகத்தான் இருக்க வேண்டும். அவர் வாழும் வளாகத்தில் அவருடைய நல்ல ஜீவியம் அறியப் பட்டிருக்க வேண்டும். புறம்பேயிருந்து நற்சாட்சி பெறு-வதற்கு பொருள் இதுவே.

**(6) தேவனுடைய உக்கிராணக்காரன்.** தீத்து. 1:7-ல், ஒரு மூப்பர் தேவனுடைய உக்கிராணக்காரனாக குற்றமில்லாதவராயிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு உக்கிராணக்காரன் விலை மதிப்புள்ள பொருட்களுக்கு பொறுப்பாளியாக்கப்பட்டவன் என்று பொருள். விலையேறப்பட்ட சொத்துக்களுக்கு அவனே கண்காணித்துக் கொள்பவன் தனது எஜமானனின் விலையேறப்பெற்ற சொத்துக்களை கண்காணிக்கும் பொறுப்பை அவன் பெற்றிருக்கிறான். ஒரு உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும் (1 கொரி. 4:2). மூப்பர்களின் பொறுப்பில் விடப்பட்ட விலையேறப்பட்டவைகள் யாதெனில் அங்கத்தினர்களின் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களே எபிரேயர் 13:17). அவர்கள்னிமித்தம் தான் கணக்குகொடுக்கவேண்டியவர் என்ற பொறுப்போடு அவர் அவர்களை காத்துக் கொள்கிறார். பூமியிலேயே விலையேறப்பெற்ற சொத்துக்கள் அவர் வசம் கொடுக்கப் படுகிறது. (மத்தேயு 16:26). அவரின் பொறுப்பு பெரியது ஆதலால், ஒரு மனிதன் மூப்பராகும்போது, பலமான பொறுப்பின் கீழ் எப்படி உண்மை உள்ளவராக இருக்க வேண்டும் என்பதை உணரவேண்டும். மற்றவர்களுக்குரிய விலையேறப்பெற்ற சொத்துக்கு, அவர் நம்பிக்கைக்கு பாத்திரராய் அமைய வேண்டும். அவர் தான் கணக்கொப்புவிக்கும் காரியத்தை பலமாக உணரவேண்டும். ஒரு மூப்பர், தேவனுடைய உக்கிராணக்காரனாக அனுபவம் பெற வேண்டும்.

## கேள்விகள்

1. சண்டை பண்ணுகிறவன் என்றால் என்ன?
2. சண்டை பண்ணுகிறவன் ______________ விரும்புகிறான்.

3. மற்றயாரையும் காட்டிலும், யார் ஒரு மனிதனின் நடத்தையை நன்கு அறிவர்?

4. ———————————— எல்லோரோடும் தேவனுக்கு பயந்திருந்தான்.

5. விசுவாசமுள்ள பிள்ளைகளை குறித்த 3 வசனங்களை கூறு

6. நூதன சீஷன் என்றால் ————————————

7. நூதன சீஷனை என்ன பாவம் தொடரும் அபாயம் உள்ளது.

8. ''புறம்பேயிருப்போர்'' யார்?

9. உக்கிராணக்காரன் யார்?

10. அதிக விலையேறப்பெற்ற சொத்து எது?

## பாடம் - 25

### மூப்பர்களின் தகுதியாம்சங்கள் - (4)

1. தன் இஷ்டப்படி செய்யாதவன்
2. நல்லோர் மேல் பிரியமுள்ளவன்
3. நீதிமான்.
4. பரிசுத்தமுள்ளவன்.
5. இச்சையடக்கமுள்ளவன்.
6. வசனத்தை பற்றிக்கொண்டிருப்பவன்.

### விவாதம்

**(1) தன் இஷ்டப்படி செய்யாதவன்.** ஒரு மூப்பர் தன் இஷ்டப்படி செய்ய கூடியவராய் இருக்கக் கூடாது. (தீத்து 1:7). சுய நலவாதியாகவோ பிடிவாதக்காரனாகவோ இருக்கக் கூடாது. தனது வழியே சரியென சாதிப்பதைவிட தனது சொந்த ஆசா பாசங்களையும்

விட்டுக் கொடுக்கும் எண்ணமுள்ளவனாயிருக்க வேண்டும். தேவபக்தியற்ற உலகபிரசாரமான மனிதனே தன் இஷ்டப் படி செய்ய முயற்சிப்பான். (2பேதுரு 2:10), ஆனால் ஒரு மூப்பர் அப்படி செய்யக்கூடாது, அவர் ஒன்றையாகிலும் வாதினாலோ வீண் பெருமையினாலோ செய்யாமல், தாழ்மையான சிந்தையிலும், மற்றவர்களை தன்னைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்திலும் செயல் படுகின்றார். தனக்கானவைகளேயல்ல, பிறருக்கானவைகளே-யும் நோக்குகிறார். (பிலிப்பியர் 2:3,4). அவர் முதன்மைத் துவத்தை விரும்பாதவராக இருக்கிறார். (1யோவான் 9). தன் இஷ்டம் போல் செயல்படும் ஒரு அங்கத்தினர் பிராந்-திய சபையையே அழித்து விடுவார். தனக்கு பிரியமில்லா விட்டால் பிறருடன் ஒத்துழைக்க மறுப்பார். முழு சபைக்-குமே தான் மையம் வகிக்க அவர் எண்ணுகிறார். ஆனால் சபையை ஆளும் மூப்பர் இப்படிப்பட்ட நபராயிருக்கக் கூடாது. அவர்களின் ஆளுகை முன்மாதிரியும் தாழ்மை-யும் உள்ளதாயும் பிடிவாதமில்லாதவராயும் இருக்க வேண்-டும். ஒரு சுய தலைவர் தன்னை யாரும் பின்பற்றிவரத்-தக்கதாக செயல்படமாட்டார். இயேசுவானவர் ஒரு பெருந்தலைவராயிருக்கக் காரணம், அவரது சுய நலமற்ற தன்மையும் தாழ்மையுமே தமது அனைத்து அதிகாரத்தி-லும் வல்லமையிலும்கூட, தமது சுய வழியை அவர் தெரிந்து கொள்ளவில்லை. பிரதான மேய்ப்பனுக்கு கீழ் பிற மேய்ப்பர்கள் செயல்படுவதுபோல, மூப்பர்கள் அவரு-டைய முன்மாதிரிகளை பின்பற்ற வேண்டும். தாழ்மையை காட்டிலும் அத்தியாவசியமாய் காணுகின்ற தேவை இன்று வேறேதும் இல்லை. மூப்பர்கள் சுயநலமின்மையும், தாழ்மையுமாகிய வழிகளை காட்டுகின்றனர். அவர்கள் தன் இஷ்டப்படி செயல்படாதவர்கள்.

**(2) நல்லோர்மேல் பிரியமுள்ளவன்.** ஒரு மூப்பர் நல்லவர்களையும் ஒழுக்கமுள்ளவர்களையும் சிநேகிக்கிறார்கள். (தீத்து 1:8). தீமையானவர்களையெல்லாம் அவர் வெறுக்கிறார், (ரோமர் 12:9). நல்லோரை தனது சகமனிதர்களாக அவர் நேசிக்கிறார். ஆகாத சம்பாஷனை (நட்பு) நல்லொழுக்கங்களை கெடுக்கும் (1கொரி. 15:33). நல்ல இடங்களையும், பொருள்களையும் (காரியங்களையும்) நேசிக்கிறார். தீமையாய்த் தோன்றுகிற அனைத்து காரியங்களையும் அவர் விட்டு விலகுகிறார். (1தெசலோனிக்- [redacted] (5:21, 22). நலமானவைகளை பற்றிக்கொள்கிறார். தேவபக்தியிலே அவர் பிரியப்படுகிறார். ஒரு மனிதன் எதில் பிரியப்படுகிறானோ அதைக்கொண்டு அநேக காரியங்களை அறிந்து கொள்ளலாம், ஒரு மனிதனின் நண்பர்களையும், அவன் விரும்பும் நடவடிக்கைகளையும் கொண்டு அந்த மனிதனின் நடத்தைகளை நாம் அறிந்து கொள்ளலாம். மூப்பருக்குரிய தகுதியாம்சம் பெற்ற மனிதன் நல்ல காரியங்கள் மீதும், நல்லோர் மேலும் பிரியங்கொள்ளுகிறான்

**(3) நீதியுள்ளவன்.** ஒரு மூப்பர் மாசற்றவராக அல்லது நீதிமானாக அல்லது நேர்மையுள்ளவராக இருக்கிறார். (தீத்து 1:8). அவரது செயல்பாடுகளெல்லாம் எப்பொழுதும் ஒழுக்கமுள்ளவைகளாயிருக்கின்றன. ஒரு அங்கத்தினர்க்குமேல் இன்னொரு அங்கத்தினர் மீது அவர் பாரபட்சம் காட்டாதவராயிருக்கிறார். அவர் மாசுபடுத்தும் எந்த காரியத்தையும் செய்வதில்லை. அவருடைய தீர்ப்புகளும் தீர்மானங்களும் எப்பொழுதுமே தெளிவாய் இருக்கின்றன. அவர் தனது சிந்தைகளை உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ள-

வைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, புண்ணிம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளின் மீதே வைக்கிறார்கள். மேற்பார்வையிடும் தமது வேலையில் அவரை மாசுறச் செய்யும் எத்தனையோ சோதனைகள் வரலாம். அவபக்தியுள்ள அங்கத்தினர்களோ அல்லது தப்பெண்ணம் கொள்ளும் அங்கத்தினர் அல்லாதவர்களோ அவரது மனதை சாய்ந்துபோக பண்ணலாம். சபைக்கடுத்த காரியங்களில் தனது உறவினர்களையோ நண்பர்களையோ தயவுபற செய்யலாம். அவர் அடிக்கடி சரியானவைகளை அறிந்து கொள்ளவோ அல்லது சரியானவைகளைச் செய்யவோ மிகவும் சிரமம் கொள்ளலாம். ஆனால் அங்கத்தினர்களின் நம்பிக்கைக்குகந்த மனிதர்களாக அவர்கள் இருக்க வேண்டும். எல்லோரையும் அவர் நியாயமாய்நடத்துகிறவர் என்பதை மக்கள் அறிய வேண்டும். நீதியுள்ளவராயிருத்தல் என்பதன் பொருள் இதுதான். '

**(4) பரிசுத்தமுள்ளவன்.** ஒரு மூப்பர் பரிசுத்தமுள்ளவராயிருக்க வேண்டும் (தீத்து 1:8). அவருடைய வாழ்க்கை சுத்தமாயிருக்கிறது. அது ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜீவியம். விசேஷித்த உபயோகத்திற்காக அவரது காலமும் பிரயாசமும் பிரித்தெடுக்கப்பட்டது. அவருடைய சரீரம் தேவனுக்குப் பிரியமான பரிசுத்தமும் ஜீவ பலியாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டது (ரோமர் 12:1). அவருடைய சரீரம் பரிசுத்தாவி வாசம் செய்யும் ஆலயமாய் இருப்பதால் அவர் தமது சரீரத்தை தீய ஒழுக்கங்களால் தீட்டுபடுத்திக் கொள்வதில்லை. (1 கொ. 3:16,17). கண்காணியாக இருப்பதால் அவர் சபையை கிறிஸ்துக்கு, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு

முன் நிறுத்திக் கொள்வதற்கு ஒப்புக்கொடுக்க வகை தேடுகிறார் (எபேசியர் 5:27). அவர் ஜெபத்திலே தமது பரிசுத்த கரங்களை உயர்த்தி ஜெபிக்கிறார் (1 தீமோ. 2:8). தான் பரிசுத்தத்திற்கென்று அழைக்கப்பட்டிருப்பதை அவர் அறிகிறார் (தீமோ. 1:9). அவர் பரிசுத்தமுள்ளவராய் இருப்பதால் மற்றவர்களையும் பரிசுத்தத்திற்கென்று நடத்துகிறார்.

(5) **இச்சையடக்கமுள்ளவர்.** ஒரு மூப்பர் இச்சையடக்கமுள்ளவராக அல்லதுஉணர்ச்சிகளுக்கு இடங்கொடாதவராக இருக்கிறார் (தீத்து 1:8). சுயகட்டுப்பாட்டை அவர் பயிற்சி செய்கிறார். அவர் தன்னை மிஞ்சிய காரியங்களையோ அல்லது மிதமிஞ்சின செயல்களையோ தன்னில் அனுமதிப்பதில்லை. சுவிசேஷமானது நீதியையும், இச்சை யடக்கத்தையும் இனிவரும் நியாயத் தீர்ப்பையும் கொண்டது (அப். 24:25). பந்தய சாலையில் ஓடும் மனிதன் அழிந்து போகிற கிரீடத்திற்காக கட்டுப்பாட்டோடு ஓடுவதைப்போல, ஒரு கிறிஸ்தவனும் அழியாத கிரீடத்தை பெற ஏதுவாக இச்சையடக்கத்தோடே ஓட ஆயத்தப்படுத்த வேண்டும் (1 கொரி. 9:25). மற்றவர்களுக்கு போதிக்கிற நாம் நமக்கு நாமே ஆகாதவர்களாய் போய்விடாதபடிக்கு நமது சரீரங்களை அடக்கி ஒடுக்க வேண்டும் (1 கொரி. 9:27). ஆவியின் கனிகளிலே ஒன்றான இச்சை யடக்கத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்குள் உண்டாக்குவார் (காலத்தியர் 5:23). ஒரு மூப்பர் தேவனுடைய உதவியால் தனது இச்சைகளையும் அதில் உண்டாகும் பசிகளையும் கட்டுப்படுத்துகிறார். அவருடைய சரீரம் கறை யற்றது. கட்டுப்பாட்டை அவர் மீறாதவர். இச்சையடக்க முள்ள மூப்பர்களை பெறுவதில் (சபையில்) எவ்வளவு தூரம் அத்தியாவசியமானது!

**(6) வசனத்தைப் பற்றிக் கொண்டு இருப்பவன்.** *தீத்து 1:9-ல்* ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும், வல்லவனாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும் என போதிக்கிறது. ''போதக சமர்த்தன்'' என்பதற்கான மேலும் சில யோசனைகள் இது. விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் போதிக்கும் திறமை வாய்ந்தவர் இவர். கள்ள போதகத்தை அறிந்து அவர்களை கண்டனம் பண்ணக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய வசனத்துடன் எதிர்ப்பை சந்திக்கும் தகுதி வாய்ந்தவனாகவும், புத்திசொல்லும் ஆவியின் தன்மையை பெற்றவனுமாயிருக்க வேண்டும். ஒரு மூப்பர் ஆரோக்கியமான உபதேசத்திலே நிலையாய் போதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது. *(2 தீமோ. 1:13)*. அனைத்து எதிர்ப்புகளும் சேர்ந்தாலும்-தன்னை அசைக்கமுடியாத அளவு அவர் நிலை பெற்றிருக்க வேண்டும். ஸ்திரமானவராக அதே நேரத்தில் வல்லமையான போதகராயிருக்க வேண்டும். தேவனுடைய வசனத்தை விசுவாசத்தோடே பற்றிக் கொள்ளுதல் என்பது இது தான்.

மூப்பர்களின் தகுதியாம்சங்களைத் குறித்த பட்டியல் இத்துடன் நிறைவு பெறுகிறது. ஆனால் இறுதியான கருத்து *1 தீமோ. 3:10-ல்* போதிக்கப்படுகிறது. அதாவது, மூப்பர்களும் உதவிக்காரர்களும் முதலாவதாக ''சோதிக்கப் பட வேண்டும்'', என்பதை இது காட்டுகிறது. அதாவது எப்படிப்பட்டவர்களிடத்திலும், இந்த தகுதியாம்சங்கள் இருக்க வேண்டும் என்பதை தெளிவாக்குகிறது. தகுதியான மூப்பர் இந்த தகுதியாம்சங்களை பெற்றிருக்கிறார்கள் என்

பதை முழுசபையும் கண்டு அவர்களின் வாழ்க்கையிலே இவைகள் விளங்கப்பண்ணப்பட்ட சாட்சியங்களாக நிருபிக்கப்பட வேண்டும். ஒரு மூப்பர் தனது தகுதியாம்சங்களில் முன்னேறுவதைக்காட்ட நாட்கள் செல்லும் என்பதை இது மறுபடியும் நமக்கு காட்டுகிறது. இந்த தகுதியாம்சங்களோடு அவர் இருக்கிறார் என்பதை சபை பார்த்து திருப்திபடுமளவுக்கு போதிய அவகாசமும் காலமும் இந்த பதவிக்கு தேவை. குறுகிய காலத்தில் ஒரு மனிதன் இந்த தகுதியாம்சங்களை பெற்றுக்கொள்ள முடியாது. அப்படிச்செய்தால் அது மாய்மாலமாகும். மாறாக அவர் அந்த தகுதிகளை விளங்கப்பண்ணி வெளிபடுத்தி காட்டினால், அவர் சோதித்து நிருபிக்கப்பட்டவர். அவைகள் நிச்சயமாகவே உண்மையான தனது நடத்தைகளிலே ஒரு பகுதியாகும் மூப்பராகுவது என்பது சாத்தியமாகுதே, ஆனால் சுலபமானதன்று. இதன் தேவைகளெல்லாம் உள்ளானதேயொழிய புறம்பானதன்று. வெறெந்த பதவியும், அதிகாரியும் இப்படிபட்ட உயர்ஸ்தான நிலையை அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதில்லை. ஏனெனில் இது மற்ற எல்லா அலுவல்களை காட்டிலும் மிக முக்கியமானது.

## கேள்விகள்

1. தன் இஷ்டம்போல் செய்தல் என்பதற்கு வார்த்தைகளில் விளக்கம் கொடுக்கவும்?
2. தன் இஷ்டப்படி செயல்படக்கூடாது என்பதற்கு 4 வசனங்கள் கொடுக்கவும்.
3. ஒரு மூப்பர் எதை பிரியப்பட வேண்டும்? எதை கெடுக்க வேண்டும்?
4. ஒரு மனிதனின் நட்பு அவனைப்பற்றி எதை கூறுகிறது?

5. ''நீதிமான்'' என்பதற்கு 3 அர்த்தங்களை கொடுக்க?
6. ''பரிசுத்தவான்'' என்பதற்கு 3 அர்த்தங்களை கொடுக்க?
7. பரிசுத்தமடைதலுக்கு 6வேதவசனங்களை கொடுக்கவும்
8. இச்சையடக்கம் என்பதற்கு
9. ஒரு மூப்பர் விசுவாசிகளுக்கும்——————க்கும்போதிக்கக்கூடியவராக இருக்கிறார்?
10. ''முன்னதாக'' ம்சாதிக்கப்படுதல் என்றால் என்ன?

## பாடம் 26

### உதவிக்காரர்களின் தகுதியாம்சங்களும் பணிகளும்.

### புறக்குறிப்பு

1. அவர்களின் ஸ்தானம்
2. அவர்களின் பணி
3. அவர்களின் தகுதியாம்சங்கள்

### விவாதம்

**(1) அவர்களின் ஸ்தானம் :-** புதிய ஏற்பாட்டுப் பிராந்திய சபைகளில் மற்றொரு பொறுப்புள்ள இடத்தை வகிப்பவர் உதவிக்காரர்கள் ஆவர். வேதம் மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து பேசின பிறகு உதவிக்காரர்களின் தகுதியாம்சங்களையும் குறித்து பேசுகிறது (1 தீமோத்தேயு 3:8-13) வசனம் 10-ல், ''. . .. உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம்.'' என்று சொல்லுகிறது. எனவே, உதவிக்காரர்கள் என்பவர்கள் கர்த்தருடைய சபையில் ஊழியக்காரர்கள் ஆவர். பிலிப்பியர் 1:1-ல் அப்

போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும். (அல்லது அங்கத்தினர்களுக்கும்) மூப்பர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும்'' தன் நிருபத்தை எழுதுகிறார். பிராந்திய சபையில் தலைமைத்துவத்தில், மூப்பர்களோடு (அல்லது கண்காணிகளோடு) உதவிக்காரர்களும் பொறுப்பேற்று பணியாற்றுகிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. இந்த வசனங்களிலிருந்து. ஒரு பிராந்திய சபையில் மூப்பர்களைப் போன்றே உதவிக்காரர்களின் வித்தியாசப்பணியும் மற்றொரு பொறுப்புள்ள பணி என்பதை அறிகிறோம். (அப்போஸ்தலர் 6:1-6-ல் தேவையுள்ள அங்கத்தினர்களை கவனித்துக் கொள்ளவும், பந்தி விசாரணை செய்யவும் மனிதர்களை தேர்ந்தெடுப்பதைக் காண்கிறோம். அவர்களின் பணி விதவைகளுக்கும் தேவையுடையோருக்கும் ''அன்றாட விசாரணை'' செய்வதாகும் (அப்போஸ்தலர் 6;1). அப்போஸ்தலர்கள் தங்களின் கீழ் ''பந்தி விசாரனை செய்ய'' சிலர் தேவைப்பட்டனர் (அப்போஸ்தலர் 6:2) ''விசாரித்தல்'' ''ஊழியம்'' போன்ற வார்த்தைகள் ''உதவிக்காரன்'' என்ற கிரேக்க வார்த்தையின் ஒரே அர்த்தமே. இதிலிருந்து முதல் பிராந்திய சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த ஏழு பேர் உதவிக்காரர்கள் என்று நமக்கு சொல்லப்படுகிறது. ஆதலால், உதவிக்காரன் என்ற பதவி, கர்த்தருடைய சபையின் பிராந்திய சபையில் தேவையானதும் மூக்கிய மானதுமான ஸ்தானமாகும்.

*(2)* **அவர்களின் பணி** உதவிக்காரர்கள் சபையில் கண்காணிகள் என்று சொல்லப்படுவதே கிடையாது. மூப்பர்களே கண்காணிகள் (1 பேதுரு 5:1,2) அவர்கள் (உதவிக்காரர்கள்) ஒரு போதும் ''நடத்துபவர்களாக'' கூறப்படுவதில்லை, ஆனால் மூப்பர்கள் ''நன்றாய் நடத்துகிறவர்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 தீமோத்-

தேயு 5:17). உதவிக்காரர்களின் ஊழியம் மூப்பர்களின் ஊழியத்திலிருந்து வித்தியாசப்பட்டது. ''உதவிக்காரன்'' என்றால் ''ஊழியம் செய்பவன்'' என்று பொருள் ஆனதால், உதவிக்காரர்கள் சபையின் ''ஊழியர்கள்'' என்று நாம் காணுகிறோம். அவர்கள் பகுதி கண்காணிப்பு அல்ல, உதவி செய்வதே. அன்று முதல்முறையாக உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்டபொழுது அப்போஸ்தலர்களுக்கு உதவியாயிருந்தது போல, இந்நாட்களில் மூப்பர்களுக்கு உதவிக்காரர்கள் உதவியாயிருக்கிறார்கள். அவர்களே இன்று ஆவிக்குரிய கண்காணிகள். பிராந்திய சபையின் ஊழியத்தையும் ஆராதனையையும் நன்றாகவும், வல்லமையாகவும் செய்ய வைப்பதே அவர்களின் பணிகள். தேவைப்படும்போதெல்லாம், மூப்பர்கள் மாத்திரமே செய்ய வேண்டிய முக்கிய பணிகளை இவர்கள் செய்து அவர்களுக்கு உதவுவார்கள், எருசலேம் சபையின் இரண்டு உதவிக்காரர்கள் (ஸ்தேவான், பிலிப்பு) சுவிசேஷகர்களைப் போல பிரசங்கிப்பதில் உதவி செய்தார்கள். ஆனால் இது எல்லா உதவிக்காரர்களுக்கும் பொருந்துவதில்லை. மற்ற மனிதர்கள் செய்ய வேண்டிய பணிகளையும் செய்து அதிகமான பாரத்தை சுமந்து கொண்டிருக்கும் மூப்பர்களுக்கு ஒரு பிராந்திய சபையில் உதவுவது உதவிக்காரரின் கடமை. மூப்பர்களைப்போலவே, ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எப்பொழுதுமே ஒரு ''உதவிக்காரனல்ல'', ஒன்றுக்கு மேற்பட்ட ''உதவிக்காரர்கள்'' இருக்க வேண்டியது அவசியம். எந்த ஒரு குறிப்பிட்ட உதவிக்காரனும் பிற உதவிக்காரனைக்காட்டிலும் வாய்ந்தவனல்ல. அவர்கள் ஒரு பிராந்திய சபையின் தாழ்மையான ஊழியக்காரர்களும் மூப்பர்களின் உதவிக்காரர்களுமே.

(3) **அவர்களின் தகுதியாம்சங்கள்.** கர்த்தருடைய சபையில், தலையாகிய இயேசு பெரிய முன்மாதிரி

யாய் அமைந்திருப்பது போல, அனைத்து அதிகாரிகளும் முன் மாதிரிகளாய் இருக்க வேண்டும். ஆதலால் உதவிக்-காரனாக நியமிக்கப்பட வேண்டிய மனிதன், குறிப்பிட்டத் தக்க தகுதியாம்சங்களை பெற்றிருக்க வேண்டும். எருசலே-மில் நியமிக்கப்பட்ட உதவிக்காரர்கள் ''நற்சாட்சி பெற்ற வர்களும்'' ''பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்களு-மாய்'' இருந்தனர். (அப்போஸ்தலர் 6:5). அவர்கள் விசு-வாசமும் வல்லமையும் நிறைந்தவர்களுமாய் இருந்தார்கள் (அப்போஸ்தலர் 6:4,8). அவர்களின் நற்சாட்சி சபைக்கு புறம்பேயும் உள்ளேயுமிருந்து வந்தவை. அவர்களின்பரிசுத்த வாழ்க்கையிலேயேஅவர்கள் 'பரிசுத்தாவியால்நிறைந்திருந்த தன்மை வெளிப்பட்டது. அவர்களின் செய்கையில் காணப்-பட்ட புத்திக்கூர்மையும், நிதானமான தீர்ப்பும் அவர்களின் ஊழியத்திலே காணப்பட்டது அவர்களின் ''ஞானத்தை'' காட்டியது. அவர்கள் ''விசுவாசத்திலும் வல்லமையிலும்'' அவர்கள் நிறைந்திருந்தமையால் தேவன் பேரில் அவர்க-ளுக்கு பலமான விசுவாசம் இருந்தது. ஆதலால் இந்த விசுவாசம் அவர்களுக்கு வல்லமையும் செல்வாக்கையும் கொண்டு வந்தது. 1 தீமோத்தேயு 3:8-13-ல் ஒரு உதவிக் காரன் செயல் பட வேண்டிய விதம் எப்படி சுறுசுறுப்-புடனும், கூர்மையான வினயத்துடனும் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் சத்தியத்திற்கப்பால், ''இருநாக்கு'' உள்ளவர்களாய் இல்லாமல் சத்தியத்தை மட்டுமே பேசக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். ''மது பான பிரிய்னாயிருக் கக்கூடாது'', ''இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயிருக்கக் கூடாது'', அதாவது மூப்பர்களைக் குறித்து நாம் படித்தபடி மது அருந்துபவர்களாகவோ, இச்சிக்கிறவர்களாகவோ இருக்கக் கூடாது. ''விசுவாசத்-

தின் இரகசியத்தை சுத்த மன சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயிருக்க வேண்டும்'', என்பது சுவிசேஷ போதனையினாலுண்டாகும் சுத்த மனசாட்சியினால் நல்லதும் தூய்மையுமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாகும். மூப்பர்களைப் போலவே உதவிக்காரர்களும் ''முன்னதாக சோதிக்கப்பட்டவர்களும்'', ''குற்றஞ்சாட்டப்படாதவர்களுமாயிருக்க'' வேண்டும். மூப்பர்களைப் போலவே ''ஒரே மனைவியை உடைய புருஷனும், தன் பிள்ளைகளையும் குடும்பத்தையும் நன்றாய் நடத்துகிறவனுமாயிருக்க வேண்டும். அவர்களுடைய மனைவிகள் ''நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களாயுமிருக்க வேண்டும்'' மூப்பர், உதவிக்காரருடைய மனைவிகளாகிய கிறிதவஸ்திரீகள் நல்ல விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டிய முக்கியத்துவத்தை இது காட்டுகிறது. அவர்கள் அலட்சியமான அவதூறு பண்ணுகிறவர்களாயிராமல், தங்கள் பகுதியில் தங்கள் கணவன்மார்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் சிறந்த சிந்தனையுடனும் விசுவாசத்துடனும் செயல்பட வேண்டும். இந்த காரியங்களில் ஒரு மனிதன் பிராந்திய சபைக்கு முன் தன்னை ஆவிக்குரிய முன் மாதிரியாய் காட்டுவானேயாகில் அவன் உதவிக்காரனாய் பணியாற்ற தகுதி பெற்றவன்.

மூப்பர்களில்லாத பிராந்திய சபையில் உதவிக்காரர்கள் நியமிக்கப்படலாமா, என்று கேள்வி எழும்பலாம். பின் வரும் காரணங்களால் இதற்கு பதில் ''கூடாது'' என்பதாகும். (1) **வேதாகமத்தின்படி இதற்கு ஆதாரம் இல்லை.** மாறாக, மூப்பர்களே முன்னதாக நியமிக்கப்பட்டனர். (அப்போஸ்தலர் 14:23), உதவிக்காரர்கள் எப்பொழுதுமே மூப்பர்களுடன் சேர்த்தே பேசப்படுகின்றனர். (பிலிப்பியர் 1:1, 1 தீமோத்தேயு 3:1-13), எருசலேமில்

மட்டும் அப்போஸ்தலர்களே மூப்பர்களின் ஸ்தானத்தில் பணியாற்றினர். (2) உதவிக்காரர்கள் மூப்பர்களுக்கே உதவிக்காரர்களாய் இருப்பதால், மூப்பர்கள் இல்லாத பட்சத்தில் யாருக்கு கீழ் உதவிக்காரர்களாக இருப்பது என்பது இயலாத காரியம். (3) மூப்பர்கள் இல்லாத இடத்தில் அப்படி தவறி உதவிக்காரர்களை நியமித்தால், அவர்கள் சபையை ஆள முயற்சிப்பதுடன் மூப்பர்களின் ஸ்தானத்தையும் பிடித்துக் கொள்வார்கள். இந்தக் காரணங்களுக்காக, மூப்பர்கள் உள்ள இடங்களிலேயே உதவிக்காரர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் உதவிக்காரர்களில் தகுதியுடையோர் இல்லாத காரணத்தால், உதவிக்காரர்கள் இல்லாமலேயே மூப்பர்கள் பணியாற்றலாம். ஏனெனில் மூப்பர்களின் பணி உதவிக்காரர்களுக்கு கீழான ஒன்றல்ல. (அப்போஸ்தலர் 14:23).

## கேள்விகள்

1. உதவிக்காரர்களுக்கென பதவி ஸ்தானம் உண்டா?
2. அப்போஸ்தலர் 6-ம் அதிகாரத்தில் நியமிக்கப்பட்டவர்கள் உதவிக்காரர்களா?
3. உதவிக்காரர்களின் ஊழியம்——————அல்ல, ஆனால் —————— ஆகும்.
4. ஒரு சபையில் ''ஒரு உதவிக்காரனைப்'' பற்றி நாம் படிக்கிறோமா?
5. வேதாகமம் காட்டும் 2 உதவிக்காரர்களைக் கூறுக.
6. மூப்பர்களைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும், உதவிக்காரர்களும் ———— நடத்தும் திறமை பெற்றிருக்க வேண்டும்.
7. முதன் முதலில் நியமிக்கப்பட்ட மூப்பர்கள் எந்த காரியங்களில் நிறைந்திருந்தனர்?

8. உதவிக்காரர்களின் மனைவிக்குரிய நான்கு தகுதி-யாம்சங்களைக் கூறுக.

9. மூப்பர்களில்லாத சபையில் உதவிக்காரர்கள் இருக்க முடியுமா?

10. உதவிக்காரர்களைக் குறித்து பேசுகின்ற 3 வசனப்-பகுதிகளைக் குறிப்பிடுக.

## பாடம் - 27

## அதிகாரிகள் எப்படி தேர்ந்தெடுக்கப்படக் கூடாது

### புறக்குறிப்பு

1. முதல் அங்கத்தினர்
2. அதிக பணக்கார அங்கத்தினர்
3. மூப்பர்களைப் போல் நடந்து கொள்வோர்
4. அரசியல் முறை
5. சுவிசேஷகரின் பிரியத்துக்குள்ளானவர்.
6. முன்மாதிரிக்கு அப்பால் எந்த முறையும்.

### விவாதம்

(1) **முதல் அங்கத்தினர் :** அதிகாரிகள் எப்படி நியமிக்கப்பட வேண்டும் என்பதை தெளிவாக காணுமுன் அவர்கள் எப்படி நியமிக்கப்பட கூடாது என்பதை முதலாவது பார்ப்பது நன்று. மேற்குறிப்பிட்டவைகள் மனிதனு-டைய முறையே ஒழிய தேவனுடைய முறையல்ல. அவைகள் தேவனுடைய திட்டத்தை அழிக்கவும் மாற்றியமைக்கவும் கூடியவை. இப்படிப்பட்ட முறைகளில் ஒன்று, முதல் அங்கத்தினரை நியமிப்பது. அதாவது, இவர்கள் சில வேளைகளில் ''உரிமம் பெற்ற அங்கத்தினர்'' அல்லது அங்கத்-தினர்கள் என்றும் சபையில் அழைக்கப்படுவர். ஊழியர் ஒருவரை தனது கிராமத்துக்கு ஒரு நபர் கொண்டு வந்-தால் தான் மூப்பராவதற்குரிய தகுதி பெற்றவர் என்று

தன்னைக் குறித்து முக்கியமானவராக கருதிக் கொள்வார். ஆனால் நாம் ''உரிமம் பெற்ற அங்கத்தினர்கள்'' என்பவர்களை வேதாகமத்தில் காண முடியாது. சபையில் ஒருவர் முதல் அங்கத்தினராக இருப்பது என்பது ஒருவரை முதன்மையானவராக மாற்றாது. சபையை ஆரம்பிக்கக்கூடிய வசதிகளால் தான் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், அந்த நபர் மூப்பராகவோ உதவிக்காரராகவோ மாற முடியாது.

(2) **அதிக பணக்கார அங்கத்தினர்** ; பெரும்பாலும், ஒரு அங்கத்தினர் அதிக பணத்தையோ செல்வத்தையோ பெற்றிருப்பாரேயானால் அவர் மூப்பராக நியமிக்கப்படுவார். சபை அவரை கனப்படுத்தும்போது, அவர் அதிக காணிக்கைகையை கொடுப்பார் என்று எண்ணுகிறது அவரது உலக வல்லமையைப் பார்த்து அவர்கள் பயப்படலாம். ஆனால் வேதம் அப்படிப்பட்ட ஐசுவரியத்துக்கு எதிராக எச்சரிக்கிறது (1 தீமோத்தேயு 6:17). ஒரு மூப்பர் இச்சிக்கிறவராகவோ இழிவான ஆதாயத்தின் மீது ஆசையுள்ளவராகவோ இருக்கக் கூடாது, (1 தீமோத்தேயு 3:3) இழிவான ஆதாயத்தினிமித்தம் ஒரு மனிதன் மூப்பராக வேண்டுமென முயற்சிக்கக்கூடாது (1 பேதுரு 5:2). உலகப் பிரகாரமான தலைவராயிருப்பதால் ஆவிக்குரிய தலைவராயிருக்க முடியாது, அது தடைகளையே பெரும்பாலும் கொண்டு வரும் உலக செல்வத்தை ஒரு மனிதன் பெற்றிருந்தாலே தேவனுடைய காரியங்களிலும் அவர் செல்வாக்கு பெற்றவர் என்று பொருளல்ல (லூக்கா 12:21). உலக காரியத்திலே ஐசுவரியமாயுள்ள அநேகர், நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாயிருக்கிறார்கள், (வெளிப்படுத்தின விசேஷம் 3:17). உலக செல்வம் ஒருவரை மூப்பராகவோ உதவிக்காரராகவோ தகுதியுள்ளவராக்காது.

**(3) மூப்பர்களைப் போல் நடந்து கொள்வோர் :** அநேகர் தங்களை ,'மூப்பர்களைப் போல் நடந்து கொள்ளும்'' மூப்பர்களாக அழைத்துக் கொள்கின்றனர். தாங்கள் மூப்பர்களாக இல்லாமலேயே தங்களை மூப்பர் களைப் போல பாவித்துக் கொள்வோர் என்பது இதன் பொருள். ஒரு மனிதன் அநேக காலமாக தன்னை மூப்பர் என்று அழைத்துக்கொள்வார், பிறகு முறைப்படி மூப்பர்களை நியமிக்கும்போது, தானும் மூப்பராக நியமிக்கப்பட வேண்டும் என விரும்புவார். ஆனால் இப்படிப் பாவித்துக் கொள்ளும் மூப்பர்கள் தேவனுடைய திட்டத்தை கெடுத்து, புரட்டுகின்றனர். தேவனுடைய சித்தம் அதிகாரிகள் அவர் களின் தகுதியாம்சங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்னும் போது இந்த ''பாவித்துக்கொள்ளும் மூப்பர்கள்'' ஒரு முறைப்படியான மூப்பருக்குரிய ஆசீர்வாதங்களையும், கனத்தையும், எவ்வித தேவையான தகுதி யில்லாமலேயே பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஒருவனை கிறிஸ்தவனாக்குகின்ற கற்பனைக்கு கீழ்படியா மலேயே முயற்சிக்கின்றனர். ஒருவனை கிறிஸ்தவனாக்குகின்ற கற்பனைகளுக்கு கீழ் படியாமலேயே தன்னை கிறிஸ்தவ னாக நடித்துக் கொண்டிருப்பவனைப் போன்றது இது. ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமலேயே தன்னை கிறிஸ்த வன் என்று அழைத்துக் கொண்டிருந்தால், சபை என்ன செய்யும்? அவனை மாய்மாலக்காரன் என்று புறம்பாக்கும் அல்லவா? அதுபோலவேதான், மூப்பர்களாக பாவித்துக் கொள்வோரும் நிராகரிக்கப்பட வேண்டும். பாவித்துக் கொள்ளும் மூப்பர்களை'' நியமிப்பது வசனத்தோடு கூட்டு வதாகும். (வெளிப்படுத்தின விசேஷம் 22:18) அது கிறிஸ் துவின் சுவிசேஷத்தை புரட்டுவதாகும் (கலாத்தியர் 1:7,8:) தேவனுடைய திட்டத்திற்குப் பதில் மனிதனுடைய திட்டத்

தை புகுத்தி, மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் நியமிப்பது தவறானதாகும்.

(4) **அரசியல் முறை** சபையில் அதிகாரிகளை நியமிக்கும் போது சில வேளைகளில் அரசியல் தனம் நுழைகிறது. வசன முறைமைகளோடு, அரசியல் முறைமைகளும் கலக்கப்படுகிறது. கூட்டங்களை, நடத்தியும், வீடுகள் தோறும் சந்தித்தும் வாக்குச் சீட்டுக்களை (ஓட்டுக்களை) சேகரிப்பது போல் சேகரிப்பர். சில சபைகளில் இப்படி வாக்கெடுப்பின் மூலமாக கூட தங்கள் அதிகாரிகளை நியமிக்கின்றன. லஞ்சம் கொடுக்கப்படலாம் அல்லது மிரட்டல்கள் பயன்படுத்தப்படலாம். ஆனால் சபையில் அரசியலுக்கு இடமில்லை. சமூக அரசியல் அதிகாரிகளை நியமிப்பதிலிருந்து ஆவிக்குரிய அதிகாரிகளை நியமிப்பது முற்றிலும் வித்தியாசமானது. மூப்பருக்குரிய தகுதியாம்சங்களை பெற்ற ஒரு நபர் தனது தகுதிகளை பிறருக்கு முன்பாக நிரூபித்து காட்ட முயற்சிக்க வேண்டுவதில்லை. தன்னைக் குறித்து பெருமையாக (மேடைகளில்) பேச வேண்டுவதில்லை. சபை முன் கூட்டியே அவனுடைய ஜீவியத்தையும் அவன் தகுதியுள்ளவன் தானா இல்லையா என்றும் அறிந்திருக்க வேண்டும். மேலும், பிற மனிதனுடன் அவர் போட்டி போடக் கூடியவர் அல்ல, தகுதி பெற்ற அனைத்து மனிதர்களும் நியமிக்கப்பட வேண்டும். ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதால் மற்றவர் தோற்கடிக்கப்படுவது கிடையாது. மூப்பர்கள் ஓட்டெடுப்பினால் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படக் கூடியவர்களல்ல. மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் அரசியல் முறையில் நியமிப்பது தேவனுடைய திட்டமல்ல.

(5) **சுவிசேஷகரின் பிரியத்துக்குள்ளானவர்.** ஒரு பிராந்திய சபையில் ஊழியம் செய்யும் ஒரு பிரசங்கி-

யார் தான் விரும்புகிற மனிதனை மூப்பராக நியமிக்க ஏதுவாக பலமாக சோதிக்கப்படலாம். இந்த மனிதன் சுவி-சேஷகருக்கு அநேக தயவுகளை செய்திருக்கலாம். அந்த மனிதனின் அன்புக்கீடாக பிரசங்கியார் அதற்கு எதையா-கிலும் செய்ய எண்ணலாம். அல்லது சுவிசேஷகன் தான் விரும்புகிறபடி சபையை நடத்த ஏதுவாக தனக்கு "ஆமாம்" போடும் நபர்களை தேர்ந்தெடுக்கலாம். பிரசங்கியார் விரும்புகிறபடியெல்லாம் வளைந்து கொடுத்து போகும் மூப்பர்களை நியமிக்க அவர் ஒப்புக் கொள்ளலாம். இந்த வழிகளிலும், வேறு பலவழிகளிலும் ஒரு மூப்பர் செல்வாக்-கை பெற ஏதுவாக சுவிசேஷகர் சோதிக்கப்படலாம். அப்-படிச் செய்வதால் அவர் (பிரசங்கியார்) தேவனுடைய நியாயமாகிய பாரபட்சமற்றதன்மையை விட்டு வழுவிப்-போகிறார். (அப்போஸ்தலர் 10:34). பிரசங்கியார் பார-பட்சமுள்ளவராகிறார். ஓரவஞ்சனை காட்டும் குற்றத்திற்-குள்ளாகிறார். பிரசங்கியாரை பிரியப்படுத்தி ஒரு மனிதன் சபையில் அதிகாரியாக தகுதி பெற மாட்டார்.

**(6) முன்மாதிரிக்கப்பால் எந்த முறையும்.** மூப்பர்களை நியமிக்கும் விஷயத்தில் உள்ள அனைத்து தவறுகளையும் நேர்மையின்மைகளையும் இங்கே குறிப்-பிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் தேவன் காட்டுகிற முன் மாதிரிகளுக்கப்பால் வேறு எந்த முறையும் தவறானதே. தகுதியாம்சங்களை முற்றிலும் அடிப்படை-யாகக் கொண்டிராமல் எந்த வகையில் அதிகாரிகள் நிய-மிக்கப்பட்டாலும் அது வசனத்திற்கு புறம்பானதும் தவ-றானதுமாகும். ஒரு மனிதனின் கிறிஸ்தவ நடத்தை-களையும் திறமைகளையும் முன் மாதிரியாக கொண்டிராத யோசனைகள் நுழையுமேயானால் அது தவறான அடிப்-படையில் தெரிவு செய்யப்பட்டது. முன் மாதிரியைக்

கொண்டே தேவன் அதிகாரிகளை நியமிக்கிறார். மனிதன் அந்த திட்டத்தை மாற்றாதிருப்பானாக.

## கேள்விகள்

1. ''உரிமம் பெற்ற அங்கத்தினர்கள்'' என்று வேதம் எங்காவது) குறிப்பிடுகிறதா?
2. ''மூப்பர்களைப் போல் பாவித்துக் கொள்ளும்'' நபர்களை வேதம் குறிப்பிடுகிறதா?
3. உலக ஐசுவரியம் ஒருவனை ———— ஐசுவரியனாக்காது.
4. ''பாவித்துக்கொள்ளும் மூப்பர்'' கிறிஸ்தவனைப் போல் பாவித்துக் கொள்ளும் நபரைப் போன்றதுதானா?
5. அரசியல் முறையில் பயன்படுத்தப்படும் 4 காரியங்களை குறிப்பிடுக?
6. சபையில் அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு போட்டியிடுதல் தேவையா?
7. தேவன் பட்சாதாபமுள்ளவரல்ல என்று கூறும் வசனம் எது?
8. தேவன் தேர்ந்தெடுக்கும் முறையை விளக்கப்படுத்தும் ஒரு வார்த்தை.
9. தேவனுடைய திட்டத்திற்கு எதிராக மாற்றியமைப்பதை குறிக்கும் 2 வசனங்களை குறிப்பிடுக.
10. சபையில் நியமிக்கும் அதிகாரிகளுக்கு ஓட்டெடுப்பு தேவைதானா?

# பாடம் - 28

## பரிசுத்தாவியானவர் எப்படி மூப்பர்களை உரு-வாக்குகிறார்.

### புறக்குறிப்பு

1. *சரியான போதனை*
2. *சரியான ஆவல்*
3. *சரியான நிரூபணம்*
4. *மனிதர்களை கவனித்தல்*
5. *நியமித்தல் அல்லது அபிஷேகித்தல்*
6. *சபையின் மூலம் அங்கீகரித்தல்*

### விவாதம்

**(1) சரியான போதனை.** கிறிஸ்தவம் என்பது ஒரு போதிக்கும் மார்க்கம், (யோவான் 6:4 ). விசுவாசி-கள் ஞானஸ்நானத்திற்கு முன்பும், பின்பும் போதிக்கப்-பட்டவர்கள் (மத்தேயு 28:19,20). மூப்பர்களை தேர்ந்-தெடுக்க ஏதுவான தகுதியினிமித்தம் நீண்ட கால கவன-மான போதனை தேவைப்படுகிறது. பரிசுத்தாவியானவர் மனுஷர்களை கண்காணிகளாக்குகிறார். (அப்போஸ்தலர்-20:28). ஆவியின் பட்டயமாகிய வேதத்தின் மூலம் பரி-சுத்த ஆவியானவர் மூப்பர்களை உருவாக்குகிறார் (எபே-சியம் 6:17). சபையில் மனுஷர்களை மூப்பர்களாக உரு-வாக்க ஏதுவான வசனம் போதனைகளை பரிசுத்த ஆவி-யானவர் ஏவியுள்ளார். வேதப்புத்தகம் போதிக்கப்பட்டால் மட்டுமே இந்த முறை பயனுடையதாகும். ஆதலால் ஒவ்-வொரு பிராந்திய சபையிலும், மூப்பர்களை உருவாக்கத் தக்கபோதனைகளை கற்றுக் கொள்வது அவசியமாகும். சபையின் ஆளுகை அமைப்பை குறித்து வேதம் போதிப்-

பதை தீர்க்கமாக புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் அதிகாரிகளின் நிலைமைகளையும் பணி-களையும் அறிந்திருக்க வேண்டும். சரியான ஆளுகை அமைப்புக்கேற்ற அநேக வகுப்புக்கள், தனிப்பட்ட பாடங்கள், பிரசங்கங்கள் போதிக்கப்பட வேண்டும். சரியான போதனையின்றி சரியான ஆளுகை அமைப்பை காண முடியாது. வேத வசனப் போதனையின் ஆரம்பமே, வேத வசனங்களின் ரீதியான ஆளுகை அமைப்பிற்கு அஸ்திபாரமிடும். சரியான சரியான போதனையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் மனுஷர்களை மூப்பராக உருவாக்குகிறார்.

(2) **சரியான ஆவல்.** இரண்டாவது படி, போதிக்கப்பட்டவர்கள் சரியான உத்திரவாதம் காட்ட வேண்டும். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலிப்பியர் 2:13). அங்கத்தினர்களுக்கு தேவனுடைய சித்தம் போதிக்கப்படும்போது, அவருடைய சித்தத்தை செய்கிறதில் மனுஷர்கள் தங்கள் பிரதி பலிப்புகளை ஆவலுடன் காட்ட வேண்டும். மூப்பர்களின் தகுதி-யாம்சங்களின் பட்டியலை ஆரம்பிக்கும்போது, ''கண்-காணிப்பை விரும்புகிறவன், நல்ல வேலையை விரும்பு-கிறான்'' என்று ஆரம்பிக்கிறார். ஒரு பூரணப்பட்ட கிறிஸ்தவனுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்களை அறி-கின்றபோது, அவைகளை அடைய முயற்சிக்கிறான். பலப்பட்ட கிறிஸ்தவனாக இருக்க விரும்பி, அந்த ஆவலை பெருகப்பண்ணுகிறான். மற்றவர்கள் கிறிஸ்துவை பின்-பற்ற உதவும் செய்கிறான். இப்படியாக பரிசுத்த ஆவி-யானவர் கிறிஸ்தவனின் குணாதிசயங்களுக்கு ஏதுவான கனிகளை கொடுக்கிறார். (கலாத்தியர் 5:22,23). ஆனால் பரிசுத்த ஆவியானவர் மட்டும்தான் ஒரு மனிதனுக்குள்

மூப்பராகுவதற்கான ஆவலைத்தூண்டுகிறார் என்பதில்லை. சாத்தானும் மனுஷர்களுக்குள் இப்படிப்பட்ட ஆசையை தூண்டுகிறான், ஆனால் உள் நோக்கமோ வித்தியாசப்பட்டது. மூப்பராவதால், முதன்மை ஸ்தானத்தையும் வீணான சுய மகிமையையும், பண ஆசையையும் பிசாசு அவர்களுக்குள் உண்டு பண்ணுகிறான். ஆதலால், மூப்பராக ஆசைப்படுதெல்லாம் சரியான ஆவல் அல்ல. ஆனால், மனுஷர்கள் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையை தாங்கள் வாழ வேண்டும் என்பதற்காகவும், ஆவியின் கனிகளை தாங்கள் பெற வேண்டும் என்பதற்காகவும் தேடுவாரேயானால், பரிசுத்த ஆவியானவர் அவர்களை மூப்பர்களாக்குவதற்கு ஏதுவாக அவர்களை நடத்துவார். இந்த சரியான ஆவல் மூப்பராவதற்கான முக்கியமானபடியாகும்.

(3) **சரியான நிரூபணம்**. சபையின் அதிகாரிகள் முன்னதாக சோதிக்கப்பட வேண்டும் (1தீமோத்தேயு 3:10). பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை உருவாக்குகின்ற மூன்றாவது வழி இதுவாகும். ஒரு மனிதனின் சரியான புரிந்து கொள்ளுதலும், சரியான ஆவலும் அவனை ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக்க வழி செய்கிறது. அவருடைய வளர்ச்சியும் திறமையும் பிற அங்கத்தினர்களை காணச்செய்கிறது. ஒரு மனிதன் தன் ஜீவியத்தைக் குறித்தும் தன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கும் போது, அவனுடைய முன்னேற்றம் அனைவருக்கும் தெரியவரும். (1தீமோத்தேயு 4:15). ஏற்கெனவே, குறிப்பிட்டதுபோல, இந்த முன்னேற்றத்திற்கு காலம் செல்லும். ஆவிக்குரிய வளர்ச்சி விரைவில் வந்து விடாது. வருஷக்கணக்காக கற்றுக் கொள்வதும், ஜெபமும் வளர்ச்சியும் தேவைப்படுகிறது. கிறிஸ்தவ முதன்மைத்துவத்திற்கும், போதகனுக்கும் ஒருவனைத்தகுதியுள்ளவனாக்க, அதிக

அனுபவம் தேவைப்படுகிறது. இந்நாட்களில்தான், ஒரு மனிதன் தன்னை நிரூபிக்கிறான். அதாவது, மற்றவர்கள் காணும்படியான கிறிஸ்தவ குணாதிசயங்களை விருத்தியடையச் செய்கிறான். இதன் விளைவாக மற்ற அங்கத்தினர்களும், அவருடைய கிறிஸ்தவ தன்மைகளைப் பார்த்து, முதன்மைத்துவத்திற் காண முன் மாதிரியை அறிந்து கொள்வார்கள். ஒரு மனுஷன் மூப்பராவதற்கு ஏற்ற தகுதி யாம்சத்தை காட்ட இதுவே சரியான நிரூபணம்.

(4) **மனிதர்களை கவனித்தல்.** எருசலேமில் அப்போஸ்தலர்கள் முதல் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மனிதர்களைத் ''தெரிந்து கொள்ளும்படி'' கட்டளையிட்டனர் (அப்போஸ்தலர் 6:3). மூப்பர்களைத் தெரிந்தெடுக்க (உருவாக்க) பரிசுத்த ஆவியானவர் கையாளும் நான்காவது வழி இது. பிராந்திய சபை தகுதிவாய்ந்த மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும் சாத்தியக் கூறுகளை எண்ணிப் பார்க்கச் செய்ய வேண்டும். இந்த முயற்சியை பிராந்திய சபைதான் செய்ய வேண்டும் என்பதை கவனியுங்கள். சரியான போதனைக்குப்பின், தகுதி வாய்ந்த வளர்ச்சியடைந்த அதிகாரிகளை நியமிக்க ஏதுவானவர்களை தங்கள் அங்கத்தினர்களில் கண்டுபிடிக்க முழு சபையும் முயற்சிக்க வேண்டும். (அப்போஸ்தலர் 6:5) தங்கள் மத்தியில் தங்களை நிரூபித்து காட்டிய மனிதர்களை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். தாங்கள் சந்தோஷமாய் பின்பற்ற விரும்பும் மனுஷர்களை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். கிறிஸ்துவைப்போல் வாழ ஏதுவாக இன்னும் அதிகமாய் முயற்சித்து, அவர்களே சிலருடைய பெயர்களைச் சொல்லி, அவர்களை பின்பற்ற வேண்டும். இது மிக முக்கியமான படி. இந்த வளர்ச்சியை பரிசுத்த ஆவியானவர் அங்கத்தினர்களின் இருதயங்களிலே

வசனத்தின் மூலமாய் நடப்பிக்கிறார். அவர்களின் தெரிவு தேவனுடைய வசனத்தின் படியானது. தேவனுடைய வசனத்தில் காணும் ஞானத்தை அவர்கள் பின்பற்றுகின்றனர். (கொலோசெயர் 1:9). தேவன் தம் ஞானத்தை அருளும்படி அவர்கள் ஜெபிக்கின்றனர் (யாக்கோபு 1:5). தங்கள் தெரிவு செய்தலை தேவன் தமது கடாட்ஷத்தினால் மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் ஜெபிக்கின்றனர் (அப்போஸ்தலர் 1:24), தேர்ந்தெடுத்தலுக்கென்று அற்புதங்கள் எதுவும் செய்யப்படாமல், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வசனத்தைக் கொண்டு வழி நடத்துகிறார். பெயரிடப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் பெயர்களை கூடும் கட்டத்தில் வாசித்து, பதிவு செய்து அறிவிக்கப்படுகிறது, யாரெல்லாம் தகுதியானவர்களோ அவர்களின் பெயர் பட்டியலை முழு சபையும் அறிந்து கொள்ளும். மனிதர்களை கவனித்தல் என்பதன் பொருள் இதுவே.

**(5) நியமித்தல் அல்லது அபிஷேகித்தல்.** மூப்பர்கள். ''ஏற்படுத்தப்பட வேண்டும்'' என்று வேதம் கூறுகிறது (தீத்து 1:5; அப்போஸ்தலர் 14:23). திருத்திய மொழி பெயர்ப்பில் ''நியமிக்கப்படுதல்'' என்று சொல்லப்படுகிறது. அறிமுகப்படுத்துதல் அல்லது பதவியளித்தல் என்பது இதன் பொருள், ''ஏற்படுத்துதல்'' (அபிஷேகித்தல்) என்ற பதம் பிரிவுக் கூட்டத்தாரிடையே கெடுக்கப்பட்டுள்ளது. அவர்களைப் பொருத்தமட்டில் இதன் பொருள் ஒரு மனிதன் ''அதிகாரத்தை'' பெற அனுமதிக்கப்பட்டவன் என்று பொருள். வேதத்தில் ''உயர் அதிகாரத்தைப் பற்றியோ அல்லது ''உயர் அதிகாரத்திற்கான'' அனுமதியைப் பற்றியோ ஒன்றும் கூறுவதில்லை. புதிய ஏற்பாட்டில் ஏற்படுத்துதல் (அபிஷேகித்தல்) என்ற வார்த்தையின் பொருள், ஒரு பிராந்திய சபை தாங்கள் தேர்ந்தெடுத்த

அதிகாரிகளை சுட்டிக் காட்டுதல் என்று பொருள். மூப்பர்கள் நியமிக்கப்படுவதற்குமுன், சுவிசேஷர்கள் இதைச் செய்தார்கள் (தீத்து 1:5). ஆனால் தெரிவு செய்தலின் உரிமை சுவிசேஷகருடையதல்ல. அவரால் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை, ஏற்படுத்நுதல் என்பதன் பொருள் இது-வன்று. சபையினர் தங்களை நடத்துவதற்காக ஏற்கனவே தெரிவு செய்து வைத்துள்ள நபர்களை ஏற்றுக்கொள்வதற்கு உதவி புரிவதே இவர்களின் கடமை. தகுதி பெற்ற மனிதர்களை கவனித்து பார்த்தபின் பிராந்திய சபை அவர்களை தள்ளுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும், உதவி புரிவதே இவர்களின் கடமை. நேரத்தை ஒதுக்குகிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் நியமிக்கப்படும் மனுசர்களின் வேத ரீதியான தகுதிகளை ஆலோசித்து, மறுபடியும் ஆலோசித்து பார்த்து, ஏற்றுக்கொள்ளுதலையும், ஏற்று கொள்ளாதததையும் தெரிவிக்கலாம், மற்றபடி இதற்கென்று குறிப்பிட்ட முறை எதுவுமில்லை, தேர்தெடுக்கப்பட்ட இந்த நபர்களை ஏற்றுக் கொள்வதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவும், தீர்க்கமாயும் முழுமையுமாய் அறிந்து கொள்ளும்படியாகவும், சில வாரங்களாவது ஆகும். ஆனால் அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், சபையின் சுவிசேஷகாரலோ அல்லது முன்னணி நபர்களோ வெளிப்படையாக சபைக்கு அறிவிக்க வேண்டும். இதுவே மூப்பர்களை நியமிக்கிற அல்லது ஏற்படுத்துகிற விதமாக அறியப்பட்டிருக்கிறது.

**(6) சபையால் ஏற்றுக்கொள்ளப்படுதல்.** பிராந்திய சபை ஆலோசித்து மூப்பர்களை அனுமதியளித்து, நியமனம் செய்த பின், மூப்பர்களை (அதிகாரிகளை) புதிய அதிகாரிகளாக சபை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதலில் உதவிக்காரர்கள் அவர்கள் இவர்கள் மேல் கை-

களை வைத்து ஜெபித்தார்கள். அற்புதம் நிகழும் அந்நாட்களிலே, அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைப்பதன் மூலம் ஆவியின் அற்புத வல்லமைகளை கொடுத்தனர் (அப்போஸ்தலர் 8:18). இன்று அப்போஸ்தலர்களுமில்லை, அற்புதங்களுமில்லாத காரணத்தால், கைகளை மேலே வைத்து ஜெபித்தல் இந்த நோக்கங்களை நிறைவேற்றாது. அந்தியோகியாவிலிருந்த சபை, பர்னப்பா மீதும் சவுல் மீதும் தங்கள் கைகளை வைத்து அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களின் ஒற்றுமைக்கான வாக்குத்தத்தங்களைச் செய்தனர் (அப்போஸ்தலர் 13:1-3). இந்த நோக்கத்திற்காக இன்று கைகளை மேலே வைத்து ஜெபிக்கலாம். சபைக்குமுன் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களை ஏற்றுக்கொள்ளவும், ஒப்புவிக்கவும், இப்படியாக நியமிக்கலாம். (ஆனாலும் இப்படிதான் என்ற அவசியமில்லை.) பொதுப்படையான வழியிலே, சபை, புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரிகளை ஏற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டவும், கீழ்படிதலுக்கும் ஒப்புக்கொடுக்க ஏதுவாக ஜெபிக்க வேண்டும். இந்த ஆராதனை சாதாரணமானதும் அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும். விழா கொண்டாடுவதாலோ, அல்லது அர்த்தமற்ற சடங்காச்சாரங்களாலோ இது கெடுக்கப்படகூடாது. காரணமற்ற வெகுமதிகளும், விருந்துகளும் தேவையற்றது. சபை தனது அதிகாரிகளை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு சாதாரண நேரமே இது.

**கேள்விகள்**

1. பரிசுத்த ஆவியானவர் சபைக்கு. . . . . . . . மூலம் போதிக்கிறார்.

2. ஆசையை உண்டுபண்ணுகிற 2 நபர்கள் யார்?

3. சபை ஒரு மனிதனின் வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்த பின் அவன் . . . . . . . . . .

4. மனிதர்களை தகுதிபடுத்த 4 வது வழி . . . . . . . .

5. இந்த மனிதர்களை ''கவனித்து பார்ப்பது'' யார்?

6. ''ஏற்படுத்துதல்'' (அபிஷேகித்தல்) என்பதற்கு மூன்று வார்த்தைகள் கொடு.

7. பிரசங்கியார் மூலம் மூப்பர்களை நியமிப்பது யார்?

8. நபர்களை ஏற்படுத்துவதற்கு முன் சபை . . . . . . . .

9. அற்புதங்களைக் கொடுக்கத்தக்கதாக இன்று கைகளை மேலே வைத்து ஜெபிக்கலாமா?

10. சபைக்கு முன், ஏற்படுத்தப்பட்ட நபர்களை வெளிப் படையாய் அறிமுகம் செய்ய . . . . . . . . . . . . . .

## பாடம் - 29

## மூப்பர்களுக்கு தேவனின் கட்டளை

### புறக்குறிப்பு

1. மந்தைக்கு மாதிரியாயிருங்கள்
2. மந்தையை போஷித்து காப்பாற்றுங்கள்
3. மந்தையை மேயுங்கள்
4. கண்காணிப்புச் செய்யுங்கள்
5. நன்றாய் நடத்துங்கள் (ஆளுகை செய்யுங்கள்)
6. ஆத்துமாக்கள் நிமித்தம் விழிப்புள்ளவர்களாய் இருங்கள்.

### விவாதம்

மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து படித்த நாம், இப்பொழுது அவர்களின் பணிகளைக் குறித்து படிக்கப் போகிறோம். அவர்களின் கடமைகளை காட்டுகின்ற, தேவன் அவர்களுக்கு கொடுக்கும் கட்டளைகளில் நாம்

காணக்கூடும். மூப்பர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் காண முடியும்.

(1) **மந்தைக்கு மாதிரியாயிருங்கள்** மூப்பர்கள் முன் மாதிரிகளாயிருக்க வேண்டும் என்ற தலைப்பின் கீழ் இந்தப் பாடங்களை நாம் ஏற்கனவே பார்த்து இருந்தாலும், இந்த பேருண்மை மறுபடியும் வலியுறுத்தப்பட வேண்டும். ஒரு மூப்பரின் முன் மாதிரி ஜீவியத்தைக் காட்டிலும், வேறு முக்கியமான பணி எதுவுமில்லை. இந்த அடிப்படையிலேயே எல்லா தகுதியாம்சங்களும் அமைந்து இருக்கின்றன. இதனால்தான் மூப்பர்கள் 1 பேதுரு 5:3ல் "சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகின்றவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரியாகவும் கண்காணிப்பைச் செய்யுங்கள்", என்று கட்டளையிடப்படுகின்றனர். தன்னை பின்பற்றுவோரை வழி நடத்தும் நபர்கள், தங்களை ஆண்டவர்களாக பாவிப்பதால், தேவன் எதைச் செய்யும்படி அவர்களிடத்தில் சொல்லுகிறாரோ அதை அவர்கள் செய்வதில்லை. இராஜாக்கள் தங்கள் பிரஜைகள் மீது தங்கள் எண்ணங்களை பலவந்தமாகதிணிக்கலாம். ஆனால் கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய திட்டத்தை, இப்படிப்பட்ட ஆளுகை முறையால் ஒன்றையும் சாதிக்காது. பின்பற்றுவதிலும் வழி நடத்துவதிலும் தேவனுடைய திட்டமே பெரிதும் உயர்ந்ததுமான திட்டமாகும். அது பலவந்தத்திலே அல்ல, அன்பை அடிப்படையாக்க் கொண்டிருக்கிறது. சரீர பலத்தை இது சார்ந்திராமல், முன்மாதிரியை சார்ந்திருக்கிறது. தங்களை வழி நடத்துபவர்களை பின்பற்றிச் செல்ல ஏதுவானதாகவே தேவனுடைய முதன்மைத்துவ திட்டம் வடிவம் பெற்றிருக்கிறது. இப்படியாக, மூப்பர்கள் முன்பதாக தங்களைக் குறித்தும் பிறகு மந்தையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (அப்போஸ்தலர்

20:28). அங்கத்தினர்கள் சந்தோஷமாய் பின்பற்றி வர ஏதுவாக, இவர்கள் சபைக்கு முன் சரியான முன் மாதிரியைக் காட்ட வேண்டும். மூப்பர்கள் சபைக்கு ஆண்டவர்களாக அல்லாமல், மந்தைக்கு மாதிரிகளாயிருக்க வேண்டும்.

**(2) மந்தையை போஷித்து காப்பாற்றுங்கள்**

மூப்பர்களுக்கான இரண்டாவது கட்டளை "உங்களிலிருக்கிற தேவனுடைய மந்தையை மேயுங்கள்" (1 பேதுரு 5.2) என்பதாகும். மூப்பர்களின் கடமையின் பெரிய பகுதி. சபையை போஷித்தல் அல்லது போதித்தலாகும். கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய வசனம் போஜனமாயிருக்கிறது. அது அவர்களை ஆவிக்குரிய வகையில் கட்டுகிறது. (அப்போஸ்தர் 20:32). புதிதாய் மனமாற்றப்பட்டவர்களின் வளர்ச்சிக்கு ஏதுவான பால் தேவைப்படுகிறது. (1 பேதுரு 2:2:) மற்றவர்களுக்கு நீதியின் வசனங்களிலிருந்து பலமான ஆகாரம் தேவைப்படுகிறது. (எபிரேயர் 5:12-14) இளையவர்களுக்கும் வயதானவர்களுக்கும் ஏற்ற உணவைக்கொடுக்க வல்லவர்களாக மூப்பர்கள் இருக்க வேண்டும். போதக சமர்த்து உள்ளவர்களாக இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:2) ஆனால் அவர்கள், போதிக்கின்ற மற்ற போதகர்களுக்குஉற்சாக மூட்டியும் போதிக்க ஏதுவான உதவிகளைச் செய்தும், இப்படியாக அவர்களை கண்காணிக்க வேண்டும். ஒரு குடும்பத்திற்கு தேவையான மாம்ச உணவைக் கொடுப்பதைக் காட்டிலும் சபைக்கு ஆவிக்குரிய உணவைக் கொடுப்பது மிகவும் வினயமான தொன்றாகும், இதை நன்முறையில் செயலாக்கினால் சபையானது ஆவிக்குரிய முறையில் வளர்ச்சியடையும். ஆனால் மூப்பர்கள் தவறுவார்களேயாகில், சபையானது பலவீனப்பட்டு மரித்தே போகும். சரியான ஆவிக்குரிய ஆராதனையும் கிறிஸ்தவ ஆத்மாக்களுக்கு ஒரு உணவுதான். சிறந்ததும், ஊட்டச்சத்தும் உள்ள ஆராதனை ஒழுங்குகளை மூப்பர்கள் செய்யாத பட்சத்தில், அங்கத்தினர்கள் பலவீனமடைந்து-

ஆவிக்குரிய முறையில் நித்திரையடைவார்கள் (1 கொரிந்தியர் 11:30). ஆதலால் தேவன், நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய உணவை அவருடைய மந்தையாகிய ஆத்துமாக்களுக்கு போஷிக்கும் படி மூப்பர்களுக்கு கட்டளையிடுகிறார்.

(3) **மந்தையை மேயுங்கள்** போஷிப்பதோடு மந்தையை மேய்க்கும்படியும் மூப்பர்கள் கட்டளையிடப்படுகின்றனர். மந்தைக்கு அவர்கள் கண்காணிகளானதால் அவர்கள் ''எச்சரிக்கையாயிருக்க வேண்டும்'' (அப்போஸ்தலர் 20:21), ''மந்தையை மேயுங்கள்'' என்ற இப்பதத்தின் கிரேக்கப் பொருள், ''மந்தையின் மீது ஒரு மேய்ப்பனைப் போல நடந்து கொள்ளுங்கள்'' என்பதாகும். மந்தையை மேயுங்கள் என்பது மந்தையைக் குறித்து ஒரு மிருதுவான கவனம் செலுத்துங்கள் என்பதாகும். வேதாகமம் எழுதப்பட்ட நாட்களிலே, மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளோடே வாழ்ந்தார்கள். அவைகளை தனித்தனியாக ஒவ்வொன்றின் பலவீனங்களையும் அறிந்து ஒவ்வொன்றின் மீதும் அன்பு காட்டுவார்கள். இரவு நேரங்களில் மேய்ப்பன் அவைகளை பாதுகாப்பான் (காவல் புரிவான்) பகல் நேரங்களிலே அவைகளை சரியான பாதையில் நடத்துவான். ஒன்று காணாமல் போனாலும் அதைத்தேடி அலைவான். அவைகளில் ஒன்று வியாதிப்பட்டாலோ அல்லது காயப்பட்டாலோ அதன் புண்ணில் எண்ணெய் தடவி, மருத்துவம் செய்து அதன் மாமூல் ஆரோக்கியத்திற்கு உதவுவான். மேய்ப்பன் எப்பொழுதுமே ஆடுகளுக்கு முன்னே சென்று வழி நடத்துவான். அவன் அவைகளை பின் நின்று விரட்டிச் செல்ல மாட்டான். எப்பொழுதுமே முன்னால் போய், அவைகளை அழைத்து அவைகளுக்கு பாதைகளை காட்டுவான். ஆடுகள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடி-

யால், அவன் தங்களை நேசிக்கிறான் என்பதையும் எப்பொழுதும் நல்லதையே தங்களுக்கு கொடுப்பான் என்பதையும் அறிந்து சந்தோஷமாய் பின்பற்றிச் செல்லும். இந்த வழிகளில் மூப்பர்கள் தேவனுடைய மந்தையை ஆவிக்குரிய முறையில் மேய்க்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினர்களையும் தனிப்பட்ட முறையில் அறிந்து, அவர்களை நேசிக்க வேண்டும். அவர்கள் மந்தையை பாதுகாத்து, வழி நடத்தி, அவர்களுடைய தேவைக்கேற்ற ஆகாரத்தை கொடுக்க வேண்டும், அலைமோதிக்கொண்டிருக்கிறவர்களைத் தேடி, பெலவீனமானவர்களை அவர்கள் கவனிக்க வேண்டும். மூப்பர்கள் எப்பொழுதுமே சபைக்கு முன்னதாக நின்று வழிகாட்ட வேண்டுமேயொழிய, பின்னாக நின்று விரட்டிக்கொண்டிருக்கக் கூடாது. பிராந்திய சபை, அவர்கள் தங்கள் நன்மைக்காகவே அப்படிச்செய்ய சொல்லுகிறார்கள் என்பதை அறிந்து சந்தோஷமாக பின்பற்றி வர ஏதுவாக வழி நடத்த வேண்டும். சங்கீதம் 23-ஐ வாசித்து பார்த்தால், தேவன் எப்படி தமது ஆடுகளை மேய்க்கிறார் என்பதையும், அதன் மூலம் மூப்பர்களும் தங்கள் ஆடுகளை எவ்வளவு அனுசரனையாகவும், நிதானமாகவும் ஆரோக்கியத்துடன் மேய்க்க வேண்டும் என்பதையும் தெளிவு படுத்துகிறார். தேவனுடைய மந்தையை மேய்க்கும் பல மூப்பர்கள் கட்டளையிடப்படுகின்றனர்.

(4) **கண்காணிப்பு செய்யுங்கள்.** 1 பேது 5:2-ல், ''உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல. உற்சாகமனதோடும் கண்காணிப்புச் செய்யுங்கள், என்று மூப்பர்களுக்குச் சொல்லப்படுகிறது. மூப்பர்கள் கண்காணிப்புச் செய்யவும், கண்காணிப்பை சரியான நோக்கோடும், சரியான ஆசியோடும் செய்ய வேண்டும் என்றும இங்கு கட்-

டளையிடப்படுகிறது. ''கண்காணி'' (பிஷப்). ''மேற்பார்வையாளர் (ஓவர்சியர்)'' ஆகிய இந்தப்பெயர்கள், மூப்பர்கள் சபையை கண்காணிப்புச் செய்ய வேண்டியதை காட்டுகிறது. அவர்கள் சபையின் நலனை கவனித்துக்கொள்கிறார்கள். அதன் நடவடிக்கைகளை அவர்கள் கண்காணிக்கின்றனர். கண்காணிப்பு என்றால், ''மேற்பார்வையிடல்'' அல்லது சபையின் ஆவிக்குரிய தேவைகளை கவனித்துக் கொள்ளுதல் என்று பொருள். பரிசுத்த ஆவியானவர், ''சபையின் மேல்'' மூப்பர்களை ''கண்காணிகளாக'' உருவாக்குகிறார். (அப். 20:28). கண்காணிப்பு கட்டாயமாயல்லாது, மனப்பூர்வமாய் இருக்க வேண்டும் அதாவது, மூப்பர்கள் கண்காணிகளாக இருக்க தாங்களே விரும்ப வேண்டுமேயல்லாது அவர்களின் விருப்பத்திற்கெதிராய் கட்டாயப்படுத்தி இருக்கக்கூடாது. அவர்களின் கண்காணிப்பு கட்டாயமாகவோ, பலவந்தமாகவோ இல்லாமல்; அவர்களை பின்பற்றுபவர்கள் மனமுவந்து பின்பற்ற ஏதுவான மாதிரியாக அவர்களின் நடத்துதல் அமையும். மூப்பர்களின் உள்நோக்கம், பணத்திற்காகவோ முதன்மைத்துவத்திற்காகவோ அல்லாமல், தேவனுக்கு கீழ்ப்படியத்தக்க மனப்பூர்வமானதாய் இருக்க வேண்டும். எந்தக் குழுவிலும், மேற்பார்வையாளருக்கு பலமான பொறுப்புக்களுண்டு. ஆனால் பிராந்திய சபைகளின் கண்காணிகளுக்கு எல்லாவற்றையும் விட மிக பலமான பொறுப்புக்கள் உண்டு. மந்தையின் நலனுக்கும் ஊழியத்திற்கும் ஏற்ற பொறுப்புகளை பிரதான மேய்ப்பன் அவர்களுக்கு வைத்திருக்கிறார்; அவர்கள் தங்கள் கடமைகளை பெரிய கவனிப்போடும், சரியான ஆவியோடும், சரியான உள்நோக்கோடும் நிறைவேற்ற வேண்டும். இதுவே சபையின் மேற்பார்வையை செய்தல்.

(5) **நன்றாய் நடத்துங்கள்** (ஆளுகை செய்யுங்கள்). மூப்பர்கள் சபையை நன்றாக நடத்துவதும் (ஆளுகை செய்வதும்) ஒரு கடமையாகும். (1 தீமோ. 5: 17). இந்த வசனம் மேலும், ஆளுகிறவர்கள் "திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்கள்" என்று விளக்கப்படுகிறது. மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து பேசும் போது, "ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" என்றும் வேதம் சொல்லுகிறது (1 தீமோ. 3:5). ஆதலால், நடத்துதல் அல்லது ஆளுகை செய்தல் என்பது, ஒரு தகப்பன் தன் குடும்பத்தைக் குறித்து அக்கரை காட்டுவதைப்போல, ஒரு பிராந்திய சபையை போஷிப்பதிலும், கவனம் செலுத்துவதிலும் இருக்க வேண்டும் என்று பார்த்தோம். நடத்துதல் என்பது சபைக்குமேல் தன்னை (கர்த்தாவாக) ஆண்டவனாக பாவித்துக் கொண்டு ஆளுகை செய்வதன்று (1 பேதுரு 5:3), சபையின் நலன் கருதி அங்கத்தினர்களின் ஆவிக்குரிய காரியங்களை நடத்துகின்ற பொறுப் பேற்றல் என்பது இதன் பொருளாகும். நடத்துன்ர் என்ற பதத்தைசில் மனிதர்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளனர். தனதுப்பிரஜைகளை தனக்கு கீழ் அடிமைபடுத்துகிற இராஜாவைப் பான்றதுதான், நடத்துதல் என்பதும் என அவர்கள் எண்ணுகின்ற சபையை நடத்தும் மூப்பர்களிடத்தில் இது உண்மையானதல்ல. சபையை அவர்கள் நடத்த வேண்டும் என வேதம் சொல்லுவதன் பொருள், சபையின் நடவடிக்கைகளில் அவர்கள் கவனக்குறைவானவர்களாக இருக்கக்கூடாது என்பதுதான். தாங்கள் ஆளுகின்ற அமைப்பிலே பொறுப்புமிக்கவர்களால், முக்கியமான காரியங்களை புறக்கணிக்காதவர்களாயிருக்க வேண்டும். தங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளில், வினயத்தோடும், பொறுப்புணர்வோடும் இருக்கவேண்டும். தங்களுக்கு

கொடுக்கப்பட்ட இந்த கட்டளை மிகவும் கடினமான கட .மையானதால், அவர்கள் ''இரட்டிப்பான கனத்திற்கு'' பாத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். (1 தீமோ. 5:17). மூப்பர்கள் கர்த்தருடைய சபையை இப்படியாக நன்கு நடத்த வேண்டும்.

**6) ஆத்துமாக்கள் நிமித்தம் விழித்திருங்கள்**

''உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களா னபடியால். அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோசத்தோடே அதைச் செய்யும் படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுச்குப் பிரயோஜனமாயிருக்க ம்ாட்டாதே,'' (எபி. 13:7) என்று சொல்லுவதால் நாம் மூப்பர்களுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும். எல்லாவற்றிலும் மிகவும் வினயமான கட்டளையாதெனில், மூப்பர்கள் அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்க வேண்டும். இஸ்ரவேலின் மதிற்சுவற்றின் மேல் காவலில் விழித்து இருந்து, எச்சரிக்கா விட்டால், ஜனங்களின் இரத்தப்பழியை அவர்களின் கைகளில் கேட்கப்படும் என்று சொல்லப்பட்ட மனுபுத்திரரைப் போன்றவர்கள் இவர்கள் (எசேக்கியேல் 3:17-20). ஒருவரின் கையில் ஆத்துமாக்களின் உத்திரவாதம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருப் பதைக் காட்டிலும் தெளிவானது வேறு எது இருக்க முடியும்? ஒரு மூப்பர் ஆத்துமபக்களுக்காக விழித்திருந்தால் மட்டும் போதாது, அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்கு தானே கணக்கு கொடுக்க வேண்டிய வராயுமிருக்கிறார். இந்த விழிப்புணர்வு தொடர்ந்து இருக்க வேண்டிய ஒன்று (1பேதுரு 5:8). ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் கண்ணீரோடே கூட இடைவிடாமல் விழித்திருத்தல் கூட தேவைப்படுகிறது (அப். 20:31). ஒரு மூப்பர் ஆத்துமாக்களுக்காக விழித்து

இருந்து தேவனுக்கு உத்திரவாதம் பண்ண வேண்டியவர்-களாயிருக்கிறார்கள்.

### கேள்விகள்

1. மூப்பர்களின் முன் உதாரணத்திற்கு 2 வசனம் கொடு.
2. ஒரு மூப்பர் மந்தையை போஷித்து, மந்தையை....
3. அங்கத்தினர்களுக்குத் தேவையான 2வகை உணவுகளை குறிப்பிடுக?
4. மந்தையை போஷித்தலும், மேய்த்தலும் ஒன்றா?
5. அரசு அதிகாரிகளைப் போலத்தான் மூப்பர்கள் ஆளு-கின்றனரா?
6. "கண்காணி" என்ற பதம் எந்த 2 வார்த்தைகளை-யுடையது?
7. ஒரு மூப்பர் தனது ............ நடத்துவது போல, சபையை நடத்த வேண்டும்.
8. விழித்திருக்க வேண்டும் என்பதற்கான 4 வசனங்களை குறிப்பிடுக.
9. ஒரு மேய்ப்பன் ஆடுகளை நடத்திச் செல்லும்போது, அவனது இருப்பிடம் எது?
10. கண்காணித்தலுக்கு இன்னொரு வார்த்தையை கொடு.

# பாடம் 50

## சபையின் ஸ்தாபன அமைப்பில் உள்ள ஆபத்தான அறிகுறிகள்

### புறக்குறிப்பு

1. சபைகளுக்கு மேலாக நியமிக்கப்படுகிற எந்த ஸ்தாபனங்களும்.
2. சபைகளுக்குள் ஏற்படுத்தப்படும் எந்த ஸ்தாபனங்களும்.
3. சபையில் புறம்பான அதிகாரிகள்.
4. தன்னாட்சி சபையில் கொண்டுவரும் எந்த மாற்றமும்

### விவாதம்

**1) சபைக்கு மேலாக நியமிக்கப்படுகிற எந்த ஸ்தாபனங்களும்.**

சபையின் ஸ்தாபன அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு குறிப்பிட்ட சில அடையாளங்கள் அல்லது அறிகுறிகள் உண்டு. இவைகள் ஆபத்தான அடையாளங்கள் என்று சொல்லலாம், ஏனெனில் தேவனுடைய திட்டத்தை மாற்றியுள்ளன என்பதன் அறிகுறி. இப்படிப் பட்ட ஸ்தாபன அமைப்புகளை அநேக பிரிவுக் கூட்டங்களிலே காணலாம். பிராந்திய சபைகளைக் காட்டிலும் பெரிதான மத்திய ஸ்தாபன அமைப்புகள் உள்ளன. அநேக சபைகளுக்காக பொதுவான அதிகாரிகளைக் கொண்ட அமைப்பாகும். இந்தப் பெரிய கழகம், பிராந்திய சபைகளுக்கு தீர்மானங்களை எடுக்கின்றன. அது அவைகளின் பிரசங்கியார்களை தேர்ந்தெடுக்கின்றது. அவர்களின் அலுவல்களை நிர்வாகம் செய்கிறது. அவைகளின் வரவு செலவுகளை கணக்கு கேட்கிறது. வேதாகமம் அப்படிப்பட்ட ஸ்தாபன அமைப்பை அனுமதிப்பதில்லை என கிறிஸ்துவின் சபைகள் புரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தேவனு-

டைய மக்களுக்குள்ளாகக்கூட, சில வேளைகளில் இதே பிரகாரமான ஸ்தாபன அமைப்பு நுழைகிறது. உதாரணமாக, அநேக அங்கத்தினர்கள் தங்களுக்குமேலாக ஊழிய ஸ்தாபன அமைப்பிற்கென வேதாகம பயிற்சிக் கல்லூரிகளை விரும்புகின்றனர். அவர்கள் வெள்ளைக்கார சகோதரர்களிடப் பிரசங்கியாரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊதியம் அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால், சபையில் பிரச்சனைகள் எழும்பும்போது அமெரிக்க சகோதரர்கள் என்ன செய்வது என்று சொல்லும்படி கேட்கின்றனர். ஆனால் வேதாகம பள்ளிகளுக்கு சபையின் மேல் எவ்வித அதிகாரமுமில்லை. சபையின் தீர்மானங்களை வெள்ளைக்கார ஊழியர்கள் எடுக்கக் கூடாது. ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் முழுமையான சுதந்திரம் இருக்க வேண்டும். சபைகளுக்கு மேலாக, புறம்பேயான அதிகாரங்களோ ஸ்தாபன அமைம்புகளோ இருக்கக்கூடாது. எந்த ஸ்தாபன அமைப்பும் சபைக்கு மேலான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமேயானால், அது ஆபத்துக்கும், கெடுதலுக்குமான அடையாளம்.

**(2) சபைகளுக்குள் ஏற்படுத்தப்படும் எந்த ஸ்தாபனங்களும்.**

அநேக அங்கத்தினர்கள் நாமகரண (பிரிவு) கூட்டத்திலிருந்து வந்துள்ளமையால், அவர்கள் முன்பிருந்தது போலவே தங்களுக்கென சில ஸ்தாபன அமைப்புகளை விரும்புகின்றனர். அப்படிச் செய்வதற்காக, சபைகளை ஒன்று திரட்டி "சுவிசேஷக் கூட்டங்கள்" என்ற அமைப்பை பயன்படுத்துகின்றனர். அவர்கள் ஒவ்வொரு சபையிலிருந்து பிரதிநிதிகள் அல்லது (கமிட்டி) ஒரு குழுவினரை அனுப்பி பொது ஆலோசனைக் கூட்டத்தை கூட்டுகின்றனர். அவர்கள் அங்கே அதற்கென தலைவர், காரியதரிசி அல்லது பொருளாளரை நியமிக்கின்றனர். ஒவ்வொரு பிராந்திய

சபையிலிருந்தும் அவர்கள் பணத்தை வசூலித்து பொதுக் கருவூலத்தை வைக்கின்றனர். அவர்கள் தங்களை ''கிழக்குப் பகுதி சுவிசேஷக் கூட்டமைப்பு'' என்று தங்களை அழைத்துக் கொள்ளலாம், மாவட்ட ரீதியான குழுக்களை ஏற்படுத்தி பிரிவுக் கூட்டத்தாரை போல மாவட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். இப்படிப்பட்ட ஸ்தாபன அமைப்புகள், மாவட்ட ரீதியான பிரிவுக் கூட்டத்தாரின் கழக அமைப்பிலிருந்து மிகக் கொஞ்சமான வித்தியாசம், அல்லது வித்தியாசமே இல்லாத நிலைமையாகும். சுவிசேஷக் கூட்டங்கள் நன்மையே பயக்கும் என்றாலும், பிரிவுக் கூட்டங்களும் அதைத்தானே செய்கின்றது. இது அவர்களை வசனரீதியானவர்களாக மாற்றாது. சுவிசேஷக் கூட்டமைப்பு என்ற ஸ்தாபன அமைப்புக்கள் வேதாகமத்தின்படி, இல்லை. பிரிவுக் கூட்டத்தாரின் பின்னணியிலே அவைகள் வளர்ந்தவைகள். சபை அங்கத்தினர்கள் பிரிவுக் கூட்டத்திலிருந்து வந்தவர்கள். ஆனால், பிரிவுக் கூட்டத்தார் சபையிலிருந்து வந்தவர்களல்ல. மாற்றங்கள் ஆரம்பத்தில் சிறியவைகளாக இருக்கலாம். ஆனால் நாளடைவில் இப்படிப்பட்ட மாதிரிகள்தான் பெரிய வழுவிப் போதலுக்கு வழி வகுக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட பிராந்திய சபை-சபைகளும் பிரசங்கக் கூட்டங்களை தாங்களாகவே சுவிசேஷத்தை அறிவிக்க ஏதுவாக ஏற்பாடு செய்து கொள்ளலாம். இவைகளின் பயனாக, ஏற்கனவே நடந்த கூட்டங்களின் நல்லக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அபாயத்தை ஏற்படுத்துகிற பாவரீதியான கருத்துக்களை விட்டொழிக்க வேண்டும். இவைகளின் மூலம் சகோதரர்கள் தொடர்ந்து கிறிஸ்தவ ஐக்கியத்தில் நிலைத்திருக்கவும், உபதேசிக்கவும் கூட்டம் நடக்கிற இடத்து சபையை ஊக்கப்படுத்தவும் செய்வார்கள். ஆனால் மாவட்ட ரீதியான பிரதிநிதித்துவம், அதிகாரிகள், பொதுக் கருவூலம் போன்ற

வற்றை ஒழிப்பார்கள். சபைகளுக்கான பொது பொருளாதாரக் கூட்டத்தை அவர்கள் நடத்த மாட்டார்கள். வரவு செலவு கணக்குகளை கேட்பதோ அல்லது பொதுவான பண வசூலையோ அவர்கள் செய்ய மாட்டார்கள். அப்போது அனைத்து நன்மைகளும் நிலைத்திருக்கும், அனைத்து தீமைகளும் ஒய்ந்துபோகும். எல்லாவற்றையும் சோதித்தறிந்து, தீமையாய்த் தோன்றுகிறவைகளை விடுத்து, நன்மையானவைகளைப் பற்றிக் கொள்ளும்படி வேதம் கூறுகிறது. (1 தெசலோனிகேயர் 5 : 21, 22). சுவிசேஷக் கூட்டங்கள் சோதித்து அறியப்பட்டு அதிலுள்ள தீமைகள் புறம்பாக்கப்பட வேண்டும். ஆனால் பிரசங்கக் கூட்டங்கனின் நன்மைகளை பிராந்திய சபைகள் எடுத்துக் கொண்டு அதில் பங்கேற்றவர்கள் தொடர்ந்து கடைபிடிக்க ஏதுவாக்கும். சபைகளின் பொதுவான சுவிசேஷ கூட்டமைப்பு என்ற நிலையில் ஸ்தாபன அமைப்பு செயல் படும்போது, தேவனுடைய வசனத்திலிருந்து விலகிப் போதலின் அபாயத்தையும், பாவத்தையும் சுட்டிக் காட்டுகின்ற அடையாளங்களாக அவைகள் உள்ளன.

(3) சபைகளின் புறம்பான அதிகாரிகள் ஸ்தாபன அமைப்பில் காணுகிற மற்றொரு அபாய அறிகுறி, சபைகளில் புறம்பான அதிகாரிகளைக் கொண்டிருப்பது. இநத அதிகாரிகள் மேலே குறிப்பிட்டபடி சபைகளுக்கு மேலான ஸ்தாபன அமைப்பிலிருந்து அனுப்படுகின்ற அதிகாரிகளாக இருக்கலாம். அல்லது மற்றொரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களாக இருக்கலாம். ஒரு சிறிய பலவீனமான சபைக்கருகில், ஒரு பெரிய, பலமான சபை இருக்குமேயானால், அந்த சபை சிறிய சபையின் மீது ஆட்சி செய்ய முயற்சிக்கலாம். பல வருடங்களான சபை, புதிதாக வந்த சபைகள் மீது, தம் அதிகாரிகளைக் கொண்டு அதிகாரஞ் செலுத்தலாம். இது சரியானது அல்ல. 1 பேதுரு 5:2ல்,

மூப்பர்கள், ''உங்களில் உள்ள மந்தையை மேயுங்கள்'' என்றுதான் சொல்லப்படுகிறார்கள். ஒரு பிராந்திய சபையின் மூப்பர்கள் ''அவர்கள் உள்ள அந்த பிராந்திய சபையை'' மட்டுமேயல்லாது, வேறு எந்த பிராந்திய சபையின் காரியங்களையும் நடத்தும்படி சொல்லப்படவில்லை. (அப்போஸ்தலர் 20 : 28)ல், பரிசுத்த ஆவியானவர் வந்து அவர்களை கண்காணிகளாக வைத்த சபையை மேய்க்க வேண்டும் என்று மூப்பர்களுக்கும் சொல்லப்பட்டது. அந்த மூப்பர்களை, எபேசு சபைக்கு மட்டுமே பரிசுத்த ஆவியானவர் வைத்தார் (அப்போஸ்தலர் 20 : 17). பிற பிராந்திய சபைகளுக்கு இந்த மூப்பர்கள் அக்கரை காட்டக் கூடாது என்பதோ, அல்லது அவர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்பதோ அல்லது அவர்களுடன் ஒத்துழைக்கக் கூடாது என்பதோ இதன் பொருளல்ல. அவர்களுடன் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தின் அவையமாயிருப்பதால், நிச்சயமாக அவர்கள் உதவி செய்யலாம் (எபேசியர் 4:16) ஆனால் இந்த மூப்பர்கள் சபைகளுக்கு மேலான அதிகாரிகளைப் போலல்லாமல், சகோதரர்களைப் போல மட்டுமே உதவி செய்கிறார்கள். அவர்களின் ஆளுகை அவர்களிருக்கும் பிராந்திய சபைக்கு மட்டுமே, ஒவ்வொரு சபையும் தன் சொந்த காரியங்களை கவனித்துக் கொள்கிறது. சபைகளுக்கு புறம்பேயான எவ்வகை அதிகாரிகளை ஒரு பிராந்திய சபை கொண்டிருந்தாலும், அது தேவன் சபைகள் மீது வைத்துள்ள சட்ட திட்டங்களை கெடுக்கிற ஆபத்திற்கு அறிகுறியாகும்.

**(4) தன்னாட்சி சபையில் கொண்டு வரும் எந்த மாற்றமும்,** தேவனுடைய திட்டம் தன்னாட்சி அல்லது சுய ஆளுகை அமைப்பையே குறிப்பவை. ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவுக்குக் கீழ் சுய சார்புடைய

வைகள். வேறு சபையின் ஆளுகைக்கோ அல்லது சபைக்கு மேலான ஆளுகை (ஸ்தாபன) அமைப்பிற்கோ ஒரு பிராந்திய சபை கட்டுப்பட்டதல்ல, வேறு எந்த சபையின் அதிகாரிகளுக்கும் அது கீழானதல்ல ஒவ்வொரு பிராந்திய சபையும், தன் சொந்த தீர்மானங்களை எடுத்துக் கொள்கிறது, தன் சொந்த காரியங்களுக்கு ஏற்பாடு செய்து கொள்கிறது. தனக்கு சுயமான அதிகாரிகளை நியமித்துக் கொள்கிறது, தனக்கு சுயமான பொருளாதாரத்தை அளித்துக் கொள்கிறது. தன் சுய ஆராதனையைச் செய்கிறது. ஒழுங்கற்ற அங்கத்தினர்களை சீர் திருத்திக் கொள்கிறது. இதுவே தேவனுடைய திட்டம் இதுவே வேதம் காட்டும் வழி. வேறு எந்த முறைகளும், ஏற்பாடுகளும் தேவனுடைய அதிகாரத்தை மீறுவதும் தேவனுடைய நோக்கத்தை கெடுப்பதுமாகும். வேதாகம காரியங்களை, வேதம் காட்டும் வழியில் பின்பற்றி, தேவனுடைய காரியங்களை தேவன் காட்டும் பாதையில் செல்ல படுவோமாக. தேவனுடைய திட்டமும், தேவனுடைய வழியும் மிகச் சிறந்தவை.

### கேள்விகள்

1. கெடுதலின் அறிகுறியை ...... என்றழைக்கலாம்.
2. அநேக சபைகள் என்ன அமைப்பை விரும்புகின்றன?
3. பிராந்திய சபைகளின் மீது வெள்ளைக்கார சகோதரனுக்கு அதிகாரமுண்டா?
4. ......... கூட்டத்திலிருந்து வந்த அநேக அங்கத்தினர்கள் தவறான ஸ்தாபன அமைப்பை விரும்புகின்றனர்.
5. சுவிஷேசக் கூட்டமைப்பின் 3 தீமைகளை கூறுக.

7. ஒரு பிராந்திய சபையின் அதிகாரி, மற்றொரு பிராந்திய சபையின் மீது ஆளுகை செய்யலாமா?

8. மந்தையாகிய........மீது மூப்பர்கள் கண்காணிப்புச் செய்கிறார்கள்.

9. பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மூப்பர்களை எத்தனை பிராந்திய சபைகள் மீது கண்காணிகளாக வைக்கிறார்?

10. வசன ரீதியான சபைகளுக்கு 2 வார்த்தைகளில் விளக்கமளிக்கவும்.

**சபையின் ஸ்தாபன அமைப்பில் அபாய அறிகுறிகள்**

1. சபைகளுக்கு மேலாய் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பெறுகிற எந்த ஸ்தாபன அமைப்பும்.

பொதுவான மத்திய ஊழிய அதிகாரிகள்
| | |
சபை சபை சபை

2. பிராந்திய சபைகளில் (நல்ல ஊழியத்தையே செய்ய நியமித்தாலும்) அதிகாரிகள் பொது கருவூலும், மாவட்ட பிரதிநிதிகுழு ஆகியவைகளைக் கொண்ட ஸ்தாமன அமைப்பின் விளைவு

சபை சபை சபை
| | |
பிரதிநிதிகள்-அதிகாரிகள்-கருவூலம்-மாவட்ட அமைப்பு-குழுக்கள்

3. ஒரு சபை, அல்லது அதன் அதிகாரிகள் அல்லது அங்கத்தினர்கள் மற்றொரு சபையின் மீது அதிகாரச் செலுத்த முனையும்போது;

அதிகாரிகள்
|
பலவீனமான சபை பலமான சபை இளம் சபை

4. தேவனின் திட்டப்படி ஒவ்வொரு பிராந்திய தன் சொந்த ஊழியம், தம் சொந்த தீர்மானங்கள், தம் சொந்த அலுவலல்களை கவனித்துக் கொள்ளுதல் இவைகளை மாற்றி அமைக்கும் எந்த செய்கையும்,

| சபை | சபை | சபை |
|---|---|---|
| \| | \| | \| |
| ஊழியம் | தீர்மானம் | அலுவல்கள் |

## பாடம் 31

### சபையின் அரசாங்கம் முதன்முதலில் எப்படி கெடுக்கப்பட்டது

#### புறக்குறிப்பு

1. விலகிப் போதலைக்குறித்து வேதாகமம் முன்னுரைத்தல்.
2. சபைவரலாற்றிலிருந்து பெறுகின்ற பாடங்கள்.
4. உண்மையற்ற மேய்ப்பர்களுக்கு சாயங்கள்.

#### விவாதம்

(1) **விலகிபோதலைக் குறித்து வேதாகமம் முன்னுரைத்தல்.** நமது முதல் பாடத்தில், சபையின் ஸ்தாபன அமைப்பைக் குறித்து நாம் படிக்க வேண்டியதன் காரணங்களில் ஒன்றாக, சபையின் சட்டதிட்டத்திலேயே வழுவிப்போகுதல் ஏற்பட்டது என்று பார்த்தோம். இந்தப் பாடம், இந்த கெடுதல்கள் எப்படி வந்தது என்பலைக் காணப் போகிறோம். முதலாவதாக, விழுந்துபோதல் ஏற்படும் என்று வேதாகமமே முன்னுரைத்தவற்றை காண்போம் அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு மூப்பர்களிடம், கொடிதான ஓநாய்கள் வந்து மந்தையை கெடுக்கும் என்று சொன்னார். இவர்கள் கள்ள போதகர்கள் என்றும், தங்கள்

பக்கமாய் சிலரை அவர்கள் இழுத்துக் கொள்வார்கள் என்றும் சொல்லப்பட்டது (அப்போஸ்தலர் 20:29,30). கள்ளப் போதகர்களால், சபையானது கெடுக்கப்படும் என்பதற்கு இது ஒரு தீர்க்கதரிசனம். பவுல் முக்கியமாக ''உங்களிலும் சிலர் எழும்பி'' மாறுபாடனவைகளை போதிப்பார்கள் என்று சொன்னது முக்கியமானது. அதாவது சபைகளுக்குள்ளிருந்தும், அதன் தலைவர்களுக்குள்ளிருந்துமே வழுவில் போதல் ஆரம்பிக்கும் என்பது இதன் பொருள். 1 தீமோத்தேயு 4:1-4-ல், மனிதர்கள் விசுவாசத்தை விட்டு விலகிப் போவர்கள் என்பதற்கு இது ஒரு தீர்க்கதரிசனம். பவுல் முக்கியமாக ''உங்களிலும் சிலர் எழும்பி'' மாறுபாடனவைகளை போதிப்பார்கள் என்று சொன்னது முக்கியமானது. அதாவது சபைகளுக்குள்ளிருந்தும், அதன் தலைவர்களுக்குள்ளிருந்துமே வழுவில் போதல் ஆரம்பிக்கும் என்பது இதன் பொருள். 1 தீமோத்தேயு 4:1-4-ல் மனிதர்கள் விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள் என்பதற்கு மற்றொரு எச்சரிக்கை மறுபடியும், கள்ளப் போதகர்களாலேயே வழுவிப்போதல் அல்லது வீழ்ந்துபோதல் ஏற்படும் என்று காண்கிறோம். 1 கொரிந்தியர் 1:10-13-ல் கொரிந்து சபையில் பிரிவுகள் ஏற்பட்டிருந்ததை காணுகிறோம். இந்த பிரிவினைகள் கிறிஸ்துவை விடுத்து தங்கள் தலைவர்களை பின்பற்றினதால் ஏற்பட்டதாகும் பிரிவினையும் கெடுதலும் சபையின் முதன்மைத்துவத்தோடு தொடர்புடையவை. மற்றொரு எச்சரிக்கை 1 தெசலோனிக்கேபர் 2:3,4-ல் சொல்லப்பட்டுள்ளது. அதில், விழுந்து போதல் ஏற்பட்டு ''பாவமனுஷன் வெளிப்படுவான்'' என்று சொல்லப்படுகிறது. தேவாலயத்தில் உட்கார்ந்து தேவனைப்போல் தன்னைக் காட்டிக்கொள்பவன் இவன். விழுந்து போதலானது, சிலர் சபைக்குள்ளிருப்போராலும், சிலர் சபைக்குப்புறம்பானவர்களாலும் ஏற்படும். சபையின்

முதன்மைத்துவம் தூய்மையாயிருந்த வரையில், சபை விழுந்து போகவில்லை. ஆனால் மூப்பர்களும், போதர்களும் சபையின் ஸ்தாபன அமைப்பான, தேவனுடைய வசனத்திலிருந்தும் தேவனுடைய திட்டத்திலிருந்தும் வழுவிப்போக ஆரம்பித்தவுடனே கேடுகளும் வர ஆரம்பித்தன. முதன்மையானவர்கள் முதற்கொண்டு விழ்ந்து போவார்கள் என்று வேதாகமம் முன்னுரைத்தது. இன்று பிரிவினைகளால் ஏற்பட்டுள்ள கள்ள உபதேசங்களையும், பயங்கர விளைவுகளையும் காணுகிறோம்.

(2) **சபைவரலாற்றிலிருந்து பெறுகின்ற பாடங்கள்.** ஆசியாவிலிருந்த ஏழு சபைகளின் காட்சிகளுடன் வேதாகமம் முடிகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:2,3). முன்னுரைத்தபடியே இவைகளில் அநேக சபைகள் வழுவிப்போயிருந்தன. வேதம் எழுதி முடிக்கப்பட்ட பின்னதாகவும் கூட, சபைகளைக்குறித்து கற்கும்போது, விழுந்து போதல் எச்சரிக்கப்பட்ட படியே நிறைவேறி வருவதைக் காண்கிறோம். ''கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று'' கிறிஸ்தவர்களை திருப்பி, பிசாசானவன் சபையை கெடுப்பான் என்று வேதம் சொல்லுகிறது. (2 கொரிந்தியர் 11:3). கர்த்தருடைய சபையின் ஸ்தாபன அமைப்பிலே இது உண்மையாகவே நடந்தது. தேவனுடைய எளிமையான திட்டத்தில் மனிதன், திருப்தி அடைவதில்லை. பணத்திற்கும், துன்மைத்துவத்திற்கும் ஆசைப்பட்டு, வேதாகம ஏற்பாடுகளை மாற்றி அவற்றுடன் கூட்டினார்கள். சபையின் ஸ்தாபன அமைப்பில் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட கெடுதல்களின் விளைவாக சபை சரித்திரத்திலிருந்து பின் வரும் வரிசைப் படுத்தப்பட்ட பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். (1) வழுவிப் போதலில் சபையின் அரசாங்க அமைப்பிலிருந்து தான் முதல் விலகுதல் ஏற்பட்டது. முதன்மைத்துவம் தேவனுடைய வழியை விட்டுவிட்டதால்,

அநேக தவறுகள் எளிதாக உள்ள நுழைந்தன. (2) விழுந்து போனவர்களில் அநேகருடைய உள் எண்ணங்களும் நல்லவைகள் தான். அவர்கள் விழுந்துபோகிறோம் என்ற எண்ணமில்லாமல் தான் விழுந்து போனார். ஆளுகை திட்டங்களில் அவர்களின் மாற்றங்கள் நல்லவைகளாகவே இருக்கும் என அவர்கள் நம்பினர். ஆனால் அவர்கள் தேவனுடைய திட்டத்தை மனிதனின் திட்டத்தோடு மரிமாற்றம் செய்தனர். (3) வழுவிப்போன ஆரம்பக்கட்டத்தில் மிகச்சிறிய காரியத்தில்தான். இது வழக்கமாக உண்மையானதே. மனிதன் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தேவனுடைய திட்ட த்திலிருந்து வழுவிப் போகிறான். ஆனால் அதுவழுவிப் போகுதல்தான். வழுவிப்போதல் ஒருமுறை ஆரம்பித்து விட்டால், பிறகு தொடர்ந்து மற்றவர்களும் வழுவிப் போக நேரிடும். ஒரு சிறிய வாசல் திறக்கப்படும்போது, பெரிய ஜனக்கூட்டமே அதனுள் பிரவேசிக்கும். (5) பிற்கால விலகிப்போனதை நியாயப்படுத்த, அநேக தர்க்கங்களை செய்து முந்தின விலகிப்போதலை சுட்டிக்காட்டுகின்றனர். மற்றவர்கள் அப்படிச் செய்தமையால், மனுஷர்கள், அதைக்காட்டிலும் அதிகமாய் அப்படி செய்ய வேண்டிய நிர்பந்தம் என்பர். (6) மிகப்பெரிய மாற்றங்கள் உடனடியாக செய்யப்பட்டவைகளல்ல. ஆனால் படிப்படியாக சிறிய சிறிய மாற்றங்களே கூட்டப்பட்டுவிட்டன. மிகப்பெரிய கெடுதிகள் ஒரே நேரத்தில் சம்பவிப்பவைகளை மனுஷர்கள் பார்க்க முடியும். ஆனால் சிறிய தவறுகளை மனுஷர்கள் வருடக்கணக்காக காணமாட்டார்கள். (7) மூப்பர்களாயிருப்பதில் சம அந்தஸ்தை பெற்று மனுஷன் திருப்தியடைவதில்லை. விரைவில் அவர்கள் "நகர மூப்பர்கள்" என்றும், பிறகு "பிரதான மூப்பர்கள்" என்றும் தேர்ந்தெடுத்துக் கொள்வர். (8) ஒரு சபையில் மட்டும் த்தான் அதிகாரஞ்செலுத்துவதில் மனுசர்கள் திருப்தி படுவ-

தில்லை. விரைவில் அநேக பிராந்திய சபைகளின் கூட்டமைப்பை ஏற்படுத்தி ஒரு மூப்பர்களின் கீழ் ஆள்வதை விரும்புகின்றனர். (9) பலமான சபைகள் சிறியதும், பலவீனமானதுமான சபைகளை ஆளுகை செய்ய விரும்புகின்றனர். (10) கல்விகற்றோர். சபையின் பொதுவான அங்கத்தினர்களுக்கான தீர்மானங்களை எடுக்க விரும்புகின்றனர். (11) தலைவர்கள் சாதாரண அங்கத்தினர்களுக்குமேல் முதன்மைத்துவத்தை விரும்புகின்றனர். ஆதலால் ''உயர்ந்தோர்'' ''தாழ்ந்தோர்'' பாகுபாடுகள் ஆரம்பித்தன. இந்த வார்த்தைகள் வேத வசனங்களில் இல்லை. (12) வேத வசனங்கள் கடினமானவைகள் என்று கருதப்பட்டு, அவைகளை விளக்க கொள்கை புத்தங்கள் எழுதப்பட்டன இந்த கொள்கைப்புத்தகங்கள் வேதத்திற்கு சமமாக மதிப்பிடப்பட்டன. (13) மூப்பர்களின் கூட்டத்தில், அங்கத்தினர்கள் எதை விசுவாசிக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவர்களின் தீர்மானங்களும், கொள்கைகளும் பின்னதாக சபைகளை கட்டுப்படுத்தின. (14) சபை அரசாங்கம் தேச அரசாங்கத்துடன் கலந்தது. இப்படியாக சபை ஆவிக்குரிய ஸ்தானத்தை விட்டு அரசியல் அதிகாரத்தை பெற்றது. அதன்பிறகு அநேக மாறில கெடுதிகள் சபையில் சேர்ந்தன. சபையின் எளிமையான ஸ்தாபன அமைப்பை, இப்படியாகத்தான் பிசாசானவன் சீர்குலைத்தான். வழுவிப்போவார்கள் என்று வேதாகமம் தீர்க்கதரிசனமாக உரைத்தவைகள். நிறைவேறின விதத்தை நாம் பார்த்தோம். பிரிவுக் கூட்டத்தாரின் மத்தியில் இன்றைக்கும் பிரசங்கிக்கும். அநேக தவறான போதனைகளைக்கொண்டு. எப்படி இந்த வீழ்ந்து வீழ்ந்து போதல் அதிகரித்து வருகிறது என்பதை இன்றைக்கும் நாம் காண இயலும்.

(3) **உண்மையற்ற மேய்பர்களுக்கு சாபங்கள்.** முந்தின பாடங்கள் நமக்கு பிரயோஜனமாயிருக்குமானால், சபையை வழிநடத்துபவர்கள் இவைகளை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஆதியிலிருந்த அந்த தலைவர்கள் செய்த தவறுகளை இவர்களும் செய்துவிடக்கூடாது. பழைய ஏற்பாட்டில், ஜனங்களின் உண்மையற்ற மேய்ப்பர்களுக்கு அளிக்கப்பட்ட சில சாபங்களைப் பாருங்கள். இப்படியிருக்க இன்றைக்கு உள்ள மேய்ப்பர்களுக்கு எவ்வளவு பெரிய சாபங்கள் வரும், ''என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச், சிதறடிக்கிற மேய்ப்பர்ளுக்கு ஐயோ ! என்று கர்த்தர் சொல்லுகிறார்.......... நான் உங்கள் பேரில் உங்கள் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரேமியா 23: 1,2). ஸ்திரப்பட்ட முன்னோடிகள், சபையின் வீழ்ச்சியை தடுக்கலாம். பலவீனமான முன்னோடிகள் செய்ய மாட்டார்கள். தேவனுடைய மக்களை வழிநடத்துவோர் மீது தேவன் பலமான பொறுப்புக்களை வைத்திருக்கிறார். ஆனால் உண்மையுள்ள மூப்பர்களுக்கு மகிமையுள்ள ஆசீர்வதங்களையும் வைத்திருக்கிறார். 1பேதுரு5:4, மந்தையை உண்மையாய் கண்காணிப்பு செய்பவர்களுக்கு ஆசீர்வாதங்கள் வாக்குறுதி செய்யப்படுகின்றன. ''பிரதான மேய்ப்பான் வரும்போது, வாடாத மகிமையுள்ள கிரீடத்தை நீங்கள் பெறுவீர்கள். பிரதான மேய்ப்பனும், நமது ஆத்துமாக்களுக்கு கண்காணிப்புமானவர் வெளிப்படும் போது, உண்மையும் நன்மையுமான மூப்பர்கள் எவ்வளவு அருமையான மகிமையுள்ள பிரதி பலனைப் பெறுவர் (1பேதுரு 2:25). வாடாத மகிமையுள்ள கிரீடம் அது.

## கேள்விகள்

1. வழுவிப்போதலைக் குறித்து முன்னுரைத்த 4 வசனங்களைக் கூறு?

2. ................ வழுவிப்போகும்போது, சபையும் வழுவிப்போகும்.

3. பிசாசானவன் மனுஷர்களை கிறிஸ்துவைப்பற்றிய .........: விருந்து திரும்பி சபையைக் கெடுப்பான்.

4. சபையின் அரசாங்கம் விழுந்துபோக ஆரம்பித்தது. .........வர்களிடத்திலிருந்தே

5. வழுவிப்போக ஆரம்பித்த பொழுது ..............

6. ............ களில் அநேகரின் உள்நோக்கம் நல்லவைகளாகத்தான் இருந்தன.

7. ''உயர்ந்தோர்'' ''தாழ்ந்தோர்'' என்பது வேதாகமம் கூறும் வார்த்தைகளா?

8. ......ஆட்சிமுறை......அமைப்பு ஆளுகை முறை-யோடு கலந்தன.

9. ப. ஏற்பாட்டில் எந்த வசனம் உண்மையற்ற மேய்ப்பர்களுக்கு சாபம் கொடுக்கிறது?

10. உண்மையுள்ள மூப்பர்களுக்கு மகிமையுள்ள வாக்குத்தத்தங்களை குறிப்பிடும் வசனப்பகுதி எது?

## பாடம் — 32.

## பொருளாதாரக் கூட்டங்களை நடத்துவது எப்படி?

### விவாதம்

இந்தப்பாடம் ''கிறிஸ்துவின் சபைகளின் அரசாங்கம்'' என்ற கருத்துக்களுடன் முடிவு பெறுகிறது. முடிப்பதற்கு முன், பொருளாதார கூட்டத்தை நடத்துவதற்கு ஏதுவான சில நடைமுறை ஆலோசனைகள்ள இங்கே கொடுக்கப்படுகிறது. அப்படி பட்ட கூட்டங்கள் அநேக நல்ல வழிகளிலே நடத்தப்படுகின்றன. இந்த ஆலோசனைகளை மையக் கருத்துக்களாக மட்டும் கொண்டு எவ்வழியிலும் பொருளாதார கூட்டத்தை நடத்தலாம்.

(1) அனைத்து காரியங்கள் நல்லொழுக்கமாயும் சிரமாயும் செய்யப்பட கடவது (1 கொரி. 14:40). இதற்கு நன்கு திட்டமிடுதல் தேவைப்படுகிறது. வருகின்ற கூட்டத்திற்கு முன் கூட்டியே ஆயத்தப்படவேண்டும். இந்த வசனப்படி நல்லொழுக்கத்தையும் நடத்துகின்ற சிரமத்தையும் காட்டுகின்றது, ஒரு மனிதன் மட்டும் ஒரே நேரத்தில் பேச வேண்டும். நட்பும் மதிப்பும் அனுசரிக்கப்பட வேண்டும். (2) ஒருவரையொருவர் தங்களிலும் மேலானவர்களாக எண்ண வேண்டும். (பிலிப்பியர் 2:3). இது சண்டையிடுதலையும் பிடிவாதங்களையும், கலகங்களையும் தவிர்க்கிறது. ஒத்துழைப்பைக் காட்டும் பொருட்டு ஒவ்வொருவரும் தங்கள் சுற கருத்துக்களை விட்டு, அல்லது தங்கள் தெரிவுகளை விட்டுவிடவேண்டும். (3) எந்த மனிதனும் முதன்மை ஸ்தானத்தை விரும்பாதிருப்பானாக (3 யோவான் 9). எந்த மனிதனும் தன்னை ஒரு பொருட்டாகவோ முக்கியமானவனாகவோ நினையாதிருப்பானாக. பெருமையை விடுத்து, சுய நலத்தையும் மேட்டிமையையும் விடுத்து, மனத்தாழ்மையை எல்லோரும் அணிந்து கொள்ளவேண்டும். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (பேதுரு 5:5) ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து, சபைக்கும் ஊழியம் செய்யவேண்டும். இயேசு சொல்லும் போது, ஊழியம் செய்பவனே தம் பார்வையில் பெரியவனாயிருக்கிறான் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 20:7) சீஷர்களின் கால்களை கழுவினதன் மூலம் அவர் இதை காண்பித்தார் (யோவான் 13:12–15). ஜெபங்கள் அர்த்தமற்ற வீண் அலப்புதல்களாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் பொருளாதாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் போது தான் ஒரு நேர்மையான ஊழியக்காரனு இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே வரவேண்டும். (5) ஒவ்வொரு கூட்டத்தையும் உண்மையான ஜெபத்துடன் ஆரம்பித்து முடிக்க வேண்

டும். முக்கியமான இந்த நேரங்களிலே தீர்மானம் எடுக்க, தேவ ஞானமும் ஒத்தாசையும் அவசியம் தேவைப்படு-கிறது. ஞானத்தை கேட்பவர்களுக்கு கொடுப்பேன் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். (யாக்கோபு 1:5). நமது ஜெபம் அர்த்தமற்ற அலப்புதலாக இருக்கக்கூடாது. ஜெ-பங்கள் அனல்மிக்கதாயும், கேட்கப்படத்தக்கதாயும், தேவ-னுடைய உதவியை நாடி கெஞ்சுவதாயுமிருக்க வேண்டும். (யாகோபு 5:16). (6) ஒவ்வொரு மூப்பரும் அல்லது அங்-கத்தினரும் (மூப்பர் இல்லாவிடில்), தலைவராக மாறிமாறி செயல்பட வேண்டும். இது, ஒரே நபர் நிரந்தர தலைவர் என்ற எண்ணத்தை மாற்றும். விவாதங்களை நடத்த ஏதுவான அனுபவங்களை இது அவர்களுக்கு அனுபவத்தை கொடுக்கும். கலகங்களையும் பொறுமைகளையும் குறைக்-கும். ஒரு மனிதர் நல்ல கூட்டத்தை நடத்த ஏதுவான அறிவையும் பொறுமையையும் அது கொடுக்கும். இதைச் செய்வது சுலபமல்ல. பொருளாதாரக் கூட்டத்தலைவர், தீர்மானம் எடுக்கிற வகையில் மற்றவர்களைக்காட்டிலும் அதிகாரம் பெற்றவரல்ல. கூட்டத்தின் ஒழுங்கை கட்டிக் காப்பது அவரது கடமை. (7) கூட்டத்தின் காரியங்களை ஒருவர் சரியாக பதிவு செய்ய வேண்டும். இந்த வேலையும் கூட ஒருவர் மாறி ஒருவராக நன்றாக செயல்படலாம். அப்படிச் செய்கிற நபர்களும்கூட மற்றவர்களைக் காட்டி-லும் அதிகாரம் பெற்றவரோ முக்கியம் வாய்ந்தவரோ அல்ல. கூட்டத்தில் பேசப்படுபவைகளை அவர் எழுது-வதற்காக மாத்திரம் அமர்த்தப்பட்டவர், அவர் ஒரு அதி-காரியுமல்ல, அவருக்கென்று ஒரு அலுவலகமுமில்லை. ஒவ்வொரு முறையும் கூட்டம் முடியும்பொழுது பதிவு செய்யப்பட்ட குறிப்புகள் வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பிறகு அடுத்தக் கூட்டத்-தின் ஆரம்பித்தில் மறுபடியும் அந்த குறிப்புகள் வாசிக்கப் பட வேண்டும். அனைத்து குறிப்புகளும். ஏதாவதொரு

காரியத்திற்காக திருப்பி பார்க்க ஏதுவாகவும், யாராவது எதையாகிலும் கேள்வி கேட்டாலோ பதில் அளிக்க ஏது-வாகவும் அந்தப் பதிவுகள் பாதுகாக்கப்படவேண்டும். அந்தப்பதிவுல் கலந்து கொண்ட அங்கத்தினர்களின் பட்டி-யல் இருக்க வேண்டும். (8) பொருளாதாரக் கூட்டம் சலிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு நீடிய ஒன்றாக இருக்கக் கூடாது. கூட்டத்திற்குமுன் நன்கு திட்டமிட்டு. ''வெட்டிப் பேச்சுக்கு இடமில்லாமல் செய்ய வேண்டும். நீண்ட நேர கூட்டம் எதிர் காலத்தில் ஒன்றும் செய்யக்கூடாத அளவுக்கு அதன் திட்டத்தையே கொன்று போடும். (9) விவாதங்-களின் ஒவ்வொருவருடைய பேச்சுக்கும் இடமிருக்க வேண்-டும். ஒருவரோ அல்லது குறிப்பிட சிலரோ மாத்திரம் அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது. கூட்டத்-தில் எப்பொழுதுமே கடந்தகால பிரச்சனைகளைக் குறித்து மாத்திரம் பேசப்படாமல், எதிர்காலத்திற்கான திட்ட-மிடுதலாக இருக்க வேண்டும். இந்தக் கூட்டங்கள் உற்-சாகமளிக்கிற வகையில் இருக்க வேண்டுமேயல்லாது, உற்சாகமிழக்கச்செய்யும் வகையில் இருக்கக் கூடாது. பொருளாதாரக் கூட்டம் ஆர்தத்தையும் மனோற்-சாகத்தையும் எழுப்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். சரியாக நடத்தப்படுமாகில் இவைகளைச் செய்யும். அவை களின் நோக்கம், ஒவ்வொரு அங்கத்தினரையும் 'கர்த்தரு-டைய கிரியைகளில் எப்பொழுதும் பெருகிறவர்களாய் ''இருக்கப்பண்ணும். (1கொரி, 15:58). (11) வாக்கெடுப்பு முறை கொண்டுவரப்படக்கூடாது. மாறாக, எல்லா அங்கத் தினரும், ''ஏகமனதும், ஏகயோசனையும் உடையவர்க-ளாய் சீர்பொருந்தும் வரை'' தொடர் விவாதம் நடப்-பிக்கப்படவேண்டும். (1 கொரி. 1:10). ஒரு காரியத்தைக் குறித்து எந்தவித முடிவும் எடுக்க இயலாத பட்சத்தில், சகோதரர்கள் ஒருமித்த கருத்துக்களுக்காக சிந்திக்க ஏது-

வாக சந்தர்ப்பம் கொடுக்கும் வகையில் அத்தீர்மானத்தை ஒத்தி வைக்க வேண்டும். (அப்போஸ்தலர்கள் 4;32). சகோதரர்கள், ஏக சிந்தையும், ஏக அன்பும் ஒருமித்த கருத்துக்களையும் உடையவர்களானால், தீர்மானங்கள் ஏற்புடையதாகும். (பிலிப்பியர் 2:2). சகோதரர்களுக்குள் உண்டாகும். கலகங்கள் (சண்டை சச்சரவுகள்) நமது எதிரிகளின் நகைப்புக்கு ஏதுவுண்டாக்கும். (சங்கீதம் 80;6 எல்லா கிறிஸ்தவர்களும் சகோதரர்களாயிருக்கிறார்கள் ஆதலால் கருத்து வேற்றுபாடுகளை அகற்றி, கலகங்களை நிவர்த்தி செய்ய முடியும் (ஆதியாகமம் 13;8) அவர்கள் ஒத்த கருத்துடன் நடக்ககூடும். (ஆமோஸ் 3:3) தனக்குத் தானே பிரிந்திருக்கிற எந்த வீடும் நிலை பெறாது (மத்தேயு 12;25) சகோதரர்களுக்குள் துர் ஆலோசனையை பிணைக்கும் மனிதனை தேவன் வெறுக்கிறார் நீதிமொழிகள் 6:16,19) எல்லா ஜனங்களுக்கும் மேலாக, கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் அங்கம் வகிக்கும் கிறிஸ்தவ சகோதரர்கள், ஒன்றாக ஒத்துழைக்க வேண்டும் முடியும் (1 கொரி. 12:12,25) (12) கர்த்தருடைய ஊழியத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் செயல்பட ஏதுவாக அவர்களிடம் ஏதாவது பொறுப்புக்களைக் கொடுக்க வேண்டும். இதன் உழைப்பு குறைவாக இருக்கலாம். ஆனால் அது, அங்கத்தினரின் ஆவிக்குரிய பயிற்சிக்கு ஏற்றதாகும். (13) ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்பாகவும், தேவனுடைய ஆவிக்குரிய வீடாகிய சபை கட்டப்படுதலை நோக்கியே இருக்க வேண்டும். அங்கத்தினர்களின் நோக்கம் உலகப் பிரகாரமான கட்டிடத்தையோ அல்லது உலக காரியங்களையோ குறித்த அக்கரை உள்ளவர்களாயிருக்கக் கூடாது. ஒவ்வொரு தீர்மானமும், செயலாக்கமும், சபையை ஆவிக்குரிய வகையில் கட்டுவதற்கேதுவானதாக மட்டுமே இருக்க வேண்டும். பிரிவினைக் கூட்டத்தாரின் திட்டங்கள் பெரிய தொரு

உலகப் பிரகாரமான கட்டிடத்தைக் கட்டக் கூடியதாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய திட்டங்கள் அவரது ஆவிக்குரிய கட்டிடங்களை மட்டுமே கட்டக் கூடியதாக இருக்கிறது. பிறகு மாம்ச பிரகாரமான கட்டிடம் சரியான நேரத்தில் கட்டப்படும் (14) கூட்டத்தின் மிக முக்கியமான நோக்கம் ஊழியத்திற்காக திட்டமிடுதலும், அத்திட்டத்தை செயல்படுத்துவதுமாகும். ஆயத்தமாக்குவதில் தவறுகிற சபை, தவறிப்போக ஆயத்தமாகிறது.

## முடிவுரை

சபையின் நிறுவன அமைப்பைக் குறித்த விவாதம் இங்கு முற்று பெறுகிறது. இன்னும் எவ்வளவோ போதிக்கப்படலாம், சபைக்கு தேவன் வகுத்துள்ள எல்லாத் திட்-டங்களையும் வேதாகமம் பூரணமாய்த் தன்னகத்தே கொண்டிருக்கிறது. வேதாகமத்தின் மூலம் முக்கியமான எல்லா பிரச்சனைகளுக்கும் உள்ள போதனையை, இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொரு வாசகரும், தொடரும் படியாய் நம்பப்படுகின்றனர். மேலும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்க ஏதுவான ஆவலை இந்தப் பாடங்கள் தூண்டியிருக்கும் என்றும் நம்பப்படுகிறது. கிறிஸ்துவின் அனைத்து திட்டங்களும் சரியாக பின்பற்றப் படுமானால், கிறிஸ்துவையே ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆண்டவராக கொண்டு செயல்படுத்தினால், நிச்சயமாக மேற்குறித்தவைகளை செய்ய முடியும். வசன ரீதியான ஸ்தாபன அமைப்பை பெறாதபட்சத்தில், கர்த்தருடைய சபையை மீட்டு அமைக்க முடியாது. ஆனால் இன்று புதிய ஏற்பாட்டுச் சபையின் எளிதான ஸ்தாபன அமைப்பும் முதன்மைத்துவமும் மீட்டு அமைக்கப்படுமானால், உண்-மையான சபையை நனவாக்கிக்காட்ட ஏதுவாக அவை வழிவகுக்கும். சபையானது, நன்கு திட்டமிட்டு வரைவு

பெற்ற அழகான கட்டிடம் போன்றது. இயேசு தாம் வாக்களித்தபடியே தமது சபையை ஸ்தாபித்தார். (மத்தேயு 16 : 18). ஆனால் கள்ளப் போதகர்கள் சபையை அநேக வழிகளிலே விழத்தள்ளினர். (அப்போஸ்தலர் 20: 28-30). இப்போது நாம் அதே வரைபடத்தை (புதிய ஏற்பாட்டில் மாதிரியை) எடுத்துப் பார்த்து அதன்படி ஒவ்வொரு பகுதியையும் சரியாக பின்பற்றி, அதே ஆவிக்குரிய கட்டிடத்தை மீட்டமைக்க வேண்டும். கர்த்தருடைய திட்டத்தை மீண்டும் கண்டுபிடித்து உண்மையான ஸ்தாபன அமைப்பை பெறச் செய்வது, அதன் (ஆவிக்குரிய) கட்டிடத்தை மீட்டு அமைக்கும் முக்கிய பகுதியாக மாறுகிறது. வேதாகம மாதிரி பின்பற்றப்படுமானால், தேவனே அதன் மூலகர்த்தாவாகவும் கட்டுபவராகவும் இருக்கிறார். ஆனால் மனிதர்களின் வழிகள் பின்பற்றப்படுமானால், மனிதர்களுடைய சபையே மிஞ்சும். "கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில், அதை கட்டுபவர்களின் பிரயாசம் விருதா" என்று வேதம் எச்சரிக்கிறது. (சங்கீதம் 127 : 1). ஆனால் கிறிஸ்தவர்களாகிய, நாம், கிறிஸ்துவின் மூலம் தேவனால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், ஜீவனுள்ள கற்களாய், ஆவிக்குரிய கட்டிடமாய் எழும்பி, ஆவிக்குரிய பலிகளை செலுத்துவோமாக.

# பிழைதிருத்தங்கள்

| பக்கம் | வரி | பிழைகள் | திருத்தங்கள் |
|---|---|---|---|
| 14 | 15 | தரிக | தரிசு |
| 14 | 23 | ஸ்தேவன் | ஸ்தேவான் |
| 17 | 25 | குறித்துக் வேதம் | குறித்து வேதம் |
| 18 | 5 | நாமகரணம் என்ற பதத்திற்கு 'ண' சேர்த்துப் படிக்கவும் 'ன' அல்ல. | |
| 23 | 13 | | |
| 37 | 29 | | |
| 46 | 18 | | |
| 68 | 12 | | |
| 88 | 4, 5 | | |
| 19 | 4 | பார்ப்போம் | பார்த்தோம் |
| 23 | 12 | (எப். | (அப். |
| 24 | 26 | குறைதக | குறைக்க |
| 25 | 1 | இருக்கிதார்? | இருக்கிறார் |
| 26 | 15 | (இப். | (அப். |
| 27 | 25 | நியமிக்சப்படுகின்ற | நியமிக்கப்படுகின்ற |
| 27 | கடைசி | இல்லாம்லேயே | இல்லாமலேயே |
| 28 | 24 | சபைகளுக்குப்பால் | சபைகளுக்கப்பால் |
| 29 | 4 | முகவர்களோ | முதல்வர்களோ |
| 39 | 4 | சபைகளுக்ரு | சபைகளுக்கு |
| 39 | 17 | அமப்பே | அமைப்பே |
| 41 | 24 | சபையிவிருந்து | சபையிலிருந்து |
| 44 | 14 | பிராந்தியகள் | பிராந்தியங்கள் |
| 44 | 15 | ஊழிய | ஊழியங்கள் |
| 45 | 20 | சபைகள் | சபைகளை |
| 46 | 10 | கிறிஸ்த்துவம் | கிறிஸ்துவும் |
| 49 | 4 | அடைந்தரலும் | அடைந்தாலும் |
| 51 | 5 | இருக்கமாடடார்கள் | இருக்கமாட்டார்கள் |
| 52 | 15 | சடடசபை | சட்டசபை |

| பக்கம் | வரி | பிழைகள் | திருத்தங்கள் |
|---|---|---|---|
| 52 | 23 | வழங்குசிறது | வழங்குகிறது |
| 55 | 13 | ஏலவந்தம் | பலவந்தம் |
| 59 | 3 | 2 பேதுரு 5:2 பல ஆசை | 1 பேதுரு 5:2 பல ஆசை |
| 60 | 26 | அவிசிவாசிகளாய் பேரன | அவிசுவாசிகளாய்ப் போன |
| 61 | 3 | கெட்டதோவான | கெட்டதோவென் |
| 62 | 26 | யேசுவா | யோசுவா |
| 63 | 8 | கிறிஸ்துவின் ஜுவியம் | கிறிஸ்துவின் ஜீவியம் |
| 63 | 18 | ஜுவியத்தைக், ஜுவியம் | ஜீவியத்தைக், ஜீவியம் |
| 64 | கடைசி | ” | ஜீவியம் |
| 65 | 5 | அவ | அவர் |
| 71 | 1 | கொடுக்கப்படு கிறார்கள் | கொடுக்கிறார்கள் |
| 72 | 28 | தீமோத்தேயுவிக்கு | தீமோத்தேயுவுக்கு |
| 74 | 9 | அதிகள் | அங்கத்தினர்கள் |
| 86 | 18 | அமையப்பு | அமைப்பு |
| 98 | 23 | நியமிப்பத்ால் | நியமிப்பதால் |
| 99 | 1 | தகுதியாம்சங்களை | தகுதியாம்சங்கள் |
| 100 | 23 | தன் உட்படுத்த | தன்னை உட்படுத்த |
| 106 | 13 | நிலைக்கொள்வது | நிலை கொள்வது |
| 106 | 23 | இருபபது | இருப்பது |
| 110 | 13 | உரையாடல்களை | உரையாடல்களை |
| 110 | 24 | இரஷம் | இரசம் |
| 112 | 5 | ஞானத்தால் | ஞானத்தைப் |
| 112 | 27 | குடும்பே | குடும்பமே |
| 118 | 2 | உலகபிரசாரமான | உலகப்பிரகாரமான |
| 118 | 13 | முமுசபைக்குமே | முழு சபைக்குமே |

| பக்கம் | வரி | பிழைகள் | திருத்தங்கள் |
|---|---|---|---|
| 119 | 5 | சம்பாஷனை | சம்பாஷணை |
| 120 | 27 | கிறிஸ்துக்கு | கிறிஸ்துவுக்கு |
| 123 | 24 | எதைபிரியப்பட | எதில்பிரியப்பட |
| 123 | 25 | கெடுக்கவேண்டும் | கொடுக்க வேண்டும் |
| 125 | 15 | பந்தி விசாரனை | பந்தி விசாரணை |
| 125 | 23 | மூக்கிய | முக்கிய |
| 128 | 14 | கிறிதவஸ்திரீகள் | கிறிஸ்தவஸ்திரீகள் |
| 134 | 13 | மழுவிப் போகிறார் | வழுவிப்போகிறார் |
| 136 | 18 | (எபேசியம் 6:17) | (எபேசியர் 6:17) |
| 137 | 9 | சரியான சரியான | சரியான |
| 139 | 6 | மூதன்மைத்துவத்-திற் | முதன்மைத்துவத்-தைக் |
| 140 | 23 | கெடுக்கப்பட்டுள்-ளது | கொடுக்கப்பட்டுள்-ளது |
| 141 | 21 | விசுசேஷகாரலோ | சுவிசேஷகராலோ |
| 142 | 7 | பர்னப்பா | பர்னபா |
| 143 | 7 | இள்று | இன்று |
| 145 | 11 | அப்போஸ்ததர் 20:32 | அப்போஸ்தலர் 20:32 |
| 146 | 6 | போஷிப்பதோர் | போஷிப்பதோடு |
| 147 | கடைசி | ஏன்றும் | என்றும் |
| 149 | 21 | பான்றது தான் | போன்றது தான் |
| 150 | 24 | ஆத்துமபக்களுக்-காக | ஆத்துமாக்களுக்-காக |
| 153 | 5 | சகோதரர்களிடப் | சகோதரர்களிடம் |
| 153 | 15 | அமைம்புகளோ | அமைப்புகளோ |
| 155 | 19 | (1தெசலோனிகியர் 5:21,22) | (தெசலோனிகேயர் 5:21,22) |
| 155 | 16 | வசனைத்திலிருந்து | வசனத்திலிருந்து |
| 155 | 21 | இநத | இந்த |

| பக்கம் | வரி | பிழைகள் | திருத்தங்கள் |
| --- | --- | --- | --- |
| 157 | 16 | பாதையில் செல்ல படுவோமாக | பாதையில் செல்ல பாடு படுவோ மாக |
| 158 | 18 | ஸ்தாமன | ன்தானமான |
| 158 | 23 | அதிகாரச் | அதிகாரஞ் |
| 159 | 3 | அலுவலல்களை | அலுவல்களை |
| 159 | 19 | என்பவைக் | என்பதைக் |
| 160 | 8 | வழுவில் | வழுவிப் |
| 160 | 14 | வழுவிழ் | வழுவிப் |
| 160 | 24 | 1 தெச்சலோனிக் கேபர் 2:3,4 | 1 தெசலோனிக் கேயர் 2:3,4 |
| 161 | 11 | காட்சிகளுடன் | சாட்சிகளுடன் |
| 161 | 23 | துன்மைத்துவத்-திற்கும் | தலைமைத்துவத்-திற்கும் |
| 162 | 1 | உள்ள துழைந்தன | உள்ளே நுழைந்தன |
| 164 | 16 | மாடடாரகள் | மாட்டார்கள் |
| 164 | 22 | மேய்ப்பான் | மேய்ப்பன் |
| 166 | 1 | சிரமாயும் | கிரமமாயும் |
| 166 | 5 | நல்லொருக்கத்கையும் | நல்லொழுக்கத்தையும் |
| 166 | 5 | சிரமத்தையும் | கிரமத்தையும் |
| 166 | 12 | தங்கள் சுறகருத் துக்களை விட்டு அல்லது தங்கன் | தங்கள் பிற கருத் துக்களை விட்டு அல்லது தங்கள் |
| 167 | 22 | மற்றவர்கதளக் | மற்றவர்களைக் |
| 168 | 4 | அந்தப்பதிவுல் | அந்தப் பதிவில் |
| 168 | 19 | ஆர்தத்தையும் | ஆர்வத்தையும் |
| 168 | கடைசி | சருத்துக்கருக்காக | கருத்துக்களுக்காக |